நூலகத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்:இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 22 புதன்கிழமை (06.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 041

# ஆட்சி மாற்றத்துக்கு மக்களைக் கோர கூட்டமைப்பு நேற்று ஏகமனதாக முடிவு

## அதற்காக பொன்சேகாவை ஆதரிக்கவும் தீர்மானம்

கொழும்பு, ஜன. 06

தமது ஆட்சியை நீடிப்பதற்கு மீண்டும் ஆணை தருமாறு தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள கோரிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதற்காக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக இந்தத் தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும்படி தமிழ் மக்க ளைக் கோருவது என்று நேற்று ஏகமனதாக முடிவு செய்தது.

தமிழ்க் கூட்டமைப்பு இன்று காலை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தி அங்கு ஓர் அறிக்கையை வெளியிட்டுத் தனது முடிவை அறிவிக்கும் எனவும் தெரியவந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நேற்றுப் பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள குழுக்களின் அறையில் தொடர்ந்து கூடியது.

பின்னர் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற - அவசரகால நீடிப்புப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்காக உறுப்பினர்கள் தமது கூட்டத்தை இடைநிறுத்தினர்.

மீண்டும் மாலை 5.30 மணிக்கு கொழும்பு மாதிவெலயில் உள்ள எம்.பிக்களின் இல்லத் தொகுதியில் சந்திரநேரு எம்.பியின் வீட்டில் கூட்டம் தொடர்ந்தது.

நேற்றிரவு 9.45 மணிவரை வெகு காரசாரமாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் 18 எம்.பிக்கள் கலந்து கொண்டனர்.

லண்டனில் இருக்கும் ஜெயானந்த மூர்த்தி, சந்திரநேரு, இந்தியாவில் தங்கி நிற்கும் கனகசபை, தடுப்புக்காவலில் உள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## பஸில் ராஜபக்ஷ இன்று யாழ். வருகிறார்



யாழ்ப்பாணம், ஜன. 06

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடமாகாண விஷேட செயலணிக் குழுவின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

இன்று காலையில் கீரிமலை நகுலேஸ்வீரம் சென்று விசேட பூசை ஆராதனையில் கலந்து கொள்வார். (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மயமாக்கலும் காணி அபகரிப்பும் வடக்கு–கிழக்கில் எல்லை மீறிவிட்டன

### நாடாளுமன்றத்தில் சம்பந்தர் நேற்றுக் காட்டம்

கொழும்பு, ஜன. 06

வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் இராணுவ மயமாக்கல் மற்றும் காணி அபகரிப்பு போன்றவற்றிற்கு இடமளிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் தயாரில்லை என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஒரு நாட்டில் அவசரகாலச் சட்டம் அசாதாரண சூழ்நிலையில்தான் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். சாதாரண சட்டம்தான் நாட்டை ஆட்சிசெய்ய வேண்டும். அவசரகாலச்சட்டம் இனியும் ஏன் நீடிக்கப் படுகிறது என்ற காரணத்தை இங்கு விவாதிப்பவர்கள் கூறுவதில்லை.

தற்போது சாதாரண சட்டம் பின்தள்ளப் படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை மீளக்குடியமர்த்த விடாது பொன்சேகாவே தடுத்து வைத்திருந்தார்

### நாடாளுமன்றத்தில் அமைச்சர் ரிஷாத் விளக்கம்



கொழும்பு, ஜன. 06

அகதிகளை மீள்குடியமர்த்தவிடாது அவர்களை முகாம்களில் தடுத்துவைத்திருந்தவர் அப்போதைய படைத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாதான் என்று மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது ஐ.தே.கட்சியின் எம்.பி. ரவி க்ருணாநாயக்க கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாம் இப்போது அகதிகளை மீளக்குடியமர்த்தி வருகின்றோம். இந்த அகதிகளை மீள்குடியமர்த்த விடாது அப்போதைய படைத் தளபதியாகவிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாதான் அகதிகளைத் தடுத்து வைத்திருந்தார்.

அம்மக்களை முகாம்களில் தடுத்து வைத்திருக்குமாறு பொன்சேகா படையினருக்கு உத்தரவிட்டார். அம்பாறை மாவட்ட அகதிகளை மீள்குடியமர்த்துவதற்காக நான் (20ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் கல்வி நிலையங்கள் மூலம் டெங்கு பரவும் ஆபத்து அதிகம்

### எச்சரிக்கையாக நடக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.06

யாழ்.மாவட்டத்தில் தற்போது பரவி வரும் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களில் பெரும்பாலானோர் மாணவர்களே. மாணவர்கள் மத்தியில் இந்நோய் தீவிரமாகப்பரவும் அபாயம் உள்ளது. டெங்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## உடனடி மீட்சி நடவடிக்கை குறித்து பொன்சேகா ஒப்பமிட்டு ஆவணம்

கொழும்பு, ஜனவரி 06

ஜனாதிபதியாகத் தாம் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தற்போது நடைமுறையிலுள்ள அவசரகாலச் சட்டத்தைத் தாம் நீக்குவார் என எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உறுதியளித்துள்ளதுடன் வடக்குக் கிழக்கில் செயற்படும் ஆயுதக் குழுக்களை உடனடியாகக் கலைப்பார் என்றும் தெரிவித்திருக்கின்றாராம்.

சரத் பொன்சேகா தான் கைச்சாத்திட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் கையளித்துள்ள - யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி நிவாரண நடவடிக்கைகள் குறித்த - ஆவணத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

தகுந்த ஆதாரங்களின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் ஒருமாத காலத்திற்குள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது

அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

(17ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு

கொழும்பு, ஜன 06

மேலும் ஒரு மாத காலத்துக்கு அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்டம் 79 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. அதனை எதிர்த்து 18 வாக்குகள் அளிக்கப்பட்டன.

ஆளும்கட்சிக்கு ஆதரவாக 97 வாக்குகள் அளிக்கப்பட்டன. (20ஆம் பக்கம் பார்க்க)

மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2010
இனது விண்ணப்ப முடிவுத் திகதி 09-01-2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது
இத் திட்டத்தில் இணைந்து பட்டதாரியாகும் மாணவர்களுக்கு.....
● கற்கைநெறியில் கட்டணச் சலுகை - ரூபா 10,000 இலிருந்து.....
● வங்கிக் கடன் வசதி
● Microsoft நிறுவனத்தின் சான்றிதழ்களைப் பெறக்கூடிய MCP, MCSA, MCSE இனை குறைந்த கட்டணத்தில் கற்று ஒரே நேரத்தில் 4 பட்டங்களைப் பெறக்கூடிய அரிய வாய்ப்பு!!
● வெளிநாட்டில் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்களில் பங்குபெற்றவும் முடியும்!!!
B.Sc. in Comp. Sci.
B.Sc. in Multimedia
NORTH LANKA IIT
#113, Laxan Plaza,
Navalar Rd.,Jaffna
0213214305
0217390110
0214920779
Is Your Right Choice For Degree Education

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை பாலசுப்பிரமணியம்

( J.P., மல்ரி ஒயில் நிறுவன உரிமையாளர்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் K.K.S. வீதி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாலசுப்பிரமணியம் 03.01.2010 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் மகனும், தாமலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், நளினிஸ்ரீ (U.K), நரேந்திரன் (U.K), ஸ்ரீலலிதாம்பிகை, நரேந்திரதேவ்(U.K), உதயபானு (H.N.Dip.Acc), உருத்திரன் (U.K) ஆகியோரின் தந்தையும், புனிதவதி பரராஜசேகரம் (கனடா), சரஸ்வதி (ஓய்வு பெற்ற பிரதேச சபை செயலாளர், சுன்னாகம்), பாலச்சந்திரன் (செல்வம்), சிவபாக்கியவதி (கனடா), பொன்மலர், தவமலர், சண்முகலிங்கம் (சிறி, கனடா) ஆகியோரின் சகோதரரும், சுதர்சன் (லண்டன்), கணேசமூர்த்தி (கிராம சேவையாளர்), சுதாமதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், சு.நிவாஷன், சு.லக்ஷிகா, ந.அரிசான் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், மற்றும் சொக்கலிங்கம், கந்தசாமி, சிவபாதசுந்தரம், விசுவலிங்கம், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தேவராணி, நாகரட்ணம், சித்தானந்தபவானி, மதனகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2010) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மனைவி,
பிள்ளைகள்.

K.K.S.வீதி,
இணுவில். தொ.பே.:0212226887

### பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்



நவாலியூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் 04.01.2010 திங்கட்கிழமை மாலை 5.30மணியளவில் தனது 42/09, சுவிசுத்தாரா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 இல்லத்தில் இறைபதம் எய்தினார்.

அன்னாரின் புகழுடம்பு அவரது இல்லமாகிய 42/9, சுவிசுத்தாராம வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 இல் மக்களின் இறுதி அஞ்சலிக்காக 05.01.2010 காலை 10.30 மணியிலிருந்து வியாழக்கிழமை 07.01.2010 காலை 7மணிவரை வைக்கப்பட்டிருக்கும். பின்னர் நாளை (07.01.2010) வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து பூந்தண்டிகையில் புகழுடம்பு எடுத்துச் செல்லப்பட்டு சுவிசுத்தாராம வீதி, W.A. சில்வா மாவத்தை High Level வீதி, பார்க் வீதி, பேஸ்லைன் வீதியூடாக பொரளை ஜயரத்ன மலர்ச் சாலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

நாளை வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் பி.ப. 4 மணிவரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று 2.30 மணியளவில் இரங்கல் உரைகள் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் அன்னாரின் புகழுடம்பு தகனஞ்செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/9, சுவிசுத்தாராம வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.

தகவல் :
குடும்பத்தினர்

(C/563727) தொ.பே: 0112365063

### கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், மலேரியா தடுப்பு சுகாதார பரிசோதகர்)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், திலகவாசம், தபாலக வீதியை நிரந்தர வதிவிடமாகவும், கல்லடி வீதி, சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சபாரத்தினம் அவர்கள் நேற்று (05.01.2010) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக்கணவரும், இந்திரா, சந்திரா(U.K), வசுந்தரா(Germany), யசோதரா (ஆசிரியர்- பதுளை மகளிர் மகாவித்தியாலயம்), சுமித்திரா (Canada), நரேந்திரன்(முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வியாசர் (U.K), சிவசோதி(Germany), விவேகானந்தன் (பதுளை), பத்மலிங்கம்(Canada), ரஞ்சினி(ஆசிரியர், யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலன் (பேராதனைப் பல்கலைக் கழகம்), ஜீவிகா(பேராதனைப் பல்கலைக் கழகம்), சிந்துஜா(U.K),அபிராமி(கனடா), தாரணி(கனடா), ஆதவன் (கனடா), சரண்ஜா(யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), திலீபன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

தகவல் :
ச.நரேந்திரன் (மகன்)

## மஹஜனசம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.06

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2195ஆவது நேற்றைய சீட்டிழுப்பில் "T" என்ற ஆங்கில எழுத்தும் இடமிருந்து வலமாக 2/0/4/5/7/7 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்திற்குரியவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. இந்த ஒழுங்கில் 2/0/4/5/7/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இரண்டு பேருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/4/5/7/7 என்ற இலக்கமுடைய சீட்டுக் களை வைத்திருக்கும் 16பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கும்.

4/5/7/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 146பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/7/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1520 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

7/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15175பேருக்கு ஐந்தாம் பரிசாக தலா நூறு ரூபாய் கிடைக்கும்.

7என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 150310 பேருக்குத் தலா இருபது ரூபாய் கிடைக்கும்.

வலமிருந்து இடமான வடிவமைப்பில் 2/0/4/5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபாய் கிடைக்கவுள்ளது.

2/0/4/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 143பேருக்கு எட்டாம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

2/0/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1514 பேருக்கு ஒன்பதாம் பரிசாக தலா நூறு ரூபாய் கிடைக்கவுள்ளது.

2/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15016 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபாய் கிடைக்கும்.

இந்த ஒழுங்கில் T என்ற எழுத்தை உடைய சீட்டை வைத்திருக்கும் 60191 பேருக்கு பதினோராம் பரிசாக தலா இருபதுரூபாய் கிடைக்கும். (10)

## வாக்களிப்பு எழுதுநருக்கு பயிற்சி வகுப்பு

ஜனாதிபதி தேர்தல் கடமையில் ஈடுபடும் வாக்களிப்பு நிலைய எழுதுநருக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை வியாழக்கிழமை பின்வரும் மூன்று இடங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலகக் கேட்போர் கூடம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வேலணை பிரதேச செயலக கேட்போர் கூடம், ஆகிய இடங்களில் இந்தப்பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

## நகரில் நாளை மாலை நடன நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். முதலீட்டாளர் மாநாட்டின் இறுதி நிகழ்வை ஒட்டி நாளை வியாழக்கிழமை 6 மணிக்கு பல்லின கலாசார நடனம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வை சமாதானத்திற்கான வர்த்தகக் கூட்டமைப்பு யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. (ஒ - 6)

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.6

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி நடத்தும் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான கௌரவிப்பு விழா, நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் வங்கி முகாமையாளர் ந. பசீரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.சரவணபவனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்விப்பணிப் பணிமனைக் கணக்காளர் திருமதி சு. ஆனந்தகிருஷ்ணனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ - 6)


## சமையலாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள றெஸ்ரோரன்ட்க்கு அனுபவமுள்ள சமையலாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு 0776048921



## CAT , ACCA

புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.
தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளமுடியும்
பதிவு செய்யும் இறுதித்திகதி 10.01.2010
விரிவுரைகள் ஆரம்பம் 15.01.2010

தொடர்புகளுக்கு :
Jaffna technical Institute (JTI)
No,46, Clock-Tower Road, Jaffna. (Near Beacon Tution)
T.P : 0215670345 E-Mail : accajaffna @ gmail.com
வார நாள்கள் : 9.00 -12.30 வார இறுதி நாள்கள்: 9.00 - 3.30


## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை மோகனநாதன்

(அதிபர்தரம் 1,யா/அராலி இந்துக்கல்லூரி)

கலைநகர், வட்டு. வடக்கு, சித்தன் கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மோகனநாதன் அவர்கள் 03.01.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.10.2010 வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி, வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், கல்விச் சமூகத்தினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி ஆழ்ந்த துயரத் துடன் வேண்டிக்கொள்கின்றோம்.

கலைநகர்,
வட்டு வடக்கு, சித்தன்கேணி,
தொ.பே.எண் :0213002066

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர்
ச.நரேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி. (சி/563929)

நலன்புரிச் சங்க
அங்கத்தவர்கள்

## கண்ணீர் அஞ்சலி



அமரர் சின்னத்துரை பாலசுப்ரமணியம் J.P
(மல்ரி ஒயில் உரிமையாளர், ஓய்வு பெற்ற சிறாப்பர் )

உள்ளத்தில் உறைந்து விட்ட உத்தமரே
கள்ளம் இல்லாக் கனிவானவரே
அன்புடன் எம்மை எல்லாம் ஆதரித்தீர்
பண்புகள் கூறி மக்களை பாரினில் உயர வைத்தீர்
இடையிலே எம்மை விட்டு எங்குதான் சென்றீர்
விடைதனைக் கூறாது விரைந்து தான் சென்றீரோ.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!!!

இணுவில் மேற்கு,இணுவில். (93464)

சி.பாலச்சந்திரன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர்
கே. எஸ் நரேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/563926) சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

எமது பாடசாலை அதிபர்
திரு செல்லையா முரளிமோகன் அவர்களின் அன்பு மாமனார்

### அமரர் முத்துக்குமாரு தியாகராஜா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், துறைமுக அதிகாரசபை )

அவர்கள் 29.12.2009 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

யா/ உடுவில் அ.மி.த.க பாடசாலை ஆசிரியர்களும்
அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களும்

(93468)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் மாணவன்

### செல்வன் வனமோகன் கோபிராஜ் (தரம் 03)

04.01.2010 அன்று காலமானார். அவருக்கு கல்லூரிச் சமூகம் சார்பில் இதய அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கூட்டுறவு நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(சி/563917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கூட்டமைப்பின் இந்த முடிவுக்கு அரசுத் தலைமையே காரணம்!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்ன முடிவு எடுக்கும் என்பது நேற்று இப்பத்தி எழுதப் படும் வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

எது, எப்படியென்றாலும் தமிழ்க் கூட்டமைப்பின் முடிவு ஆட்சிப் பீடத்தில் இருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சார்பானதாக அமையமாட்டாது என்பதை மட்டும் உறுதிப்படுத்த முடிந்தது.

இந்தத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த விடயத்தில் கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கு இடையே நேற்றுப் பிற்பகல் வரை கருத்து முரண்பாடுகளும், அபிப்பிராய பேதங்களும் நீடிக்கவே செய்தன. எனினும் ஆட்சிப் பீடத்தில் இருப்பவரை ஆதரிப்பது என்ற முடிவை எடுப்பதில்லை என்பதில் மட்டும் அவர்களிடையே பெரும்பாலும் ஓரளவுக்கு ஒத்த கருத்தே நிலவியதாகக் கூறப்படுகின்றது. அரசுத் தரப்புக்கு - ஆட்சியாளருக்கு - வக்காலத்து வாங்கும் பிரசாரத்தைத் தமிழ்க் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட எம்.பியான சிவநாதன் கிஷோர் நேற்று மதியம் வரை தாம் தனியனாக ஏனைய தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களைத் தனித் தனியாகச் சந்தித்து முன்னெடுத்தார். எனினும், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அக்கருத்தைப் பகிரங்கமாக முன்வைக்கும் முதுகெலும்பு அவருக்கு இருக்கவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியானது.

தமிழ்க் கூட்டமைப்பின் முடிவு - தீர்மானம் - அதிகாரத்தில் இருப்பவருக்கு எதிரான திசையில் நகர்ந்த சமயத்திலும், கூட்டமைப்பை வளைத்துப்போடும் இறுதிக்கட்ட முயற்சியில் அரசுத் தரப்பு இறங்காமல் இல்லை.

அரசுத் தரப்பில், ஜனாதிபதியின் செயலாளர் மூலம் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களான இரா.சம்பந்தர், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்று முன்தினம் பின்னிரவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவை அவரது கொழும்பு இல்லத்தில் சுமார் ஒரு மணி நேரம் சந்தித்து உரையாடியிருக்கின்றனர். எனினும் கூட்டமைப்பின் முடிவில் அச்சந்திப்பு பெரிய மாற்றத்தையோ, தாக்கத்தையோ ஏற்படுத்தவில்லை எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு சாதகமான ஓர் அரசியல் முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதியாக அறிவித்தாலும் கூட, அது உண்மையில் சரத் பொன்சேகா மீதான பற்றுதலில் - அல்லது விருப்பில் - ஏற்பட்டதல்ல என்பதுதான் யதார்த்தம்.

இராணுவத் தளபதியாக இருந்து ஜெனரல் சரத் பொன்சேகா, சிங்கள ஆட்சிப் பீடத்துக்கு விசுவாசமாக நடக்கிறேன் என்ற கருத்தில், ஈழத் தமிழினத்துக்கு எதிராக இழைத்த அநீதிகளை - தர்மத்துக்கும், தார்மீகத்துக்கும் எதிராகப் புரிந்த செயல்களை - அடியோடு மறந்து புறம்தள்ளிவிட்டு, அல்லது அவற்றை மறந்து மன்னித்துவிட்டு, அவரை நாட்டின் தலைவராக ஏற்கத் தமிழ்க் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் தயாராகி விட்டார்கள் என்றும் அதை அர்த்தப்படுத்தக் கூடாது; அர்த்தப்படுத்தவும் முடியாது.

கடந்த நான்கு வருடங்களாக ஆட்சியில் இருந்த இலங்கையின் அரசியல் தலைமைத்துவம் இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்த கொடூரங்களுக்கு வஞ்சம் தீர்க்கும் எத்தனமாக ஓர் ஆட்சி மாற்றத்துக்குத் தமிழ்க் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் விழைகின்றார்கள்.

அந்த 'மாற்றம்' என்ற கோஷத்தில், தற்போதைய ஆட்சித் தலைமைக்கு ஒரே 'மாற்றீடு' என்ற முறையில் ஜெனரல் பொன்சேகா என்ற பிரகிருதி முன்தள்ளப்படுகின்றார். அதனால் - அவரைத் தவிர வேறு மாற்றீடு இல்லை என்பதால் - ஆட்சி மாற்றம் என்ற தவிர்க்கமுடியாத கட்டாயத்தை நிறைவு செய்வதற்காக இந்த வழியை நாடவேண்டியவர்களாக இருக்கின்றார்கள் தமிழர்கள்.

தென்னிலங்கையில் மட்டுமல்லாமல், இலங்கை முழுவதிலும் ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்து, போட்டி வலுவடைந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பு எதிரணிப் பொது வேட்பாளர்கள் பக்கம் திரும்புவது ஆட்சித் தரப்புக்குப் பெரும் விசனத்தையும், எரிச்சலையும், சீற்றத்தையும் கூடக் கொடுக்கும் என்பது புரிந்துகொள்ளத் தக்கதே.

ஆனால் இதற்காக அரசுத் தலைமை தமிழ்க் கூட்டமைப்பை நோவதில் - வைவதில் - அர்த்தம் இல்லை. இந்த நிலைமை ஏற்பட்டமைக்கு அரசுத் தரப்புத் தன்னைத்தானேதான் நொந்துகொள்ள வேண்டும்.

ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இந்த மண்ணில் பெரும் போரொன்று தொடுக்கப்பட்டு, அந்த மக்கள் பேரழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில் கூட, அந்தப் பாதிக்கப்பட்ட மக்கள் தமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்திருந்த தமிழ்க் கூட்டமைப்புடன் அந்த மக்களின் நலன் சார்ந்த விடயங்கள் குறித்துப் பேசுவதற்கு இந்த ஆட்சிப்பீடம் தயாராக இருக்கவில்லை. ஆட்சிப் பீடத்தில் இருந்தவர்கள் - ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் - மாற்றுத் தமிழ்க் குழுக்களைப் பலப்படுத்தி, அவற்றின் மூலமே தமது கைங்கரியங்களை ஒப்பேற்ற முயன்றனர். நாளை தொடர்ந்தும் ஆட்சி அதிகாரம் அவர்கள் கைகளிலேயே நீடிக்குமானால் அந்த மாற்றுக் குழுக்களே வடக்கு - கிழக்கில் எதேச்சாதிகாரம் புரியும். அந்த விடயத்தில் மாற்றம் வரப் போவதில்லை. மாற்றம் வரும் என நம்புவதற்கும் இடமில்லை.

ஆளும் தரப்பை விட்டு, எதிரணிப் பக்கம் தமிழர்களின் கடைக்கண் பார்வை விழுந்தமைக்குப் பிரதான காரணம் இதுவே.

இந்த நிலையை விதைத்தவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச்சூழ - நெருக்கமாக - இருப்பவர்களே. வினை விதைத்தால் வினைதானே அறுவடையாக வரும்.........? அதுதான் இப்போது கூட்டமைப்பின் முடிவு ரீதியாக வந்திருக்கின்றது என்பதே உண்மை.

# காய்ச்சல் நோயாளர்களால் நிரம்பி வழியும் யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதிகள்

## நடைபாதைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நிலை

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.போதனா வைத்தியசாலையில் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதையடுத்து வைத்தியசாலை விடுதிகளில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் வைத்தியசாலை நடைபாதைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கடும் மழைக்குப் பின்னர் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினால் காய்ச்சல் உட்படப் பல்வேறு தொற்றுநோய்கள் தற்போது வேகமாகப் பரவி வருகின்றன.

காய்ச்சலுக்கு இலக்காகி வைத்தியசாலைக்குத் தினமும் சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

போதனா வைத்தியசாலையின் 1ஆம், 2ஆம், 7ஆம், 10ஆம் இலக்க விடுதிகளில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

விடுதிகளிலுள்ள கட்டில்களில் நோயாளர்கள் நிரம்பி வழிவதால் ஏனையோர் விடுதி நடைபாதைகளில் பாய்களில் இருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விடுதிகளில் நடைபாதைகளில் இருந்து சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-224)

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை விழா நாளை

வலி.வடக்கு, ஜன.6

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 85ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திலுள்ள அன்னபூரணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கொழும்பு சாரதா பெண்கள் ஆச்சிரமத்தைச் சேர்ந்த செல்வி வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும், கௌரவ விருந்தினராக அகில இலங்கை இந்துமாமன்றத்தின் செயலாளர் கந்தையா நீலகண்டனும் கலந்துகொள்வார்கள்.

சிவத்தமிழ்ச்செல்வியின் நினைவாலய வழிபாட்டுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் வரவேற்புரையை சு.ஏழூர்நாயகமும், ஆசியுரைகளை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ அகிலேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்துவார்கள்.

வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ்.போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி சு.ரவிராஜ், வலி.வடக்கு பிரதேச செயலாளர் சு.முரளிதரன் ஆகியோர் வழங்குவார்கள்.

# இடம்பெயர்ந்தோருக்கான நிதி என்ற போர்வையில் மக்களை ஏமாற்றிப் பணம் கறக்கும் ஆசாமிகள்

## நீர்வேலி, கோப்பாய் பகுதி மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.6

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவியளிப்பதாகக் கூறி நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் போலி ஆசாமிகளிடம் மக்கள் தமது பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம் என நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளனத் தலைவர் கே.சிவபாலன் பிரதேச மக்களைக் கேட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களின் நலன் புரி நிதி எனக் கூறி இந்தப் போலி ஆசாமிகள் வீடுவீடாகச் சென்று பணத்தைச் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த ஆசாமிகளிடம் பணத்தைக் கொடுத்து வீணாக ஏமாந்துவிட வேண்டாம் எனப் பிரதேச மக்களிடம் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை-

நீர்வேலிப் பகுதியில் கடந்த மாதத்திலும் இந்த ஆசாமிகள் நிதி சேகரிப்பில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

# புத்தாண்டு தினத்தன்று 19 குழந்தைகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிறந்தன

யாழ்ப்பாணம், ஜன.06

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த புத்தாண்டு தினத்தன்று 19 குழந்தைகள் பிறந்தன.

இதில் பத்து ஆண் குழந்தைகளும், ஒன்பது பெண் குழந்தைகளும் அடங்கும்.

வைத்தியசாலை வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இந்தக் குழந்தைகளில் ஐந்து குழந்தைகள் அறுவைச் சிகிச்சை மூலம் பிறந்துள்ளன.

புத்தாண்டு தினத்தன்று பிறந்த இந்தக் குழந்தைகள் அனைத்தும் நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவதோடு குழந்தைகளைப் பிரசவித்த தாய்மாரும் சுகமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

புத்தாண்டு தினத்தன்று குழந்தைகளைப் பிரசவித்த சந்தோசத்தினால் குழந்தைகளின் பெற்றோர் வைத்தியசாலைப் பணியாளர்களுக்கு இனிப்புப் பண்டங்களையும் வழங்கி மகிழ்ந்தனர்.(50-224)

# எழுதுமட்டுவாழ் பாடசாலை மீண்டும் விரைவில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.6

கடந்த ஐந்து வருடங்களாக மூடப்பட்டிருந்த எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை (மருதங்குளம்) விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்தப் பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்ததால், கடந்த ஐந்து வருடங்களாக மூடப்பட்டிருந்தது.

தற்போது அப்பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதால் பாடசாலை கட்டடப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அப்பாடசாலை இயங்கவுள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-207)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 23 | 07.01.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.ப 11.05 வரை |
| நட்சத்திரம்: | அத்தம் |
| | மு.இ 10.35 வரை |
| [illegible] | [illegible] வரை |
| [illegible] | 02.02-03.32 வரை |

# டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவுகிறது; நேற்று வரை 11 பேர் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. நேற்று செவ்வாய்க்கிழமை வரை 11 பேர் மரணமடைந்துள்ளனர். சுமார் 419 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் ஜனவரி 5 ஆம் திகதி வரை சுமார் 86 பேர் டெங்குத்தொற்றுக்குள்ளாகியதாகவும் 5 பேர் மரணமடைந்ததாகவும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெவித்துள்ளார்.

டெங்கு நோயைக்கட்டுப்படுத்துவதற்காக பலமட்டங்களிலும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினமும் அனைத்துப் பாடசாலைகளிலும் டெங்கு நோயைக்கட்டுப்படுத்தும் முகமாக சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர். வீடு வீடாகப் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.(50-16)

# வவுனியா, திருமலைக்கு பருத்தித்துறையிலிருந்து இ.போ.ச. பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜன.6

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாக வவுனியா, திருகோணமலைக்கான நேரடி பஸ் சேவைகள் 9 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப் படுகின்றன.

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாக வவுனியாவிற்கான பஸ் காலை 5.30 மணிக்கும், காலை 6.30 மணிக்கும் புறப்பட வுள்ளது. இதற்கான கட்டணமாக 200 ரூபா அறவிடப்படவுள்ளது.

இதேபோல பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாக திருகோணமலைக்கான பஸ் சேவை காலை 6 மணிக்குப்புறப்படவுள்ளது. இதற்கான கட்டணமாக 300 ரூபா அறவிடப்படவுள்ளதாக பருத்தித்துறை டிப்போவி[illegible] அறிவித்துள்ளனர். (50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



இராசாவின் தோட்டம்
ஸ்ரீ ஞானவைரவர் ஆலய நித்திய பூசகர்
**பிரம்மஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் இராமநாதக்குருக்கள்** அவர்கள்
04.01.2010 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(ஐ/563920)

*இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம்.*

ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையினரும் ஆலய அடியார்களும்.

## ஆயுள்வேத பாதுகாப்புச்சபை பொதுக்கூட்டம்

வடமராட்சி தெற்கு - மேற்கு ஆயுள்வேத பாதுகாப்புச்சபை பொதுக்கூட்டம் 18.01.2010 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.30 மணி வரை நடைபெறும். மேற்படி கூட்டத்தில் அங்கத்தவர் பதிவும், எதிர்காலத் திட்டங்கள் பற்றிய ஆராய்வும் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு தாங்கள் தவறாது சமுகந்தரவும்.

இடம்: **மாநாட்டு மண்டபம்,**
பிரதேச செயலகம், வடமராட்சி தெற்கு- மேற்கு.

Dr.கே.பாலசுப்பிரமணியம்
செயலாளர்,
ஆயுள்வேத பாதுகாப்புச் சபை.

(91018)

## மரண அறிவித்தல்

### நல்லூர் பிரம்மஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் இராமநாதக்குருக்கள்



நல்லூர் வட கிழக்கு வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் இராமநாதக் குருக்கள் 04.01.2010 திங்கட்கிழமை இரவு சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான நல்லூர் சோமசுந்தரக்குருக்கள் - ஞானாம்பிகை அம்மா தம்பதியினரின் துதீய புத்திரனும், கல்வியங்காடு பொன்னையா ஐயர் - இலக்ஷ்சுமி அம்மா தம்பதியினரின் மருமகனும், அராலியூர் அமரர் தியாகராஜக் குருக்களின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், கம்பளை சோமஸ்கந்த குருக்கள் (ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்), கலஹா சிவபாலக்குருக்கள் (கலஹா ஸ்ரீ ஆஞ்சநேயர் தேவஸ்தான தர்மகர்த்தா), நல்லூர் பாஸ்கரசர்மா, தயாபரசர்மா, ஜெயபாலசர்மா, இரவீந்திர சர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி யோகேஸ்வரி, திருமதி பத்மகுமாரி, திருமதி ஜெயானி, திருமதி அஜந்தரூபினி ஆகியோரின் அன்பு மாமனாரும், லாவண்யா, சௌமியா, சஜன்யா, அபிலாஷினி, திவ்வியஹரசர்மா, பிரதஷ்னா, சபரீசசர்மா ஆகியோரின் அன்புப் பேரனும், அராலியூர் அமரர் விஜயலஷ்மி மற்றும் சர்வேஸ்வரக்குருக்கள் (ஆகாயகுளம் விநாயகர் தேவஸ்தானம்), சிவானந்தசர்மா (யாழ்.மாவட்டச் செயலகம்), பத்மநாத சர்மா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லூர் வடகிழக்கு வீதி, நல்லூர்.* (93460)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.6

சுன்னாகம், பருத்திக்கலட்டி ஞானவைரவர் ஆலயத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது. (ஒ - 6)

## கால்கோள் விழாவும் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஜன.6

மட்டுவில் கமலாசனி வித்தியாலய தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவும் கணணி அறை திறப்பு விழாவும் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) வே.ஸ்ரீஸ்கந்தராசா கலந்து கொள்வார். (ஒ-207)

## பெற்றோலையும் விநியோகிக்குமாறு கோரிக்கை

புங்குடுதீவு, ஜன. 6

புங்குடுதீவு எரிபொருள் நிலையத்தில் டீசல், மண்ணெண்ணெய் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்து மக்கள் மீளவும் அங்கு குடியேறியுள்ளதால் மோட்டார் வாகனங்களின் பாவனையும் அதிகரித்துள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு மக்களுக்கும் இந்த எரிபொருள் நிலையமே முக்கிய இடத்தை வகிக்கிறது.

இவற்றைக் கருத்திற் கொண்டு இங்கு பெற்றோலையும் விநியோகம் செய்ய வேண்டும் என்று புங்குடுதீவு, நயினா தீவு ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபையினரிடம் பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-188)

## விற்பனைக்கு

சேர் பொன்.இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள நாதன் புடைவை அகமும் அழகு மாடமும் என்ற வியாபார நிறுவனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : நாதன் புடைவை அகம் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தி தொ.பே. 0774151947

## தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் கணக்குப்பதிவுநர் (ஆண்) உடன் தேவை.
T.P : 0773604101

## வாடகைக்கு

பிரபல்யமான பேக்கரி வாடகைக்கு.
தொடர்பு: 0777427777

## வீடு விற்பனைக்குண்டு

மந்திகை -வல்லிபுரக்கோவில் பிரதான வீதி அருகில் உபயகதிர்காமம், புலோலி தெற்கில் 08பரப்பு 15குளி காணியில் அமைந்துள்ள தண்ணீர் தாங்கி, கிணறு, நவீன மல கூடம், சாதாரண மல கூடம் மற்றும் வசதி கள் அடங்கிய பெரிய வீடு விற்பனைக்குண்டு.
சகல தொடர்புகளிற்கும் சங்கரப்பிள்ளை புஷ்பநாதர், 'ஆர்சி துறை', சம்பந்தர் கடை வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
T.P 0213735292

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. ச.நரேந்திரன் அவர்களின் பாசமிகு தந்தையும், எமது பாடசாலை ஆசிரியை திருமதி ர.நரேந்திரனின் அன்பு மாமனாருமாகிய
**க.சபாரத்தினம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(93466)

பாடசாலைச் சமூகம்,
யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்கள்

### குமாரசுவாமி சுவாமிநாதர்

(ஓய்வுபெற்ற சிறாப்பர், புத்தளம் மாநகரசபை)

இருபாலைச்சந்தி, இருபாலையைப் பிறப்பிடமாகவும், வீரமாகாளி அம்மன் கோவிலடி, தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசுவாமி சுவாமிநாதர் நேற்று (05.01.2010) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சடாச்சரதேவியின் அன்புக் கணவரும் விகாஷினியின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2010) புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தொண்டைமானாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, மகள்,
குமாரசுவாமி உபாத்தியாயர் குடும்பம்,
அழகதுரை உபாத்தியாயர் குடும்பம்.

(சி/563925)

### இளையதம்பி குமாரசிங்கம் சிவநாதன்



(இளைப்பாறிய உத்தியோகத்தர், சிமேந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட E.K.சிவநாதன் 04.01.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம் - இராசம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன், சிவகுமார், இராஜகாரியர், சிவநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், செண்பகாதேவி, சந்திரகாந்தி, பவானி, சண்முகநாதன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் புஷ்பநாதன், நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் சத்தியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கார்த்திகாயினி, கஜேந்திரா, தபேந்திரா, கிருஷ்ணகுமார், பிரதீபன், பிரசாந்தன், மேனகா, தர்சிகா, சந்திரிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2010) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவஸ்தான்' மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.* (93457)

தகவல்: குடும்பத்தினர்.


IIS COMPUTER COURSES

New Batches Start on

| | | |
|---|---|---|
| Batch 2:10-01-2010 | Batch 3:16-01-2010 | Batch 4:17-01-2010 |
| Batch 5:10-02-2010 | Batch 6:14-02-2010 | |

Certificate Courses

Office Solution Development Duration : 4Months
Networking Duration : 4Months
Multimedia Duration : 4Months
Desktop Publishing Duration : 4Months
Java Programming Duration : 4Months
Visual Programming Duration : 4Months
Web Disigning Duration : 4Months
Computerized Accounting Duration : 4Months
Hardware Technology Duration : 4Months
Eng-Drawing & AutoCAD Duration : 4Months
Database Management System Duration : 4Months

Diploma Courses

Business Information System Duration : 6Months
Software Development Duration : 6Months
Computer Networking Technoloyg Duration : 6Months



கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS உடன் இணைவதன் மூலம் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு அமைய முற்றிலும் மாற்றியமைக்கப்பட்ட பாடவிதானங்களுடன் இக்கற்கை நெறிகள் கல்வியாண்டு 2010 இல் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இக்கற்கை நெறிகள் மூலம் மாணவர்கள் உயர் கல்வி,வேலை வாய்ப்புக்களை இலகுவாக்கிக் கொள்ள முடியும்.

INSTITUTE OF INFORMATICS STUDIES
100,Clock Tower Road,Jaffna.
T.P :021 222 2831 Fax:021 222 6933


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட மக்களை பஸில் ராஜபக்ஷ இன்று சந்திக்கிறார்

யாழ்ப்பாணம்,ஜன.6

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள சூனியப் பிரதேசத்தில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்ட மக்களுடனான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 7.30 மணியளவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில்ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொள்வர்.

ஏற்கனவே உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைவாக மீளக்குடியேற விண்ணப்பித்தவர்களில் குறைந்த எண்ணிக்கையான குடும்பங்களே தற்போது மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குப்பிளான் பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட சில இடங்களிலும் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குறிப்பிட்ட சில பகுதிகளில் இவர்கள் மீளக் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இப் பகுதியில் மீளக்குடியேறலாம் என ஒரு பட்டியல் வெளியிடப்பட்ட போதிலும் தற்போது மீண்டும் மட்டுப்படுத்திய அளவிலேயே அவர்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-68)

# யாழ்ப்பாணத்தில் இந்து மாமன்றத்தின் சைவ ஆராய்ச்சி நிலையமும் நூலகமும்

யாழ்ப்பாணம்,ஜன.6

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்.அலுவலகக் கட்டடத்தில் அமைந்துள்ள சைவ ஆராய்ச்சி நிலையமும் நூலகமும் சைவப் பிரசாரகர் பயிற்சி நிலையமும் இம்மாதம் 16 ஆம் திகதியிலிருந்து செயற்படவிருக்கின்றன.

யாழ்.நல்லூர் கோயில் வீதி, 211/17 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இந்து மாமன்றக் கட்டடத்தில் இயங்கவிருக்கும் மேற்படி நிலையங்களின் செயற்பாடுகளை மாமன்றத் தலைவர் வி.கைலாசபிள்ளை ஆரம்பித்து வைப்பார்.

மேற்படி சைவ ஆராய்ச்சி நிலைய நூலகத்திற்கு இந்து சமயம் சம்பந்தப்பட்ட நூல்களை அன்பளிப்பாக தந்துதவுமாறும் மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் இந்து மக்களைக் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்து மக்கள் நல்லூரில் அமைந்துள்ள மாமன்றப் பிராந்திய அலுவலகத்திலும், கொழும்பிலுள்ள இந்து மக்கள் மாமன்றத் தலைமையகத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் நூல்களைக் கையளிக்கலாம் என்று அவர் அறிவித்துள்ளார். (50)

# சாவகச்சேரியில் ஒலிபெருக்கி மூலம் 'டெங்கு' விழிப்புணர்வுப் பிரசாரம்

யாழ்ப்பாணம்,ஜன.6

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகிறது.

ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு மக்கள் கூடும் இடங்களில் டெங்கு ஒழிப்புத் தொடர்பான வீதி நாடகமும் காண்பிக்கப்படுகிறது. அத்துடன் வீடு, வீடாகச் சென்று டெங்கு பரவுவதைத் தடுக்கும் பிரசாரமும் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச்சங்க தென்மராட்சி பிரிவினர், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், சாவகச்சேரி நகர சபையினர் ஆகியோர் இணைந்து இத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-207)

## பயணி காயம்

யாழ்ப்பாணம்,ஜன.6

மினி பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்த பயணியொருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம்பெற்றது. மினி பஸ்ஸில் ஏற முயன்றபோது குறித்த பயணி தவறி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மீசாலையைச் சேர்ந்த வீ.பிரகாஸ் (வயது 29) என்பவரே இதன்போது காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (04-207)

## மாற்று ஆற்றலுடையோருக்கான கொடுப்பனவு வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.6

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாற்று ஆற்றல் உடையவர்களுக்கான சுயதொழில் கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்திற்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை பின்வருவோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

அ.ஆனந்தராசா-கல்வயல், அ.விமலாதேவி-கல்வயல், இ.முருகன்-கைதடி கிழக்கு, ப.புவனேஸ்வரி-உசன் மிருசுவில், சி.முருகன்-கொடிகாமம், க.கஜனி-கைதடி தெற்கு, க.ஞானகணேசன்-கற்குளி, சோ-யோகரத்தினம்-கற்குளி. (04-207)




# மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் அனைவருக்கும் இலங்கை வங்கிக் கிளைகள் ஊடாகக் கொடுப்பனவு

## கிடைக்கப் பெறாதவர்கள் அச்சமடையத் தேவையில்லை

யாழ்ப்பாணம்,ஜன.6

வன்னிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இலங்கை வங்கிக் கிளைகள் ஊடாக 20 ஆயிரம் ரூபா கொடுப் பனவு வழங்கப்படும். எனவே அந்தக் கொடுப்பனவு கிடைக்கப் பெறாதவர்கள் அச்சமடையத் தேவையில்லை என இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம் தெரிவித்தார்.

வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தப்பட்ட மக்களுக்கான 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவதில் வடமராட்சி மக்கள் பெரும் சிரமத்தையும் கஷ்டங்களையும் அனுபவிப்பதாகக் கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி வங்கிக் கிளைகளுக்கு மாறி மாறி அலைய வேண்டியிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை வங்கிக் கிளைகளினால் வழங்கப்படும் கொடுப்பனவுகள் தாமதமடைவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

குறிப்பாக சில வங்கிக் கிளைகளுக்கிடையே தகவல் பரிமாற்றத்தை மேற் கொள்வதற்குரிய வலைப்பின்னல் வசதி இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பல முறை அறிவித்துள்ளோம்.

அத்துடன் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய அரச உத்தியோகத்தர்கள் கிராம அலுவலர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்காமல் உள்ளது. எமது வங்கிக் கிளைகளுக்குப் பெருந்தொகையான மக்கள் தினமும் வருவதனால் வங்கி ஊழியர்களால் அவர்களைச் சமாளிக்க முடியாதுள்ளது. அது மட்டுமின்றி, எமது வங்கிக் கிளைகள் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டிருக்கின்றன. எனவே அவர்களின் தேவைகளையும் கவனிக்க வேண்டியுள்ளது. இப்படிப் பல காரணங்களாலேயே இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தோருக் குரிய மீளக் கொடுப்பனவை வழங்குவதில் காலதாமதமும், சில சிரமங்களையும் மக்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

எனவே மேற்படி விடயங்களுக்கு தீர்வுகாணும் பட்சத்தில் விரைவாகப் பணம் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

தொண்டைமானாறு, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி போன்ற பிரதேச மக்களுக்கு மட்டுமின்றி கோப்பாய், நெடுந்தீவு, காரைநகர் போன்ற பிராந்தியக் கிளைகளுடன் தொடர்புடைய மக்களுக்கும் இந்தப் பிரச்சினை இருப்பதனை நாம் அறிவோம்-என்றார். (50-14-70)

# யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கான விசேட கூட்டம் இன்று உரும்பிராயில்

## பஸில் ராஜபக்ஷ எம்.பி.கலந்துகொள்கிறார்

யாழ்ப்பாணம்,ஜன.6

''யாழ்.மாவட்ட விவசாயிகளின் பிரச்சினையும் விவசாயிகளின் எதிர்கால அபிவிருத்தியும்'' என்னும் தலைப்பில் இன்று புதன்கிழமை கூட்டத்தில் ஜனாதிபதியின் ஆலோசகரும் வடமாகாண விசேட செயலணிக் குழுத் தலைவருமான பஸில் ராஜபக்ஷ எம்.பி. கலந்து கொள்கிறார்.

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் முன்றிலில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்தக் கூட்டம் யாழ்.மாவட்ட தேசவள சம்மேளனத் தலைவர் க.முதலியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

14 பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விவசாயிகள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் ஜனாதிபதியின் ஆலோசகருடன் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டு விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறியவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின்போது யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினை கள் குறித்துப் பத்து அம்ச கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் வழங்கப்படவுள்ளதாகவும் 14 பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விவசாயிகள் தங்களது பிரச்சினைகளை நேரடியாகவும் மகஜர் மூலம் விசேட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ விடம் சமர்ப்பிக்க முடியும் எனவும் யாழ். மாவட்டத் தேசவள சம்மேளனத் தலைவர் தெரிவித்தார். (50-10-302)

# ஒரே வீதியில் ஒரே வாரத்தில் மூவரைக் கடித்தது பாம்பு!

யாழ்ப்பாணம்,ஜன.6

ஒரே வாரத்தில் ஒரே வீதியில் நடந்துசென்ற மூவர் பாம்புகளினால் கடியுண்டனர்.

நுணாவில் மேற்கிலிருந்து மறவன்புலோவுக்குச் செல்லும் கொல்லங்கிராய் வீதியிலேயே இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் தமது போக்குவரத்துக்காக இவ்வீதியினையே அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையின் பின்னர் புற்செடிகள், பற்றைகள் ஆகியவற்றினுள் மறைந்திருக்கும் பாம்புகள் வீதியில் நடந்து செல்வோரைக் கடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியில் பாம்பினால் கடியுண்டவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (04-201)



லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றத்தின் ''மக்கள் மருத்துவன்'' நூல் வெளியீடு நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் ஜெயம்பதி டபிள்யு.திசநாயக்க உரையாற்றுவதை முதற் படத்திலும், கல்லூரி அதிபரிடமிருந்து நூலின் பிரதியை ஜனாதிபதியின் செயலாளர் பெற்றுக் கொள்வதை இரண்டாவது படத்திலும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாத சிவாச்சார்ய பெருந்தகை அவர்களின் திவ்விய பாத கமலங்களுக்கு எமது அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

பிரம்ம ஸ்ரீ ச.சி.பாலஷண்முக குருக்கள் குடும்பத்தினர்,
'ஸ்வேதகம்', கட்டுடை, மானிப்பாய்.

## யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கம் (வ-து) நாற்பத்து ஒன்பதாவது வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

எதிர்வரும் 31.01.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு.செ. பேரின்பநாதன் அவர்கள் தலைமையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அங்கத்தவர் ஆகிய உங்களுக்கு பிரேரணைகள் ஏதும் இருப்பின் 16.01.2010 சனிக்கிழமை ந.ப. 12 மணிக்கு முன்னதாக காரியாலயத்தில் ஒப்படைக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

பாக்கியலிங்கம்,
செயலாளர்.
(93456)

## கலாசார நிகழ்வு

யாழ் . முதலீட்டாளர் மாநாட்டின் இறுதி நிகழ்வாக சமாதானத்திற்கான வர்த்தக கூட்டமைப்புடன் (Business For Peace Alliance), யாழ்ப்பாண வர்த்தக தொழிற்துறை மன்றம் (Chamber of Commerce and Industries of Yarlpanam) இணைந்து ஒழுங்கு செய்துள்ள மாபெரும் பல்லின கலாசார நடன நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பல்லின நடனக் குழுவினர் ஒரே மேடையில் நடன விருந்து வழங்கவுள்ளனர்.

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம்: நாளை (07.01.2010) வியாழக்கிழமை
நேரம்: மாலை 6.00 8.00 மணிவரை
பிரவேசம்: முற்றிலும் இலவசம்

இவ்வரிய சந்தர்ப்பத்தினைத் தவறவிடாது மேற்படி நடன நிகழ்வுகளைக் கண்டுகளிக்குமாறு ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வர்த்தக தொழிற்துறை மன்றம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(c/563911)

## தேவை

கணனி இயக்குநர், சாரதி ஆகியோர் தேவை. கணனி இயக்குநர் M.S OFFICE கற்கை நெறியை திருப்பதிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
தொடர்பு: 205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்குத் தேவை

அலுவலகமாக உபயோகிப்பதற்கு 3-6 அறைகளுடன் கூடிய வீடு, யாழ்.நகர எல்லைக்குள் பிரதான வீதிகளில் தேவை.

தொ.பே: 0777767818
(93399)

## மணமகள் தேவை

யாழ்.R.C உயர்குலப் பெற்றோர் தமது 37 வயதுடைய, உயர்கல்வியின் பின் கௌரவமான, உயர் வருவாய் உடைய தொழில்புரியும் மண மகனிற்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.

தொ.பே: 0777698339 (93400)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 06.01.2010 விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.
ராஜீவ் கால்நடைத் தீவன விற்பனை
ஆனைக்கோட்டைச் சந்தி.
021 222 2867 (93245)

### தரம் ஒன்றுக்கான கால்கோள் விழா 18 ஆம் திகதியன்று

பருத்தித்துறை.ஜன.06

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான கால்கோள் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இவ்வருடத்துக்கான மாகாண மட்ட கால்கோள் விழா மன்னார் வலயத்தில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
(50- 201-190)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி கலாவேணி பாலகிருஸ்ணர் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் இ.கதிரவேலு**

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் நல்நுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
(93459)

## பெயர் மாற்றம்

வரணி -இயற்றாலை, வரணி என்னும் முகவரியைச் சேர்ந்த வேலாயுதம் றகீம் ஆகிய நான் 05.01.2010 முதல் வேலாயுதம் அபினேஷ் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதையும், இனி வரும் காலங்களில் இப்பெயரையே பாவிப்பேன் என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

வரணி-இயற்றாலை,
வரணி. (93395) வேலாயுதம் அபினேஷ்

## மரண அறிவித்தல்

### வேலாயுதர் பாராளன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வி வலயம், சாவகச்சேரி)



கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் பாராளன் அவர்கள் நேற்று 05.01.2010 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர்-அரியமலர் தம்பதியரின் அன்புப் புதல்வனும் செல்வரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) - காலஞ்சென்ற நற்குணராசம்மா தம்பதியரின் அன்புமருமகனும், சிவமலரின் பாசமிகு கணவரும், திவாகரன் (மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி), கீதாஞ்சலி, நீராஞ்சலி (மாணவிகள், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், தயாளன் (கணக்காய்வு உத்தியோகத்தர், வடக்குமாகாணம், யாழ்ப்பாணம்), குணாளன் (சுவிஸ்), சீராளன் (ஜேர்மனி), நளினி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற Dr.வாசுகி மற்றும் உதயகலா (சுவிஸ்), பிறேமா (ஜேர்மனி), நந்தகுமார் (பொறியியலாளர், அமெரிக்கா), சிவபாலன், சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
தொ.பே: 0217210164 (93454)

தகவல்:
சிவமலர் (மனைவி).

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.சி.சிவகுமாரன்
அவர்களின் செல்வப் புதல்வி

**சி.பேரினியாள்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி
பாடசாலைச் சமூகம்
யா/ தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை.
(93398)





## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601151980 முதல் 601169843 வரை. சீட்டிழுப்பு இல. 611 திகதி 04-01-2010

வெற்றி எண்கள்
23 27 36 51 T (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 12,289,030/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 01 | 12,289,030/= | 12,289,030/= |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 2,000/= | 30,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 403 | 1,000/= | 403,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 650 | 1,000/= | 650,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16260 | 60/= | 975,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7760 | 40/= | 310,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 190932 | 20/= | 3,818,640/= |
| | | மொத்தம் ரூ. | 18,876,670/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - R.M. கருணாரத்ன - ஹிகுரக்கொடை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - D.P.M. தசநாயக்க - கிரியுல்ல.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 19,276,670/=

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருகோணமலை | 601164951-2-18 |
| புத்தளம் | 601162292-4-05 |
| பொலன்னறுவை | 601152480-3-42 |
| மட்டக்களப்பு | 601164532-8-00 |
| அநுராதபுரம் | 601153428-6-24 |
| மாத்தறை | 601156742-3-10 |
| பதுளை | 601162143-4-37 |
| மொணராகலை | 601158911-3-29 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 10,000,000/=

தொடர் இல. 701146337 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜனவரி 07 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## நீங்காத நினைவுகளுடன் நான்காம் ஆண்டில்

அரியாலையில் பிறந்து பொலிகண்டியில் சிவப்பேறு பெற்ற
அமரர் கலாபூஷணம்

### கந்தையா பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



அன்னை மடியில் 05.08.1931 — இறைவன் அடியில் 05.01.2006

திதி: பூர்வபக்க ஷஷ்டி

காலத்தை வென்ற காவிய நாயகனே!
காலனும் கவர்ந்து நான்காண்டாயிற்றே
நாடு போற்றும் நல்லாசானாய் சமூகம் போற்றும்
தலைமகனாய்
வீடு போற்றும் இல்லத் தலைவனாய்-தந்தையாய்
பாசமிகு பேரனாய்
உறவுகள் போற்றும் தோழனாய் நல்லதோர்
நண்பனாய்
எல்லா வாழ்வும் சிறப்புற வாழ்ந்த எங்கள் ஐயனே!
பூலோகம் கடமை முடித்து சிவலோகக் கடமையேற்ற
நான்காண்டு நினைவு நாளில் எங்கள் குடும்பத்
தெய்வமே!
உங்கள் ஆத்ம ஈடேற்றத்திற்காக எல்லாம்வல்ல
கொட்டுக் கிணற்றடி விநாயகரை வேண்டிப் பணிந்து
வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்:

[illegible],
பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை. (91016) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர், யுவதிகள் இரண்டு லட்சம் பேருக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்

## களுத்துறையில் ஜனாதிபதி உத்தரவாதம்

கொழும்பு, ஜன. 6



இவ்வருட முடிவுக்குள் இரண்டு லட்சம் இளைஞர் யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ களுத்துறையில் தெரிவித்தார்.

ராஜபக்ஷாகள் மீது வைராக்கியம் வைத்தாலும் பரவாயில்லை. தாய் நாட்டின் மீது வைராக்கியம் வைத்து நாட்டைக் காட்டிக் கொடுக்காதீர்கள் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் களுத்துறை மாவட்டத்திற்கான ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் ஏற்பாட்டில் களுத்துறை வேனன் யு பெர்னாண்டோ மைதானத்தில் கடந்த 3 ஆம் திகதி மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் விசேட அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கடந்த வருடம் ஜனவரி மாதம் 21ஆம் திகதி கிளிநொச்சி நகரம் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது. அந்தவகையில் அந்த நாள் சிறப்புக்குரிய நாளாக விளங்குகின்றது. கிளிநொச்சியை விடுவிப்பதுதான் மஹிந்தவின் பகல் கனவு என்று, அன்று பிரபாகரனே கூறினார். சர்வதேசத்தினதும் உள்ளூரிலுள்ள சிலரினதும் உதவியோடு கிளிநொச்சியைத் தக்க வைத்துக்கொள்ள முடியுமெனப் பிரபாகரன் நம்பினார். அதனால்தான் எதிரணியினர் சிலர் கிளிநொச்சிக்குச் செல்வதாகக் கூறிவிட்டு மதவாச்சிக்குப் போகின்றனர் என எம்மை விமர்சித்தனர். ஆனால், அவர்களின் விமர்சனம் பொய்யாகியதே மிச்சம்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற விருப்பவன் நானே. இந்த வெற்றியே உங்களது குழந்தைகளுக்கு வளமான எதிர்காலத்தைக் கொண்டுவரும்.

பயங்கரவாதத்தைக் குறுகிய காலத்தில் முழுமையாக ஒழித்துக் கட்டிவிட்டு உங்களிடம் வந்திருக்கின்றேன். முழு நாட்டையும் துரிதமாக அபிவிருத்தி செய் வதே எமது அடுத்த இலக்கு.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதன் பயனாக உல்லாசப் பயணிகள் படையெடுக்கிறார்கள். முதலீட்டாளர்களும் வருகிறார்கள். நாட்டைவிட இருபது மடங்கு பெரிய ஆழ்கடல் வளம் எம்மிடமுள்ளது.

சகல வளங்களையும் பயன்படுத்தி நாட்டின் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எமது பிரதான இலக்காகும்.

இதேநேரம் இவ்வருட முடிவுக்குள் இரண்டு லட்சம் இளைஞர் யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக் கப்படும்.

கடந்த காலங்களில் நாட்டின் சொத்துக்களை விற்று வாழ்க்கை நடத்தியவர்கள் இப்போது எமக்குச் சேறு பூசுகின்றார்கள். எமக்கு எதிராக விமர்சனம் செய்ய எதுவிதமான காரணங்களும் இல்லாததால் இவ்வாறு சேறுபூசுகின்றார்கள். இவர்களுக்




கான பதிலை எதிர்வரும் 26ஆம் திகதி மக்கள் நிரூபித்துக் காட்டுவார்கள் - என்றார். (சி)

# வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் நாலா புறங்களிலும் ஐ.தே.முன்னணிக்கே ஆதரவு

## கண்டியில் மனோகணேசன்

கண்டி, ஜன. 6

வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் உட்பட நாலாபுறமும் ஐ.தே.முன்னணிக்கு மக்களின் ஆதரவு பெருகிவருவதால் சிவாஜிலிங்கம் என்ன யார் வந்தாலும் இத்தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக அண்மையில் இடம்பெற்ற ஐ.தே. முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

கண்டி மாவட்ட ஐ.தே.கட்சி அமைப்பாளரான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தலைமையில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்து இடம்பெற்ற இந்தப் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மனோ எம்.பி. தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சில வாரங்களுக்கு முன்னர் ரணில் விக்ரம சிங்கவுடன் யாழ். சென்ற எமக்கு அப்பிரதேச மக்கள் அளித்த ஆதரவும் எமது எதிர்க்கட்சிகள் இணைந்து நிறுத்தியுள்ள ஜனாதிபதி வேட்பாளர் பொன்சேகாவுக்கு காட்டிய ஆதரவும் எமது வெற்றியை நன்கு உறுதிப்படுத்திவிட்டது.

அப்பிரதேச மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கு தயாராகிவிட்டனர். வட பகுதி மக்களைப் போன்று யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர்எவரும்இல்லை. இதன் மூலம் அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளும், அனுபவங்களும் பல தரப்பட்டவை.

நாட்டின் மலையகம் உட்பட சகல பிரதேசங்களிலும் வாழும் உடன் பிறப்புகளுக்குப் பாதிப்பு ஏற்படும் போதெல்லாம் அங்கு எல்லாம் இந்த மனோ கணேசன் இருப்பார். இதே அடிப் படையில்தான் யாழ் மக்களின் பிரச்சினைகளையும் துன்பங்களையும் கண்டறிய நாம் அங்குசென்றோம்.



இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. இவற்றுக்குப் பேச்சுகளே சரியான பாதை. இவற்றுக்குத் தீர்வுகாண நாம் மலையகத் தலைமைகளுக்குப் பின்னால் சென்று ஒட்டிக்கொள்ளத் தேவையில்லை. சோமவன்ஸ அதிகாரப்பரவலாக்கலில் ஆர்வம் கொண்டிருக்கிறார். இதற்கான சந்தர்ப்பம் ஜனவரி 26 ஆம் திகதி எமக்குக் கிடைக்கும்.

இன்று எமக்குத் தேவை துஷ்ட ஆட்சியை அகற்றுவதே. நாட்டை சின்னாபின்னமாக்கி - பொருளாதாரத்தை சீர்குலைத்த - இந்த அரசை மக்கள் ஒருமித்து அகற்ற முன்வரவேண்டும்.

5-10 வருடங்களாகச் சிறைக்குள் வாடிக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு விடிவுவேண்டும். எமது மக்களின் உரிமைகளுக்குப் போராடவே பொதுவேட்பாளர் என்ற அடிப்படையில் போட்டியிடுபவரை ஆதரிக்க நாம் தயாரானோம்-என்றார் அவர். (சி)

# குற்றச்சாட்டுகளை விவாதிக்கத் தயார் ஜே.வி.பியின் விஜித ஹேரத் ஆவேசம்



ஆயுதக் கொள்வனவு தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விவாதம் நடத்தத் தாம் தயார் என ஜே. வி.பி அறிவித்துள்ளது.

எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் ஜெனரல் சரத் பொன்சேகாவால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகளை ஆதாரத்துடன் நிரூபிக்குமாறும் அல்லது விவாதமொன்றை நடத்துமாறும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத், அமைச்சர் ராஜித சேனாரட்ணவிற்கு சவால் விடுத்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விவாதத்தில் கலந்து கொள்ளத் தயாராக இருக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குற்றச்சாட்டுக்கள் உண்மையெனில் சரத் பொன்சேகாவிற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜே.வி.பி அரசைக் கோருகிறது.

ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் அவரது மருமகன் ஆகியோர் மோசடிகளில் ஈடுபட்டிருந்தால் ஏன் அவர்களுக்கு சட்ட ரீதியில் தண்டனை வழங்கப்பட முடியாது என விஜித ஹேரத் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறான பின்னணி இருக்குமானால் அரசு ஏன், ஜெனரல் சரத் பொன்சேகாவைக் கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதியாக நியமித்தது என்றும், பாதுகாப்புச் செயலர் பதவிப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கோரியது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (சி)

# ஆயுதக் கொள்வனவு விவகாரத்தில் பொன்சேகாவுக்கு நேரடித் தொடர்பு

## குற்றஞ்சுமத்துகிறது அரசு

கொழும்பு, ஜன. 6



ஆயுதக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுடன் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு நேரடித்தொடர்பு உள்ளதென அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

இராணுவத் தளபதியாகக் கடமையாற்றிய காலப்பகுதியில் அமெரிக்க நிறுவனமொன்றிடமிருந்து ஜெனரல் சரத் பொன்சேகா நேரடியாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளார் என அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி 2 கோடி 50 லட்சம் டொலர் பெறுமதியான ஆயுதங்களை இராணுவத் தளபதி அமெரிக்க நிறுவனமொன்றிடமிருந்து கொள்வன்வு செய்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உரிய பதில் அளிக்கப்படாவிட்டால், ஆதாரங்கள் அம்பலப்படுத்தப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் முழுக் குடும்பமும் ஆயுதக் கொள்வனவு விவகாரத்துடன் தொடர்புபட்டுள்ளது எனவும், அதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பகிரங்க விவாதமொன்றிற்குத் தாம் தயார் எனவும், ஜெனரல் சரத் பொன்சேகாவின் எந்தவொரு பிரதிநிதியையும் விவாதத்தில் சந்திக்கத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது எதிர்கட்சிகள் சுமத்திவரும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. இவ்வாறான குற்றச்சாட்டுக்களை அடிக்கிச் செல்லும் எதிர்க்கட்சிகள் இதுவரையில் எந்தவொரு ஆதாரத்தையும் சமர்ப்பிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை எனவும், அது தொடர்பான முழுப் பொறுப்பையும் தாம் ஏற்றுக் கொள்வார் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (சி)



மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பை எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத்பொன்சேகா, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட்ட குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# பிரசாரத்தில் ஈடுபட்ட குழுக்களிடையே மோதல்; 30 பேர் காயம்; 6 பேர்கைது!

## நாவலப்பிட்டியில் சம்பவம்

கம்பளை,ஜன. 6

நாவலப்பிட்டியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தவாறு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த இரு பிரதான கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட மோதலில் முப்பது பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

நாவலப்பிட்டி, வரகாவ கிரிட்டன் எனும் இடத்தில் இடம்பெற்ற இந்த மோதல் சம்பவத்தில் காயமடைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர்கள் 19 பேர் கம்பளை மற்றும் நாவலப்பிட்டி வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறுகாயங்களுக்குள்ளான 11 பேர் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர்.

இவ்விரு தரப்பினரும் தடி,பொல்லுகள் மற்றும் கற்களைக்கொண்டு மோதிக் கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் ஆறுபேரை நாவலப்பிட்டி பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சிப் பிரதேச செயலக ஒளிவிழா அண்மையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. உதவிப் பிரதேச செயலர் (நிதி) கில்பேட்குணம் உரையாற்றுவதையும், பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், கத்தோலிக்க, அமெரிக்கன் மிஷன் மதகுருமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதல் இரு படங்களில் காணலாம். சாவகச்சேரி அமெரிக்கன்மிஷன் சபையினர் குழுப்பாடல் இசைப்பதையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வினையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.
(படங்கள்: தென்மராட்சிச் செய்தியாளர்)

# 2020ஆம் ஆண்டில் குடாநாட்டு விளையாட்டு வீரர்களும் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும்

## இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் பிறேம பின்னவல உதயனுக்குச் செவ்வி



யாழ்.குடாநாட்டு வீரர்கள், வீராங்கனைகள் 2020ஆம் ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டியில் கலந்துகொள்ள வேண்டும். அதற்கான வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்கும் முகமாகவே சிறுவர்களுக்கான ஆரம்பப் பயிற்சிகளை வழங்குகின்றோம்.

இவ்வாறு இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் பிறேமபின்னவல உதயனுக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டார்.

அவர் தனது செவ்வியில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

விளையாட்டுக்களை சிறுவயதில் இருந்தே கற்க வேண்டும். உரிய ஆரம்பப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் தற்போது ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

முதல்கட்டமாக யாழ்ப்பாணத்தில் சுமார் 50 பேருக்கான பயிற்சிகளை வழங்கினோம். தற்போது இரண்டாம் கட்டமாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் 60 பேருக்கும், சிறுவர்கள் 70 பேருக்கும் தற்போது இந்தப் பயிற்சிகளை வழங்கியுள்ளோம்.

தொடர்ந்து தீவகம், தென்மராட்சி வடமராட்சிப் பகுதிகளிலும் இந்தப் பயிற்சிகளை எதிர்வரும் காலங்களில் வழங்கவுள்ளோம். இதன்மூலம் சிறந்த வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்க முடியும்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் விளையாட்டுத்துறையில் போதிய வளமும், வளர்ச்சியும் அற்ற நிலைமையே காணப்படுகின்றது. ஆர்வமும் திறமையும் உள்ள வீரர்கள் காணப்படுகின்றார்கள்.

எதிர்காலத்தில் துரையப்பா விளையாட்டு அரங்கு, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் உட்பட வலிகாமத்திலும் மைதானங்கள் திருத்தம் செய்து நவீன வசதிகளுடன் கூடிய மைதானங்களை உருவாக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

**செவ்வி: நேசன்**

தற்போது ஓடுதல், பாய்தல், எறிதல் போன்ற செயற்பாடுகளுக்கான ஆரம்பப் பயிற்சிகளையே வழங்கியுள்ளோம். தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் சிறுவர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் பயிற்சியாளர்களான பிரசன்னபெரேரா, சாம்சன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கியுள்ளார்கள்.

தற்போது வழங்கப்பட்ட ஆரம்பப் பயிற்சிகளுக்கான உபகரணங்கள்கூட கழிவுப் பொருள்களைக் கொண்டே தயாரிக்கப்பட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதனை மாணவர்களிடையே கொண்டு செல்வதும் பயிற்சிகளைத் தொடர்ச்சியாக வழங்குவதும் பயிற்சிகளைப் பெற்ற ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

நாளாந்தம்தான் சிறார்களுக்கு இப்பயிற்சிகளை வழங்கவேண்டும். வழங்கமுடியாது விட்டால் வாரத்தில் ஒன்று, இரண்டு நாள்களாவது பயிற்சிகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

எதிர்காலத்திலும் இந்தப் பயிற்சிகளை வழங்கும் ஆசிரியர்கள் உட்பட பயிற்றுவிப்பாளர்களுக்கும் மேலதிக பயிற்சிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.




### ஆசிரிய உதவியாளருக்கான சம்பளக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன.6

ஆசிரிய உதவியாளர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ்.கல்வி வலயகத்திற்குட்பட்ட பாட்சாலைகளில் ஆசிரிய உதவியாளராகப் பணியாற்றும் ஆசிரியர்களது கடந்த ஆண்டு நவம்பர், டிசெம்பர் மாதத்திற்கான சம்பளக் கொடுப்பனவுகளை இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (50-16)


STUDY IN INDIA

SSM College of Engineering
SSM College of Arts & Science
Komarapalayam, Salem Dt, Tamil Nadu.

4 Years Engineering Degrees form ANNA UNIVERSITY
- Civil
- Mechanical
- Electronics
- Communication
- Electrical
- Computer Science
- Info Technology
- Textile Technology

3 Years Degrees form PERIYAR UNIVERSITY
- Bsc Bio Tech
- BSc Microbiology
- Bsc Hotel Managt.
- Bsc Computing
- BBA
- Computer Applications
- B.Com
- Bsc Fashion Design

All the above Degrees are recognized by UGC Sri Lanka

UK — Preferred Age above 18 to 22. Low down payment & Bank Sponsor. With O/L s Maths & English

MBBS — Lugansk state Medical University Ukraine East-Europe recognized by SL Medical Council

யாழ்ப்பாணத்தில் எம்மை சந்தித்து மேலதிக விபரங்கள் / Admission பெற்றுக்கொள்ளவும்.
இடம் : DEVI INN (கச்சேரி - நல்லூர் வீதி) (Next to Trumpt Sound Church)
திகதி : 7th, 8th, 9th January 2010
நேரம் : 4.00pm to 7.00pm

Mr. Peter Selvarajah, Director - SIC 0777-767818
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, No.50, Galle Road, Colombo 06. E-mail : scholinfo@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்திருக்கும் 2010 உங்களுக்கு எப்படி

## வித்யா தருவதைப் படியுங்கள்...

**மகரம்**

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத்தெரியாத நீங்கள், கோபம் வந்தால் நெருப்பாய் சுடுவீர்கள். சுயநலமில்லாத நீங்கள், யாருடனும் நெருங்கிப் பழக மாட்டீர்கள். குருபகவான் 2ஆம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதிலும் உங்கள் கை ஓங்கும். உதாசீனப்படுத்தியவர்களும் மதிப்பார்கள். குடும்பத்தில் அமைதி பிறக்கும். கணவன்-மனைவிக்குள் உப்பு சப்பில்லாத விஷயத்திற்கெல்லாம் சண்டை வந்ததே! சந்தேகத்தால் பிரிந்திருந்தீர்களே! நகமும் சதையுமாக இனி ஒன்று சேருவீர்கள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வங்கியில் அடைமானம் வைத்திருந்த வீட்டுப் பத்திரத்தை மீட்பீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உங்கள் ராசிநாதன் சனிபகவான் நட்பு வீட்டில் அமர்ந்திருப்பதால் நீண்டகாலம் உங்களை வாட்டி வதைத்த நோயெல்லாம் நீங்கும். முகத்திலிருந்த தேமல், பரு நீங்கும். களையிழந்த வீட்டில் இனி லட்சுமி கடாட்சம் உண்டாகும். கல்யாணம், காது குத்து, பெயர் சூட்டுவிழா என அடுத்தடுத்து வரும், சுபநிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். ஒதுங்கியிருந்த



மகரம்

உறவினர்களும் இனி ஓடி வருவார்கள். பேச்சில் இருந்த தடுமாற்றம் நீங்கும். உடன்பிறந்தோர் இனி உங்களை புரிந்து கொள்வார்கள். கடன் பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பதைப்போல, சிலர் உங்களை வைத்துக் கொண்டு ஆதாயமடைந்தார்களே! அவர்களையெல்லாம் இனி ஒதுக்கித் தள்ளுவீர்கள்.

ராசிக்கு 6ஆம் வீட்டில் கேது சாதகமாக இருப்பதால் அரைகுறையாக நின்றுபோன பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். குழந்தை பாக்கியம் உண்டாகும். புதிய சொத்து வாங்குவீர்கள். நாடாளுபவர்கள், அரசு அதிகாரிகள் உதவுவார்கள். சொந்த ஊரில் செல்வாக்குக்கூடும். வெளிவட்டாரத்தில் விலகிச் சென்றவர்கள் இனி வலிய வந்து பேசுவார்கள். உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டை குருபகவான் தனது 5ஆம் பார்வையால் பார்ப்பதால் எதிரிகளும் மறைமுகமாக உதவுவார்கள். வீண் வதந்தி, வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். குரு எட்டாவது வீட்டைப் பார்ப்பதால் வருங்காலத்தைப் பற்றிய பயம் நீங்கும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். பூர்வீகச் சொத்தை மாற்றியமைப்பீர்கள். அயல்நாடு சென்று வருவீர்கள்.

ராசிக்கு 9ஆம் வீட்டில் சனி நிற்பதால் பிள்ளைகளின் பொறுப்பில்லாத்தனம் நீங்கும். கெட்ட பழக்க வழக்கங்களி லிருந்து விடுபடுவார்கள். அவர்களின் தனித் திறமைகளை கண்டுபிடித்து ஊக்கப்படுத்துவீர்கள். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். மகளுக்கு இருந்த தோஷங்கள் நீங்கி சிறப்பாக திருமணம் முடியும். குருபகவான் உங்களுடைய பத்தாவது வீட்டையும் பார்ப்பதால் கௌரவப் பதவிகள் தேடிவரும். சமூக சேவையில் நாட்டம் பிறக்கும். ராசிக்கு பன்னிரெண்டாம் வீட்டில் ராகு நிற்பதால் சில நேரங்களில் தேவையற்ற சிந்தனைகள் வந்து போகும். சுபச் செலவுகள் வரும். ஆன்மிகவாதிகள், சித்தர்களின் அறிமுகம் கிடைக்கும்.

வியாபாரிகளே! மாவு விற்கப்போன போது காற்று வந்ததுபோல, தொட்டதெல்லாம் நஷ்டமானதே! இனி தொலைநோக்குச் சிந்தனையுடன் முதலீடு செய்து லாபம் பார்ப்பீர்கள். கடையை வேறிடத்திற்கு மாற்றுவீர்கள். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். தளபாடங்கள், ஹோட்டல், விடுதி, ஏற்றுமதி-இறக்குமதி பொருட்களால் ஆதாயமடைவீர்கள். மார்ச், ஏப்ரல், ஜூன் மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தர்களே! குறைகூறிய மேலதிகாரி இனி புகழாரம் சூட்டுவார். உங்கள் மேல் சுமத்தப்பட்ட பொய் வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். ஏப்ரல், ஜூலை, நவம்பர், டிசெம்பர் மாதங்களில் வேறு சில வாய்ப்புகளும் தேடி வரும்.

கன்னிப் பெண்களே! விரக்தி, ஏமாற்றங்களிலிருந்து மீள்வீர்கள். விடுபட்ட பாடத்தில் வெற்றி பெறுவீர்கள். நல்ல வேலை அமையும். நீண்டகால போராட்டத்திற்கு பிறகு நினைத்தவரையே திருமணம் முடிப்பீர்கள். மாணவர்களே! சக மாணவர்களை காட்டிலும் அதிக மதிப்பெண்கள் பெறவேண்டுமென்ற வைராக்கியத்துடன் படியுங்கள். வெற்றி நிச்சயம். அரசியல் வாதிகளே! உங்களைப்பற்றிய வதந்திகள் நீங்கும். இழந்த பதவியை மீண்டும் பெறுவீர்கள். கலைஞர்களே! பட்டி தொட்டியெங்கும் உங்கள் படைப்புகள் பாராட்டு பெறும். விவசாயிகளே! வாய்க்கால், வரப்புச் சண்டையெல்லாம் ஓயும். உங்கள் வருமானத்தை உயர்த்தும்படி மாற்றுப் பயிர் செய்வீர்கள். வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

இந்தப் புத்தாண்டு வாழ்வில் உயர்ந்த அந்தஸ்தை தருவதுடன், உங்களின் லட்சியங்களையும் நிறைவேற்றுவதாக அமையும். ★

**கும்பம்**

இலைகளை உதிர்த்து மீண்டும் துளிர்க்கும் மரங்களைப்போல பிரச்சினைகள் வரும்போது புது அவதாரம் எடுப்பவர்களே! உங்களின் லாப வீட்டில் நான்கு கிரகங்கள் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் பணம் சம்பாதிப்பதில் குறியாக இருப்பீர்கள். எதிர்பாராத வகையில் நல்ல வாய்ப்புகளும் வரும். 6ஆம் வீட்டில் செவ்வாய் நிற்பதால் வழக்கில் வெற்றி கிடைக்கும். பழைய சிக்கல்களை பேசி முடிப்பீர்கள். உங்கள் ராசிக்கு பதினோராம் வீட்டில் இந்த வருடம் முழுவதும் ராகு நிற்பதால் பணவரவு அதிகரிக்கும். சவாலான காரியங்களைக்கூட சாதாரணமாகச் செய்து முடிப்பீர்கள்.

ராசிக்கு 5ஆம் வீட்டில் கேது அமர்ந்திருப்பதால் பிள்ளைகளை அவர்களின் போக்கில் விட்டுப் பிடியுங்கள். கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். பிள்ளைகளின் கல்வி, திருமணத்தின் பொருட்டு கொஞ்சம் அலைச்சல் இருக்கும். என்றாலும் குரு பகவான்



கும்பம்

5ஆம் வீட்டை பார்ப்பதால் கேதுவால் கர்ப்பச்சிதைவானவர்களுக்கு இனி குழந்தை பிறக்கும். பிள்ளைகளால் சமூகத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகப் பெரியவர்கள் உதவுவார்கள். சித்தர் பீடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

03.05.2010 வரை உங்கள் ராசிக்குள்ளேயே குரு செல்வதால் இனந்தெரியாத மனக்கவலைகள் வந்து செல்லும். எதிர்காலத்தைப்பற்றி கேள்விக்குறி எழும். கணவன்-மனைவிக்குள் சாதாரண விஷயத்திற்கெல்லாம் சண்டை வரும். பிள்ளைகள் சில நேரங்களில் பிடிவாதமாக நடந்து கொள்வார்கள். என்றாலும் குருபகவான் 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் கணவன்-மனைவிக்குள் மனம்விட்டுப் பேசி சமாதானம் அடைவீர்கள். இக்காலகட்டத்தில் பாக்கிய வீடான 9ஆம் வீட்டில் குருவின் பார்வை விழுவதால் எதிர்பார்க்கும் அளவிற்கு பணம் வராவிட்டாலும் கடைசி நேரத்தில் கிடைக்கும். தந்தையுடனான கோபதாபங்கள் குறையும்.

04.05.2010 முதல் 06.11.2010 வரை குருபகவான் உங்கள் ராசியை விட்டு விலகி குடும்ப ஸ்தானத்தில் ஆட்சிபெற்று அமர்வதால் சோகம் நீங்கி குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். சோம்பல், அலட்சியம் விலகும். நோய் நீங்கும். பிரபலங்களிடமிருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிறரிடம் கொடுத்து ஏமாந்த பணம் கைக்கு வரும். அரசு சம்பந்தப்பட்ட காரியங்களில் வெற்றியுண்டு. தள்ளிப் போய்க்கொண்டிருந்த அயல்நாட்டுப் பயணம் இனி சாதகமாக அமையும்.

உங்கள் ராசிக்கு அஷ்டமத்தில் சனி இருப்பதால் அவ்வப்போது தோல்வி மனப்பான்மை வரும். சிறு சிறு விபத்துகள் ஏற்படும். வீதியைக் கடக்கும்போது கவனம் தேவை. தங்கம், வைர ஆபரணங்களை வங்கிப் பெட்டகத்தில் வைத்துப் பாதுகாப்பது நல்லது. வெளியாள்களை வீட்டில் அனுமதிக்க வேண்டாம். வேலையாள்களை நம்பி குடும்பப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். வழக்கு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம்.

வியாபாரிகளே! பெரிய அளவில் முதலீடுகள் செய்து திணறாமல் அளவாகப் பணம் போடுங்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். மே மாதம் முதல் பழைய பொருள்கள் விற்றுத்தீரும். வாடிக்கையாளர்களை அன்பாக நடத்துங்கள். வேலையாள்கள் அவ்வப்போது லீவில் சென்று உங்களை குழப்பத்துக்குள்ளாக்குவதுடன், விவாதமும் செய்வார்கள். மருந்து, துணி வகைகளால் ஆதாயமடைவீர்கள். பங்குதாரர்கள் பிரிவார்கள். உத்தியோகத்தர்களே! கிடைக்க வேண்டிய பதவி உயர்வு ஏதோ காரணங்களால் தடைப்பட்டுப்போனதே! மே, ஜூன், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் சம்பளம் உயரும். புதுவேலை கிடைக்கும். சக ஊழியர்கள் நேசக்கரம் நீட்டுவார்கள்.

கன்னிப் பெண்களே! தாமதமான திருமணம் வருடத்தின் பிற்பகுதியில் நல்ல விதத்தில் முடியும். புதிய நண்பர்களை நம்பி ஏமாற வேண்டாம். வேலை கிடைக்கும். மாணவர்களே! விளையாட்டுத்தனத்தை ஓரங்கட்டிவிட்டு படிப்பில் முழு கவனம் செலுத்துங்கள். தெரியாதவற்றை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அரசியல்வாதிகளே! ஆதாரமில்லாமல் யாரையும் விமர்சித்துப் பேசவேண்டாம். சகாக்கள் சிலர் உங்களை புகழ்வதைப்போல இகழ்வார்கள். கலைஞர்களே! கிடைக்கின்ற வாய்ப்பு எதுவானாலும் ஏற்றுக் கொள்ளப் பாருங்கள். விவசாயிகளே! எருகளையும்போது எச்சரிக்கையாக இருங்கள். தேள் போன்ற விஷப்பூச்சிகள் தாக்கலாம். பயிரை பூச்சிகளிடமிருந்து காப்பாற்ற நவீனரக பூச்சிகொல்லி மருந்துகளைப் பயன்படுத்துங்கள்.

இந்தப் புத்தாண்டு தொடக்கம் உங்களுக்கு தொந்தரவு தந்தாலும், வருடத்தின் மையப்பகுதியிலிருந்து சுகப்பட வைக்கும்.

**மீனம்**

பண்பாடு, கலாசாரத்தின் மீது பற்று வைத்திருக்கும் நீங்கள், புதுமையையும் விரும்புவீர்கள். எதையும் ஆழமாகப் பார்க்கும் நீங்கள், சமூக சீர்கேடுகளை களைவதில் ஆர்வமுள்ளவர்கள்.

குருபகவான் உங்கள் சுகஸ்தானத்தை பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உறவினர்கள் உதவுவார்கள். தாயாரின் ஆசி கிட்டும். வீடுகட்டும் பணி முழுமையடையும். வாகனம் வாங்குவீர்கள். ராகுபகவான் உங்கள் ராசிக்கு பத்தாவது வீட்டில் இருக்குபோது இந்த வருடம் பிறப்பதால் சாதிக்க வேண்டுமென்ற வைராக்கியம் பிறக்கும். புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி பெறுவீர்கள். வெளிநாட்டிலிருக்கும் நண்பர்கள் உதவுவார்கள்.

குருபகவான் ராசிக்கு 12இல் அமர்ந் திருப்பதால் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, சிக்கனமாக இருக்கப் பாருங் கள். குடும்பத்தில் சின்ன சின்ன சண்டை, சச்சரவுகள் வந்து போகும். மனைவி, பிள்ளைகளை அரவணைத்துப் போங்கள். உங்கள் குடும்ப அந்தரங்க விஷயங்களில் மற்றவர்கள் மூக்கை நுழைக்க விடாதீர்கள். சில காரியங்கள் இழுபறியாகி முடியும். நம்பக்கைக்குரியவராக இருந் தாலும் ரகசியங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம். எல்லாவற்றிலும் உங்களின் நேரடி கவனம் இருப்பது நல்லது. நீண்டநாள்களாகச் செல்ல வேண்டுமென நினைத்த புகழ்பெற்ற புண்ணிய தலத்திற்குச் சென்று வருவீர்கள்.

குரு 6ஆம் வீட்டைப்பார்ப்பதால் உங் களைச் சுற்றியிருப்பவர்களின் தராதரத்தைப் புரிந்து கொள்ளுவீர்கள். எதிரிகளில் சிலர் நண்பர்களாவார்கள். குரு 8ஆம் வீட்டைப் பார்ப்பதால் திடீர் பயணங்கள் இருக்கும். 04.05.2010 முதல் 06.11.2010 வரை உங்கள் ராசிக்குள்ளேயே குரு வந்தமர்வதால் உணவில் கட்டுப்பாடு தேவை. நேரம் கடந்து சாப்பிடுவதையும் தவிர்க்கவும். சர்க்கரை நோய் வரக்கூடும். நடைபயிற்சியை மேற்கொள்ளத் தவறாதீர்கள். சிறிய உபாதை என்றாலும் மருத்துவரைப் பார்ப்பது நல்லது. பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டிவரும். விரக்தி, ஏமாற்றம் வந்து நீங்கும். சகோதர வகையில் அதிக உரிமையெடுத்துக் கொள்ள வேண்டாம். கடந்தகால சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள்.

கேது உங்கள் ராசிக்கு நான்காம் வீட்டில் இந்த வருடம் முழுக்க தொடர்வதால் பதட்டத்திலிருந்து விடுபட வைப்பதுடன் பக்குவப்படவும் வைக்கும். கனிவான பேச்சாலேயே காரியங்களை சாதிப்பீர்கள். மகனுக்கு அயல்நாட்டில் வேலை கிடைக்கும். குலதெய்வக் கோயிலுக்கு குடும்பத்துடன் சென்று நேர்த்திக்கடனை முடிப்பீர்கள். ராசிக்கு 7ஆம் வீட்டில் சனி நிற்பதால் இனி எதையும் திட்டமிட்டு செய்யப் பாருங்கள். வெளிவட்டாரத்தில் உஷாராகப் பழகுங்கள். நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார் என்பதை தரம் பிரித்துப் பார்க்க முடியாமல் தடுமாறுவீர்கள். முன்புபோல கேட்டவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருக்காதீர்கள். வருங்காலத்தை மனதில்கொண்டு சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கும். மனைவிக்கு அறுவை சிகிச்சை வரக்கூடும். மனைவி வழி உறவினர்களுடன் ஒத்துப்போக முடியாதநிலை உருவாகும். தோலில் நமைச்சல், ஒவ்வாமை வாயுக்கோளாறால் நெஞ்சுவலியும் வந்து நீங்கும்.

வியாபாரிகளே! போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கடையை விரிவுபடுத்துவீர்கள். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த சலுகைத் திட்டங்களை அறிவிப்பீர்கள். அனுபவமிகுந்த வேலையாள்களை சேர்ப்பீர்கள். நன்கு அறிமுகமானவர்களானாலும் கடன் தரவேண்டாம். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களுடன்



மீனம்

அவ்வப்போது மனஸ்தாபங்கள் வெடிக்கும். ஜனவரி, பெப்ரவரி, ஜூலை, டிசம்பர் மாதங்களில் லாபம் உயரும். உத்யோகஸ்தர்களே! அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். மற்றவர்கள் செய்யும் தவறுகளைச் தட்டிக் கேட்கப்போய் சக ஊழியர்களுடன் மனத்தாங்கல் வரும். தலைமையை அனுசரித்துப் போங்கள். பெப்ரவரி, ஜூலை, செப்ரெம்பர் மாதங்களில் ஓரளவு நிம்மதி உண்டாகும்.

கன்னிப் பெண்களே! நீங்கள் ஆசைப்பட்டதைப் போலவே நல்ல கணவர் அமைவார். புதிய வேலை கிடைக்கும். மாணவர்களே! ஏனோ தானோ என்று படிக்காமல் முழு கவனத்தையும் செலுத்துங்கள். அரசியல் வாதிகளே! கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும். கலைஞர்களே! உங்கள் வெற்றி தொடரும்; அரசு பாராட்டும். விவசாயிகளே! மரப்பயிர்களால் காசு பணம் சேர்ப்பீர்கள்.

இந்தப் புத்தாண்டு, நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொள்வதுடன் வளைந்து கொடுத்துப் போவதால் வாழ்வில் முன்னேற்றத்தைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ராஜா கிறீம் ஹவுஸ்

எமது ஸ்தாபனம் 35 வருடங்களை நிறைவு செய்து 36 ஆவது வருடத்தில் கால்பதிக்கும் இந்நேரத்தில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

எமது கிளை நிறுவனமான ராஜா கிறீம் ஹவுஸ் & ஹோட்டல் மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு என்பவற்றை அறுசுவையுடன் உண்டு மகிழ்ந்திட நாடவேண்டிய ஸ்தாபனம்

**ராஜா கிறீம் ஹவுஸ் & ஹோட்டல்**
46,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




# முதலாம் ஆண்டு நினைவலை



## ஏபிரகாம் பெனடிற் (டிக்மன்)

அன்னை மடியில்: 15.09.1946
கர்த்தரின் மடியில்: 07.01.2009

வைத்தியசாலையில் உங்கள் அன்பு மனைவி கைபற்றி
என்னை விட்டு போக வேண்டாம் என்று அறைகூவினீரே.
நேரமும் காலமும் வந்துவிட்டது என உங்களுக்கு முன்பே
தெரிந்துகொண்டீரோ.
உங்கள் அன்புத் தாயையும் தாரத்தையும் நீங்கள் பெற்ற
அன்பு செல்வங்களையும் பிரிய எப்படி மனசு வந்ததப்பா

அப்பா நீங்கள் எங்களிடம் காட்டியதில்லை வெறுப்பு
எங்கள் தேவைகளுக்கு நீங்கள் கூறியதில்லை மறுப்பு
அம்மாவையும் எங்களையும் வளர்த்ததோ தனிச்சிறப்பு
எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை உங்கள் இறப்பு

சீரும் சிறப்புமாய் வாழ்ந்தீர்கள்
ஆனையூர் மானிப்பாய் மண்ணில்
குறைவின்றி வாழ பார்த்திருந்தீர்கள்உங்கள் கண்களால்
இறைவனோடு ஒட்டி உறவாடினீர்கள் இம் மண்ணில்
இன்று நிறைவுடன் வாழுகின்றீர்கள்
இறைவனுடன் விண்ணில்

உங்கள் பிரிவால் என்றும் துயருறும்:
மனைவி இன்பம்,
மகன் பிரசாந்தன் (பிரான்ஸ்),
மருமகள் கெவினா.

பிரான்ஸ்
தொடர்புகளுக்கு:
0033148216652,
0033622359393

(93365)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் பெட்டகம்

# ஆரோக்கியமாக வாழ ஒழுங்கான தேகப் பயிற்சி அவசியம்



நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு திறந்தவெளி தேகப்பயிற்சி இன்றியமையாதது. அப்பயிற்சி குருதிச் சுற்றோட்டத் தொகுதிக்கும், நுரையீரல் பகுதிக்கும் அதிகளவு ஒட்சினை வழங்கி உடம்பை உறுதியாகவும் அதன் எடையை கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்கும் வழிவகை செய்கிறது.

நாளாந்தம் ஒழுங்காக ஒரு மணித்தியாலமாவது தேகப்பயிற்சி செய்துவருவது மிக முக்கியம். ஒரு கிழமை பூராகவும் செய்ய வேண்டிய பயிற்சியை ஒரு நாளில் பல மணித்தியாலமாக பயிற்சியை செய்து முடித்துவிடலாம் என எண்ணாதீர்கள். அது பெரும் ஆபத்தில் முடியலாம். பயிற்சிக் காலங்கள் 24 மணிநேர அவகாசத்தால் பிரிக்கப்படாதிருந்தால் குருதி அமுக்கம், குருதி குளுக்கோசு மட்டம் மற்றும் அனுசேப சாராம்றிகள் உயர்ச்சியடைந்து பெரும் பாதிப்பை விளைவிக்கும்.

காலை வேளையில்தான் தேகப்பயிற்சி செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எந்த வேளையிலும் தேகப்பயிற்சியை மேற்கொள்வலாம். ஆனால் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் உணவு உட்கொண்ட உடன் தேகப்பயிற்சி செய்யக்கூடாது. மேலும் முதியவர்கள், நோயாளிகள், டாக்டரின் அறிவுரையின் படிதான் தேகப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். விரும்பினால், உதாரணமாக அவர்கள் 45 நிமிடங்கள் செய்ய வேண்டிய பயிற்சியை மூன்றாக பகுத்து 15 நிமிட வீதம் மூன்று தடவைகள் செய்யலாம்.

உங்கள் எடையை டாக்டர்களின் சிபார்சுக்கு ஏற்ப பேணிவருவது மிக முக்கியம். திறந்த வெளி தேகப் பயிற்சியையும் உணவுக் கட்டுப்பாட்டையும் (குறைந்த கலோரிப் பெறுமானமுள்ள உணவை உட்கொண்டு) இணைத்து செயல்படுவீர்களானால் வேண்டாத ஊளைச்சதையை கரைத்து விடுதல் சாத்தியம்.

குறிப்பிட்ட உடற்பகுதி உதாரணமாக வயிற்றுப்பகுதி கொழுப்பைக் கரைப்பதற்கு விசேட பயிற்சிகள் இருப்பதாக விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் இதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை. உடற்பயிற்சி பொதுவாக உடலில் எல்லாப்பகுதிக் கொழுப்பையும் கரையச் செய்கின்றது. எனவே கிரமமாக தேகப்பயிற்சியை மேற்கொண்டு வாருங்கள். நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வழிபிறக்கும்.★



எஸ்.பேராசிரியன்




# குயில் பாட்டுக் கேக்கலையோ...



குயில்பாட்டு இல்லாத வசந்தகாலம் எது? தமிழில் மட்டுமல்லாது ஏராளமான பிற மொழிகளிலும், குயில்களின் இனிய ஓசையைப் புகழ்ந்து கவிஞர்கள் பாடியுள்ளனர். பல புலவர்கள் அருமையான தீந்தமிழ்ப் பாக்களில் அதை இளமாதர் மொழிக்கு உவமை கூறியுள்ளனர்.

ஏப்ரல் மாதம் பிறந்ததும் அழகிய சோலைகளிலும், தோப்புகளிலும், செடியடர்ந்த இடங்களிலும் குயிலோசை முழங்கும். ஆகஸ்ட் வரை இவைகளின் இசைக் கச்சேரியைக் கேட்கலாம். இளவேனிற்காலம் எனவும் நம்மவர்கள் கூறிக்கொள்வார்கள்.

அதிகாலை வேளையிலும், நண்பகல் வேளைகளிலும், அந்திசாயும் வேளைகளிலும் குயில்கள் பாட்டிசைக்கும். மேலும் நிலாப் பொழுதுகளிலும் தங்கள் இசையைப் பொழியக் கூடியன.

"சோமன் புறப்படத் தென்றலும் வீசத்
துயிலொழிய
யாமங்கள் தோறும் குயில் வந்து கூவும்
அந்நேரத்திலே......"

என்று காளமேகப் புலவர் பாடியது வசந்த கால அமைதியின்மையை எப்படி? எடுத்துக்காட்டுகிறது!

குயிலின் குரலை நுட்பமாக ஆராய்ந்த நம் புலவர்கள் அதன் தோற்றத்தை கவனிக்கவில்லைப் போலும். குயில் கறுப்பாக இருக்குமென்று கூறினார்கள். கறுப்பிலும் ஏழுவகைகள் உண்டு. ஆண் குயில் இதில் இரண்டாவதாக உள்ளது எனக் கூறலாம்.

மேலும் பெண் குயிலை இந்தப் புலவர்கள் கண்டதில்லைப் போலும். பெண் குயிலின் சிறகுகளில் வெண்புள்ளி, கரும்புள்ளி போன்றன படர்ந்திருக்கும். ஆண்குயிலும், பெண்குயிலும் நமது பார்வைக்கு வேறு பறவைகள் போல் காணப்படும். அவ்வளவு வர்ண வேறுபாடுகள் உடையவை.

எல்லாவிதப் பிராணிகளிடத்தும் மகப் பேற்றைப் பாதுகாத்து வளர்க்கும் பொறுப்பை சகஜமாகக் காணலாம். குயில்களுக்கு இந்தக் கவலை கிடையாது. பெண்குயில் திருட்டுத்தனமாக காகக் கூட்டில் முட்டையை இட்டுவிடும். பின்னர் அடைகாத்து, குஞ்சுபொரித்து இரைகொடுத்து வளர்ப்பதெல்லாம் மாற்றாந்தாய் காகத்தின் பொறுப்பாகும்.

காகங்கள் வயதுவந்த குயில்களை விரட்டியடிக்கும். தன் வாழ்நாளில் இல்லற பராயத்தையறியாத குயில்கள் வசந்த காலத்தின் நாயகர்களாக ஒலிப்பது மிகச் சிறப்புமிக்கதாகும்.

விஞ்ஞான ரீதியில் நோக்கும் போது குயில்கள் வசந்த காலத்தில் தங்களது இணையை அழைப்பதற்கு இனிமையாகப் பாடுவதாகக் கூறுகிறார்கள். மேலும் உலக நாடுகளிலும் குயில்கள் பல தோற்ற அமைப்புகளோடு வாழ்வதாகவும் கூறுகின்றனர்.

து.ஜெயாரூபன்,
கந்தரோடை.


DG Briefs & Banians

வியர்வையை உறிஞ்சி கொள்ளும்
தனது கடமையை சரியாகச் செய்யும்
சுட்டெரிக்கும் வெய்யிலும்
ஜில்லென்றிருக்கும்

100% Combed Cotton
Maximum Performance
Quality Fabrics

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான கடைகள் எல்லாவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம்

Glamer REGAL Smart CREDO PRESTIGE Xcellent CUSHY Swift Bestwear Junior apex Frisky fresh

DG Fashion Garment (Pvt) Ltd.
Ashokarama Road, Kondeniya,
Dickwella.Sri Lanka.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com
Web:-www.newdgfashions.com

DG Brief & Vests

உங்களுக்கு காம்பீரமான தோற்றத்தைத் தரும் நாள்பூராகவும் உங்களுடன் இணைந்திருந்து உங்களுக்கு ஒத்தாசை புரியும் ஒரு நண்பன் DG ஆண்களுக்கான உள்ளாடைகள்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான கடைகள் எல்லாவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம்

100% Combed Cotton
Maximum Performance
Quality Fabrics

DG Fashion Garment (Pvt) Ltd.
Ashokarama Road, Kondeniya, Dickwella. Sri Lanka.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com / Web:-www.newdgfashions.com


# எலியைக் கண்டால் யானைக்குப் பயமா?

யானைகள் எலியைக்கண்டு பயப்படுகின்றனவா? யானை மிகப் பெரிய மிருகம். தரையில் வாழும் வேறு எந்த மிருகத்தையும் விட பெரியது. அப்படியிருக்க சின்னஞ்சிறிய எலியைக்கண்டு பயப்படுகிறது என்று சொன்னால் எவர்தான் நம்புவார்?

எலி சின்ன மிருகமாக இருப்பதால் யானையின் துதிக்கைக்குள் நுழைந்து அதன் மூச்சைத் திணறடித்துவிடும் என்று சிலர் நினைக்கிறார்கள்.

உண்மை என்னவென்றால் யானைக்கு இந்த சின்னஞ்சிறிய மிருகத்தைக் கண்டு அப்படி ஒரு பயமும் இல்லை. சில வேளைகளில் சிறுஎலிகள் யானையின் அருகில் ஓடித்திரிவதைப் பார்க்கலாம். அவைகளை யானைகள் கண்டு கொள்வதே இல்லை. மேலும் யானைக்கு மிகத் திறமான முகரும் சக்தி இருப்பதால் எலிகள் அருகில் வருவதை உணர்ந்து கொள்வதொன்றும் கடினம் அல்ல.



அப்படியே எலி ஒன்று யானையின் மூக்கில் (துதிக்கையில்) நுழைந்துவிட்டாலும் அந்தப் பெரிய மிருகம் மூக்கைச் சீறிவிட்டால் எலிஎங்கோ போய் விழுந்துவிடும்.

-ரஃமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லீலா** பஞ்சாங்க சித்திரக் கலண்டர் டயறிகள்

சித்திரங்களுடனும் இருவர்ணங்களில் அச்சிடப்பட்டு வெளிவந்து இலங்கையிலும் வெளிநாட்டிலும் துரிதமாக விற்பனையாகின்றன

இதுவரை கிடைக்காத அன்பர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள், இன்றே கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கும் கிடைக்கும் ஒரேயொரு சித்திரக் கலண்டர்

**2010 லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**

தயாரிப்பாளர்கள் :

**லீலா பிறஸ் பிறைவேட் லிமிட்டட்**

இல. 400, கே. சிறில். சீ பெரேரா மாவத்தை, கொழும்பு – 13.
தொலைபேசி : 2325930, 2325933 பக்ஸ் : 2446077


# 50வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டு வரும் வீதிகளைப் புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.6

பண்டத்தரிப்பு – பிரான்பற்று பிரதேசத்தில் முக்கியமான இரண்டு பிரதான வீதிகள் கடந்த 50வருடங்களாக மீள் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதனால் மக்கள் அந்த வீதிகளூடாக முழுமையான போக்குவரத்தைச் செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது.

பிரான்பற்று நல்லுண்ணி வீதி - முல்லையடி வீதி என்பன இவ்வாறு மக்கள் பாவனைக்கு ஒவ்வாத வீதிகளாக மாறி நிற்கின்றன.

இவ்வாறு பிரான்பற்று கலைமகள் சன சமூக நிலையச் செயலாளர் சி.சத்தியசிவம் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட வீதியாகப் பண்டத்தரிப்பு நல்லுண்ணி வீதி-பிரான்பற்று முல்லையடி வீதி, யாவத்தை வீதி என்பன விளங்குகின்றன.

ஆனால் முன்னுரிமைப் பிரகாரம் 2009இல் நல்லுண்ணி வீதி-பிரான்பற்று முல்லையடி வீதி என்பனவற்றை உடன் மீளப்புனரமைத்துத் தருமாறு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இவ்வீதிகள் சீர்செய்யப்படவில்லை.

எனவே 2010இல் முன்னுரிமைப் பிரகாரம் குறித்த வீதிகளை மீள்புனரமைப்பு செய்து தரவேண்டும் என பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலையச் செயலாளர் சி.சத்தியசிவம் கேட்டுள்ளார்.

(04-302)

## ஆறாத்துயரில் ஆண்டு ஒன்று

மலர்வு 18 ✹ 04 ✹ 1928



உதிர்வு 06 ✹ 01 ✹ 2009

**அமரர் ஞா.சந்தியாப்பிள்ளை**

(முன்னாள் இலிகிதர், யாழ்.ஆயர் இல்லம்)

வாழ்வில் உண்மை நேசித்தோம் மரணத்திலும் உண்மைமறவோம்
ஆண்டவன் இல்லத்தில் ஆனந்தமாய் வாழ்வாய்.

புலோலி தெற்கு,
புலோலி. (93391) குடும்பத்தினர்.

## கிராம அலுவலர்கள் மீள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.6

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு ஆறு கிராம அலுவலர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் மீள்நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றதை அடுத்து பின்வரும் பிரிவுகளில் கடமையாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.சபாநாதன் (நாவற்குழி), கே.சிவகுல திலகசிங்கம் (கைதடி வடக்கு), கே.சுந்தரராஜா (சாவகச்சேரி வடக்கு), வீ.பேரின்பராசா (எழுதுமட்டுவாழ் வடக்கு), வீ. கந்தையா (கைதடி மேற்கு), கே. செல்வராசா (நுணாவில் கிழக்கு).

(ஓ-207)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் வேலுப்பிள்ளை மோகனநாதன்**

(அதிபர் SLPS- I
யா/அராலி இந்துக் கல்லூரி)

மறைந்த எங்கள் கல்லூரி அதிபருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அவரது குடும்பத்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/அராலி இந்துக் கல்லூரி,
வட்டுக்கோட்டை. (93390) கல்லூரிச் சமூகம்.

## டெங்கு ஒழிப்புச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.6

தென்மராட்சிக் கல்வி வலயப்பாடசாலை அதிபர்களுக்கான டெங்கு ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ஓ-207)

## 16ஆம் ஆண்டு நினைவு நாள்

வருடங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவுகளுடன் வணிகர்கள்

மண்ணில் 22 ✱ 08 ✱ 1937



விண்ணில் 06 ✱ 01 ✱ 1994

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**

(சாவகச்சேரி அம்பிகா பார்மசி முன்னாள் உரிமையாளர்,
முன்னாள் தலைவர் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)

மன்ற சேவைக்கென வந்து அமரத்துவமான அமரரின் நினைவு நாளும் நினைவுக் கூட்டமும் இன்று மன்ற அலுவலகத்திலுள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C/503903) சாவகச்சேரி
கைத்தொழில் வணிகர் மன்றம்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சீனிவாசகம் பரமேஸ்வரன்**



அன்னை மடியில்
09 ▪ 01 ▪ 1924

ஐங்கரன் அடியில்
21 ▪ 12 ▪ 2005

திதி : ஷஷ்டி (06.01.2010)

இல்லத்தின் ஒளிவிளக்காய் ஒளிர்ந்து
எங்களுக்கு பல நல்வழிகள் காட்டி
சிறப்புடன் வாழ வைத்த அப்பாவே!
மீண்டும் உயிர் பெற்று எம்முடன்
நீங்கள் வந்து வாழவேண்டும் அப்பா!

"இளவேனில்",
நவக்கிரி, புத்தூர். (93373) குடும்பத்தினர்.

## சாவகச்சேரியில் கூட்டணி அலுவலகம்

யாழ்ப்பாணம்,ஜன.6

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகம் சாவகச்சேரி சண்முகம் வீதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

(ஓ-207)

## கிணற்றினுள் தவறி வீழ்ந்த குழந்தை

தென்மராட்சி, ஜன.6

தாயுடன் குளித்துக் கொண்டிருந்த இரண்டரை வயதுக் குழந்தை கிணற்றுக்குள் தவறி வீழ்ந்தது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி தெற்கில் இடம்பெற்றுள்ளது.

அயலவர்களின் பெரும் முயற்சியினால் கௌசிகன் என்ற இந்தக் குழந்தை மீட்கப்பட்டு, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(ஓ-207)

## மரண அறிவித்தல்

### இராமநாதர் பரமநாதர்

மறவன்புலோவை நிரந்தர வசிப்பிடமாகவும் சிறுப்பிட்டி வடக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதர் பரமநாதர் 04.01.2010 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர்-சின்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சின்னையா- சீதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினம், வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரன், உமாதேவி, இரத்தின காந்தி (யாழ்.போதனா வைத்தியசாலை), கணேஸ்வரன் (சுவிஸ்), குமரேஸ்வரன் (சுவிஸ்), ஜெயமளாதேவி, கருணாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, அழகராசா, சந்திரமூர்த்தி, (தபாலகம்- சுண்டுக்குழி), புவனேஸ்வரி (சுவிஸ்), சுலோசனாம்பிகை (சுவிஸ்), வேலாயுதபிள்ளை (தபாலகம்- சாவகச்சேரி), காலஞ்சென்ற குமரேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் தயாபரன், பகீரதன் -வினோதா, கஜவதனி-கிருபாகரன், சபேசினி-தர்மராசா, சாந்தினி- சதானந்தன், சாந்தன்- ஷோபா, தனலட்சுமி, சஞ்யிகா, சஜீபன், மீரா, நிலானி- நிரோஷ், திலக்ஷன், மிதுனா, கிருஷனா, கபிலன், விதுஷன், மிதுலன், கர்ஜனா, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் கீர்த்திகன், அபினா, பிரவீன், ஷஸ்மிதா, தரணிகாந், தாட்சாயி, தேனுகாந், சுமிகா, சுருதிகா, சகானா, சாந்மகிழ்வாமி, ஷாஸ்பதன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2010) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி கிந்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி: தகவல்: குடும்பத்தினர்.
மறவன்புலோ மத்தி,
சாவகச்சேரி. (93392)
தற்காலிக முகவரி:
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

## நீங்காத நினைவலைகள்

தோற்றம்: 26.07.1942



மறைவு: 28.02.2006

தோற்றம்: 13.03.1985



மறைவு: 06.01.2007

**அமரர் வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்** **அமரர் பாலசுப்பிரமணியம் செந்தூரன்**

*பார்க்கும் இடமெல்லாம் உங்கள் அழகுமுகம் தோன்றுதே!*
*ஆயிரம் பேர் அருகிருந்தாலும் உங்களுக்கு ஈடாகுமா?*
*உங்கள் நினைவால் ஈரவிழிகள் காயவும் இல்லை*
*இரு விழிகள் மூடவும் முடியவில்லை*
*பாரினில் எம்மைத் தவிக்கவிட்டு வானுலகம் சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அழியாது.*

331, யாழ்.வீதி,
மானிப்பாய்.

பாலசுப்பிரமணியம் குடும்பம்,
பாலசுப்பிரமணியம் குடும்பம்.
(கனடா) 0014165999380.

## தரம்குறைந்த அரிசி விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.6

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கக் கிளைக் கடைகளில் தரம் குறைந்த அரிசி வழங்கப்படுவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

சமுர்த்தி மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண அரிசியே தரம் குறைந்து காணப்படுகின்றது என்று அவர்கள் கூறுகின்றனர்.

(ஓ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் கூட்டிணைவான அரசியல் போராட்டத்திற்கான ஆண்டு இது!


மஹிந்த ராஜபக்ஷ

ஈழத்தமிழர்களின் கூட்டிணைவான அரசியல் போராட்டக் காலச்சக்கரத்தின் வேகமான சுழற்சியோட்டத்தில் கடந்துவிட்ட 2009ஆம் வருடம் மறக்க முடியாத வரலாற்று வடுக்களையும், வேதனைகளையும், ஈழத்தமிழினம் சந்தித்த ஆண்டாகப் பதிவு செய்துள்ளது. 2010ஆம் வருடத்தில் இனவிடுதலைக் கனவைச் சுமந்து, தொடரும் வேதனைகளுடனும் எதிர்காலம் பற்றிய அச்சம் கலந்த நம்பிக்கையுடனும் காலெடுத்து வைக்கின்றது தமிழினம்.

இந்த ஆண்டை பல அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தும் ஆண்டாக மாற்றக்கூடிய வகையில் ஒன்றிணைந்து அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பது அவசியமானது. எனவே 2010ஆம் ஆண்டு ஈழத்தமிழ் மக்களின் கூட்டிணைவான அரசியல் போராட்ட ஆண்டாக பிரகடனப்படுத்துவது பொருத்தமானது.

இலங்கைத்தீவில் ஈழத்தமிழ்மக்களின் அரசியல் அபிலாசையை அடைவதற்கான ஆயுதப்போராட்டம் பல நாடுகளின் துணைகொண்டு சிங்களம் முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகளினால் மௌனிக்கச் செய்யப்பட்டுள்ளது. ஈழத்தமிழ்மக்களின் ஆயுதப்போராட்டப் பின்னடைவு என்பது தமிழ்மக்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கைக்கான பேரம் பேசும் வலுவை பலவீனப்படுத்தியுள்ளது. என்றாலும், ஈழத்தமிழருக்கு ஏற்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல் விவாகாரத்தையும், தமிழ்மக்களின் வாக்குகளையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தி, ஒன்றிணைந்த செயற்றிட்டங்களினூடாக தற்போதைய அரசியல் சூழலை வென்று


சரத் பொன்சேகா

தனது விடுதலை நோக்கிய நகர்வை செய்ய தமிழினம் திடசங்கற்பத்துடனும், நம்பிக்கையுடனும் செயல்படுவதே இராணுவ ரீதியாக பலவீனப்படுத்தப்பட்டுள்ள தமிழ் இனத்தின் அரசியல் விடுதலைக்குப் பலம் சேர்க்கும்.

இந்தச் சூழலில் தமிழ் மக்களும், தமிழ் தேசியத்தை பற்றியிருக்கும் அரசியல்வாதிகளும், உணர்வாளர்களும், ஊடகங்களும், கட்டுரையாளர்களும், சமூகப் பெரியோர்களும் தமிழ்ப்பேசும் மக்களை சிதறவிடாமல் ஒன்றிணைத்து, ஒரே கருத்தியல் ஊடாக நகர்த்தி, தமிழ்பேசும் மக்களின் தாயக விடுதலைக் கனவை நனவாக்கப் பாடுபட வேண்டும். அந்த ஒன்றிணைந்த செயற்பாடானது தாயக விடுதலை நோக்கிய பயணத்தில் வீரமரணமடைந்த மாவீரர்களுக்கும், இராணுவ அட்டூழியங்களினால் கொல்லப்பட்ட பொதுமக்களிற்கும் செய்யப்படும் கைமாற்றாகவும் துன்பங்களையும் வேதனைகளையும் பாரிய இழப்புக்களையும் சந்தித்து நிற்கும் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கும், அரசியல் விடுதலைக்கும் மிகவும் அத்தியாவசியமானதாகவும் அமையும்.

தமிழ் மக்களின் தாயக விடுதலைப் போராட்டத்தை வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்குப் பிற்பட்டகாலம், முள்ளிவாய்க்கால் பின்னடைவிற்கு பிற்பட்டகாலம் என இரண்டு கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம். வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு பிற்பட்டகாலம் என்பது பெருவாரியான தமிழ்மக்களின் ஒன்றிணைந்த சிந்தனைக் கருத்தினடிப்படையில் ஆயுதப்போராட்டம் தொடங்கப்பட்டு, முனைப்புப் பெற்று, ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கை பலம்பெற்றிருந்த காலம். முள்ளிவாய்க்கால் பின்னடைவிற்கு பிந்தைய காலம் என்பது அரசியல் அடிப்படைகளைப் பாதுகாத்து அகதிகளாகவும், சிறைப்படுத்தப்பட்டும், பொருளாதாரத்தையும் வளங்களையும் இழந்தும் கையேந்து நிலையிலிருக்கும் மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தியும், புனர்வாழ்வளித்தும், அவர்களை வளப்படுத்தியும் விடுதலைச் சிந்தனையை வலுப்படுத்தியும் தாயக விடுதலையை நோக்கி மீள நகர அவர்களை ஒழுங்குபடுத்தியும் செயற்படவேண்டிய கட்டாயத்தைக் கொடுத்துள்ள காலமாகும்.

முள்ளிவாய்க்கால் பின்னடைவிற்கான காரணங்களை ஆய்வு செய்து விமர்சித்துக் கொண்டிருப்பதை தவிர்த்து விட்டு, பின்னடைவுக்கான காரணங்களை படிப்பினையாகக் கொண்டு எதிர்காலத்தில் தாயகத்தின் அரசியல், பொருளாதார விடுதலைக்கான பாதையை சரியாகத் திட்டமிட்டு செயற்படுத்துவதே காலத்திற்குப் பொருத்தமானதாகும்.

இந்த வருடத்தில் ஈழத்தமிழர்களின் போராட்ட பரதையைச் சரியாக முடிவெடுத்து தாயக மக்களும், புலம்பெயர் மக்களும் கருத்து வேறுபாடுகளை களைந்து ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டிய தலையான பணிகளில் சில:-

★ மனித உரிமை மீறல் விடயத்தை சர்வதேச அளவில் கொண்டு சென்று ஈழத்தமிழ்மக்களின் அழிவிற்கு காரணமானவர்களைத் தண்டித்தல்.

★ ஜனாதிபதித் தேர்தலில் பிரதானப்பட்டிருக்கும் தமிழ்மக்களின் வாக்குகளை சரியாகப் பயன்படுத்தல்.

★ வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தைப் பற்றியிருக்கும் தமிழ்ப்பேசும் வேட்பாளர்களை தெரிவு செய்து ஒற்றுமையையும் பலத்தையும் நிரூபித்தல்.

★ நாடுகடந்த தமிழீழ அரசை நிறுவுவதற்கு ஒன்றிணைந்து பெருவாரியான ஆதரவைக் கொடுத்து அரசியல் கோட்பாட்டிற்கு வலுச்சேர்த்தல் -

### மனித உரிமை மீறல் விடயத்தினூடான அணுகுமுறை

ராஜபக்ஷ அரசால் முன்னெடுக்கப்பட்ட யுத்த நடவடிக்கையானது மே 17இல் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. சர்வதேச மனித உரிமைச் சட்டதிட்டங்களைப் புறந்தள்ளி, பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் யுத்தத்தை முன்னெடுத்த ராஜபக்ஷ அரசு, பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் மனிதப்பேரழிவிற்கு காரணமாகியது. சர்வதேச யுத்த சட்ட நடைமுறைகளை மீறி சிறிலங்கா யுத்தத்தை முன்னெடுத்ததானது ஐ.நா. சபையின் சர்வதேச மனித உரிமை விசாரணைக்கான பிரேரணை வாக்கெடுப்பு வரையில் கொண்டு சென்று விட்டது.

வாக்கெடுப்பில் சிறிலங்கா உருவாக்கிய வெற்றியானது பிராந்திய அரசியல் நலன் சார்ந்ததாக இருந்தாலும் சிறிலங்காவானது மிக மோசமாக மனித உரிமைகளை மீறும் நாடுகளின்


விக்கிரமபாகு

பட்டியலில் பத்து நாடுகளில் ஒன்றாக அண்மையில் கணிக்கப்பட்டது என்பது சிறிலங்கா தொடர்பான சர்வதேசத்தின் பொது நிலைப்பாட்டை வெளிக்காட்டுகின்றது. இந்த விடயத்தை சரியாக கையாண்டு, தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி இன அழிப்பை மேற்கொண்டும், வன்னியிலிருந்த மக்களின் தொகையைக் குறைவாகக் காட்டி இரண்டு வருடங்களாகப் போதுமான உணவுகளை அனுப்பாமல் அம்மக்களைப் பட்டினிச்சாவிற்கு இட்டுச்சென்றதற்கும் காரணமான ராஜபக்ஷ அரசை சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். இதனூடாக ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசு என சர்வதேசத்தால் சொல்லப்படும் சிறிலங்கா அரசு ஓர் இனத்திற்கு ஏற்படுத்திய மனிதப் படுகொலைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து, அந்த அரசிற்குக் கீழ் தமிழ்மக்கள் வாழமுடியாது என்பதை நியாயப்படுத்த வேண்டும். சிறிலங்கா அரசைத் தனிமைப்படுத்துவதனூடாக பொருளாதாரத்தடையை ஏற்படுத்தி, நிதிசலுகைகளை வழங்காது செய்து, தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளை சர்வதேசம் அங்கீகரித்து வழிவிடுவதற்கான அழுத்தங்கள் உருவாகக்கூடிய நிலைமையை சர்வதேச அளவில் ஏற்படுத்தல் வேண்டும்.

### ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை பயன்படுத்துவது ஊடான அணுகுமுறை

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களில் யார் ஒருவர் வந்தாலும் ஏதாவது அரசியல் உரிமையும் நியாயமும் கிடைக்கும் என எதிர்பார்ப்பது படுமுட்டாள்தனமானதாகும். எனினும் இந்த இரண்டு யுத்தக்குற்றவாளிகளில் யாரைத் தோல்வி பெறச் செய்து, அவரைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதன் மூலம் தமிழ்மக்களின் அரசியல் விடுதலைப்போராட்டத்தின் அரசியல் பரிமாணத்தை மெருகூட்டலாம் என்ற அடிப்படையிலேயே சிந்திக்க வேண்டியுள்ளது. இத்தேர்தல் வெற்றியில் பிரதானப்பட்டிருக்கும் தமிழ்மக்களின் வாக்குகளை எப்படி பயன்படுத்துவது என்பது தொடர்பில் பலவிதமான வாதப்பிரதிவாதங்களும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கட்சித் தீர்மானங்களும் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தமிழ்மக்கள் இத்தேர்தலில் எடுக்க வேண்டிய நிலைப்பாடுகளாக முன்வைக்கப்படுபவை -

★ ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பது.

★ தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துதல்.

★ தமிழ்த்தேசியம் சார்பாக குரல் கொடுக்கும் கலாநிதி விக்கிரமாகு கருணாரட்ன அவர்களுக்கு வாக்களிப்பது.

இவை மூன்றுமே ஒரே நோக்கத்தைக் கொண்ட பல்முறை அணுகுமுறைகளாகும். அத்துடன், இத்தேர்தலில் சிங்கள மக்கள் தங்களுக்குள் தாங்களே மோதிக்கொள்ளட்டும், நாங்கள் வெளியில் நின்று தேர்தலில் அக்கறை இல்லாதவர்களாக காட்டிக்கொள்வதால் சிங்களதேசத்தின் தேர்தலாகவே இது கருதப்படும், இதனூடாக தமிழ்மக்களின் ஒற்றுமையையும், ஒத்தகருத்தையும், அரசியல் நிலைப்பாட்டையும் வெளிக்காட்டலாம் என்றும் மாவீரர் கனவை நனவாக்கலாம் என்றும் வாதப் பிரயோகங்களைச் செய்வது மேற்குறிப்பிட்ட மூன்று நிலைப்பாட்டிற்கும் வலுச்சேர்ப்பதற்கான பொதுவான காரணங்களாக முன் வைக்கப்படுகின்றன. இந்த வாதம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முக்கியத்துவப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் வாக்குகளை பயனற்ற நிலைக்கே கொண்டு செல்லும். மேற்குறிப்பிட்ட இந்நிலைப்பாட்டிற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு ஆலோசனை வழங்குவதும், வழிகாட்டுவதும்; ராஜபக்ஷ அவர்களின் வெற்றிக்கு [illegible] அமைத்துக் கொடுப்பதாகவே இருக்கும்.

இது ஜனநாயக ஆட்சித் தலைவன் என்ற பெயரால் தமிழ்மக்கள் மீது ராஜபக்ஷ மேற்கொண்ட இனப்படுகொலையினால் கோபமடைந்துள்ள தமிழ்மக்கள் அவருக்கெதிராக வாக்குகளைப் பிரயோகித்து அவரைத் தண்டிக்க முற்படுவதனைக் குழப்ப, மஹிந்த ராஜபக்ஷ அவர்களை காப்பாற்றும் முயற்சியாகவே பார்க்கப்பட வேண்டும். அதைவிடுத்து தமிழினத்தின் ஒற்றுமையையும், ஒத்தகருத்தையும் வெளிப்படுத்தலாம் என்று கற்பிதம் செய்வதெல்லாம் வெற்று வார்த்தைகளேயொழிய தற்போதைய அரசியல் சூழலில் ஈழத்தமிழினத்திற்கு அவை பயனைத்தரா.

அத்துடன் மீண்டும் ராஜபக்ஷ பதவிக்கு வருவதால் தமிழ்மக்கள் மீது யுத்தத்தை முன்னெடுத்து, புலிகளை அழித்து, தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிர்மூலமாக்குவதற்காகச் செயற்பட்ட ராஜபக்ஷ அரசு, கடந்த காலத்தில் மேற்கொண்ட அதே அணுகுமுறைகளை கையாளலாம் என்றோ அல்லது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடலாம் என்றோ கூறமுடியாது. கடந்த காலத்தில் ராஜபக்ஷ அவர்களும் அவரின் அரசும் தங்களுடைய குறிக்கோள்களை அடைவதற்காக உலகின் பல்வேறுபட்ட முரண்பட்ட சக்திகளைக்கூட ராஜதந்திர ரீதியாக கையாண்டு வெற்றி பெற்றன. அத்தகைய ராஜதந்திர அணுகுமுறையினை யுத்தம் நடைபெறாத தற்போதைய சூழலில், ராஜபக்ஷ தனக்கு சார்பாக மாற்றியமைத்து வேறுவிதமாகச் செயற்படமாட்டார் எனக் குறைத்து மதிப்பிட முடியாது.

சர்வதேச சமூகம் ராஜபக்ஷவின் அரசு மேற்கொண்ட இனஅழிப்பு தொடர்பாகத் தங்களின் இயலுமைக்குள் எடுக்கக்கூடிய முயற்சிகளை எடுத்துவிட்டு அதற்கான வாய்ப்பு ஏற்படும் பட்சத்தில் அடுத்த நகர்வை எடுக்கத் தீர்மானிக்கும். ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்படாத பட்சத்தில் 'அரசியலில் நிரந்தர எதிரியுமில்லை நிரந்தர நண்பனுமில்லை - என்பதைப்போல ஆட்சியாளர்கள் மத்தியில் கூட்டு வருமே ஒழிய சர்வதேசம் தொடர்ந்து முரண்பட்ட போக்கைக் கடைப்பிடிக்கும் என்று கூற முடியாது. உதாரணமாக அண்மையில் இலங்கையுடனான முரண்பட்ட அரசியல் நிலையைத் தவிர்க்க வேண்டும் என்ற ரீதியில் அமெரிக்காவின் கொள்கை மாற்றமடைந்துள்ளதானது அதை உறுதிப்படுத்தும் விதமாகவே உள்ளது. இதேபோல் மேற்குலக வெளியுறவுக்கொள்கைகள் மாற்றமடையாது என்று சொல்லவும் முடியாது.

சிறிலங்கா அரசுக்குப் பொருளாதார ரீதியாகப் பாரிய உதவிகளைச் செய்யும் சீனா, தனக்கு சார்பாக மாற்றக்கூடிய வகையில் ராஜதந்திர ரீதியாக செயற்படுகின்றது. எனவே இந்தப் போக்கால் அதிருப்தியுறும் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் வெளியுறவுக் கொள்கைகள் இலங்கைத்தீவில் தமிழ்மக்களின் அரசியல் தீர்விற்கு சார்பாக அமைய வாய்ப்புள்ளது எனவும் கற்பிதங்கள் சொல்லப்படுகின்றன. இலங்கை, இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு எதிராகச் செயற்பட்டால் என்ன ஆபத்துக்கள் வரும் என்பதை சிறிலங்காவின் கொள்கை வகுப்பாளர்கள் புரிந்திராதவர்களா? தற்போது இந்தியாவிற்கு காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, சம்பூர் அனல்மின் நிலையம், மன்னார் எண்ணைவள ஆய்வு போன்ற பல பொருளாதார நடவடிக்கைகளுக்கு அனுமதியளித்து இந்தியாவை அணைத்துச் செல்லும் நகர்வுகளை சிறிலங்கா அரசு செய்வதை புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானது.

**- அபிஷேக் -**

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் கூட்டிணைவான ...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ அவர்களைப் பொறுத்தவரை தனது வெற்றிக்காகவும் தனது குடும்ப அரசியல் மற்றும் கட்சி அரசியல் இருப்பை பாதுகாக்கவும் எந்த எல்லைவரையும் செல்வதற்கும் தயாராக உள்ளார் என்பது போலவே அவரது அரசியல் நகர்வுகள் இருப்பதையும் கவனிக்க வேண்டும்.

அதேவேளை ராஜபக்ஷவிற்கு எதிராக வாக்களிப்பதால் ஏற்படும் பயன்கள் என்ன என்பதைப் பார்த்தால். சிங்களப் பேரினவாதத் தேரில் ஏறி நின்று தமிழ்மக்களின் மீது பாரிய இனஅழிப்பைக் கட்டவிழ்த்து விட்ட ராஜபக்ஷவை பழிதீர்க்க வேண்டியது முதன்மையானதாகும். அதற்குத் தேவையான சான்றுகள் தெளிவாக சர்வதேச மனித உரிமைச்சபையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமாக சனல் 04 வெளியிட்ட காணொளி ஆவணம், மக்கள் பாதுகாப்பு வலயங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்திய செய்மதிப் புகைப்படங்கள் போன்றவை மிக முக்கியமானவை. அத்துடன் வன்னிப்பகுதியில் போர் நடைபெற்ற போது அங்கு 70,000 ஆயிரம் மக்களே உள்ளனர் என அரசாங்கம் தெரிவித்தது. ஆனால் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் 250,000க்கும் மேற்பட்ட மக்கள் வன்னிப் பகுதியில் உள்ளனர் என தெரிவித்தபோதும் அதை மறுதலித்து மக்கள் தொகை புள்ளிவிவரத்தை குறைவாகக் காட்டி அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் உயிர் வாழ்விற்கு தேவையான அளவு அடிப்படை உணவையும் வழங்க மறந்திருந்தது அரசு. மேற்குறிப்பட்டவை ராஜபக்ஷ அரசின் மனித உரிமை மீறல்கள் என அமெரிக்காவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன் ராஜபக்ஷவின் அரசியல் ரீதியான நகர்வுகளை ஒப்புநோக்கின், வடக்குக் கிழக்கை சட்டரீதியாக சிறிலங்காவின் உயர் நீதிமன்றத்தைக் கொண்டு பிரித்த சம்பவத்திற்கு பிரதான பங்கையாற்றியவர் என்பதுடன் இலங்கைத்தீவில் வாழும் ஏனைய தேசிய இனங்களின் அடையாளத்தை பிரதிபலிக்கும் அரசியல் கட்சிகள் தங்களது இனத்தை அடையாளப்படுத்தும் பெயர்கள், சின்னங்களை கட்சிகளில் வைத்திருப்பதை இல்லாமல் செய்வதற்கான முயற்சியை மேற்கொண்டவர். தமிழ்த்தேசியக் கட்சிகளை வலுவிழக்கச்செய்ய வடக்கு, கிழக்கு பகுதியில் நடைபெற்ற தேர்தல்களில் சிங்களப் பெரும்பான்மையினத்தின் கட்சிச் சின்னத்தில் தமிழ் ஒட்டுக்கட்சிகளைப் போட்டியிட வைத்ததினூடாக தமிழ் தேசியம் என ஒன்று நாட்டில் இல்லை என வெளிப்படுத்தி, இலங்கை ஒரு பௌத்த - சிங்கள பேரினவாத ஆதிக்கத்தினுள் ஒரு கலப்புத் தேசிய நாடு என்ற கருத்துருவாக்கத்தைச் செய்தவர், தமிழினத்தைப் பாரிய அழிவுக்குள்ளாக்கி விட்டுத் தமிழ்தேசிய அடையாளங்களை சிதைக்கும் அடுத்தகட்ட நடவடிக்கையை முன்னெடுத்துக் கொண்டு செல்கின்றவர் இந்த ராஜபக்ஷ அவர்கள்.

சிவாஜிலிங்கம் கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு மாறாக ஜனாதிபதித் தேர்தலில் தனித்து போட்டியிடுவதற்கு தீர்மானித்ததும், 'இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் இனப்படுகொலைக் குற்றவாளிகள், அவர்களுக்கு வாக்களிக்குமாறு தமிழ்மக்களை எம்மால் கோரமுடியாது, எனவே தேர்தலை பகிஷ்கரிப்போம்' என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி எடுத்த முடிவும், மேற்குறிப்பிட்ட கருத்துக்களை வலியுறுத்தி புலம்பெயர் தேசங்களில் மின்னஞ்சல்கள் அனுப்பப்படுவதும், இவை போன்ற அனைத்தும் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை ஆட்சியில் வைத்திருப்பதற்கான செயற்பாடுகளாகவும், தமிழ்மக்களை அரசியல் சூனியத்திற்குள் கொண்டு செல்லும் அரசியல் சித்து விளையாட்டாகவுமே உணரப்படவேண்டும். அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அரைகுறையான அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாகத் தன்னை ஒரு வெள்ளைச்சட்டையணிந்த கனவானாகக் காட்டி, இறுதியாக தமிழ்மக்களின் இனப்படுகொலை விடயத்தையும் பூசி மூடிவிடுவார் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களை அழிக்க ஆணையிட்டவனை ஆட்சிப்பதவியில் இருந்து அப்புறப்படுத்தி, பழிதீர்க்க தமிழ் மக்கள் தங்களது வாக்குகளை பயன்படுத்தப் போகின்றார்களா? - அல்லது தமிழ்மக்களின் ஆயுதப்போராட்டத்தை அழித்து மிகப்பாரிய மனிதபேரவலத்தை தந்த ராஜபக்ஷவைப் பதவியில் அமர்த்தக்கூடிய வகையில் வாக்குகளை பயன்படுத்தப்போகின்றார்களா? என்பதே அவர்களின் முன் உள்ள கேள்வி. ராஜபக்ஷவைத் தோற்கடிக்கப்பதனூடாக இனஅழிவிற்குக் காரணமான சிங்களத் தலைமைகள் பாதுகாப்பற்ற அரசியல் சூழலுக்குள் தள்ளப்படுவாதற்கான சூழலை தமிழ் வாக்காளர்களால் ஏற்படுத்த முடியும். அத்துடன் ராஜபக்ஷ அரசிற்கு முண்டு கொடுக்கும் தமிழ்த் தேசிய விரோத போக்குடைய தமிழ் வாழ்வரசியல் அடிமை அரசியல்வாதிகளுக்கும் பாடம் புகட்டலாம். ஆதலினால் தமிழ்மக்கள் தமது வாக்குகளை வீணடிக்காமல் ராஜபக்ஷவை பழிதீர்க்க வாக்களிக்கப்பதா? இல்லையா? என்று சரியாகச் சிந்தித்து செயற்பட வேண்டியது முக்கியமானதாகும்.

### நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவதனூடான அணுகுமுறை

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தமிழ்மக்களின் அரசியல் பலத்தையும் ஒற்றுமையையும் தனி அடையாளத்தையும் நிரூபிக்கும் தேர்தலாகும். தமிழ்ப்பேசும் மக்கள் வடக்கு, கிழக்கிலிருந்து தமிழ் தேசியத்தைப் பின்பற்றி செயற்படும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்தல் மிகவும் முக்கியமானதாகும். இதனூடாகத் தமிழ்மக்களின் அரசியல் நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் உட்பட எல்லோருக்கும் தெளிவாக தெரியப்படுத்தலாம். இந்தத் தேர்தலின் முடிவானது தமிழ் தேசியம் என்ற கருத்தின் வலிமையைத் தீர்மானிக்கும் தேர்தலாகும். சிங்களப் பேரினவாதிகள் காலம் காலமாக தமிழ்மக்களின் அரசியல் தனித்துவத்தைச் சிதைக்க தமிழ்த் தேசிய விரோத சக்திகளைத் தென்னிலங்கைச் சிங்களத்தின் கட்சிச் சின்னங்களில் போட்டியிட செய்து தமிழ் தேசியம் என்பதெல்லாம் மாயை என்ற கருத்தை வலியுறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். அதற்கு முத்தாய்ப்பாகச் செய்யப்பட்ட தேர்தல்களே கிழக்கு மாகாணம் மற்றும் யாழ் மாநகரசபை, வவுனியா நகரசபை தேர்தல்கள் ஆகும். இந்த அபாயகரமான நிலையைத் தமிழ்ப்பேசும் மக்கள் தெளிவாகப் புரிந்து செயற்படவேண்டும்.

சிறுபான்மையினங்களின் அடையாளங்களை அழித்து, சிங்களப் பெருந்தேசிய வாதத்திற்குள் சிறுபான்மையினங்களைக் கலந்து, கரைக்கும் சிங்களத்தின் அரசியல் நகர்வுகளுக்கு இடம் கொடுக்காமல் தனித்துவமாகத் தேசியத்தைக் காப்பாற்றும் பொறுப்பை உணர்ந்து செயற்படும் தேர்தல் இதுவாகும்.

### நாடு கடந்த தமிழீழ அரசை அமைப்பதினூடான அணுகுமுறை

தமிழ்மக்களின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், அதுவரை நடைமுறை அரசை நடத்தி வந்த விடுதலைப்புலிகள் அமைப்பு தனது ஆட்சிப்பரப்பற்கு வெளியே தனது செயற்பாடுகளை அந்தந்த நாடுகளின் சட்டதிட்டங்களிற்கமைவாக ஜனநாயக வழிகளில் முன்னெடுக்க உருவாக்கவிருக்கும் அமைப்பே நாடு கடந்த தமிழீழ அரசாகும். இதன் உருவாக்க வேலைகள் முடிவுற்று ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்த அரசை அமைப்பதற்கான தேர்தல்கள் புலம்பெயர் தேசங்களில் நடைபெறவுள்ளன என அறியப்படுகின்றது. இந்த அரசின் செயற்பாடுகளை முடக்கவேண்டும் என்று சிறிலங்கா அரசு செயற்படுகின்றது. குறிப்பாக அண்மையில் நாடுகடந்த தமிழீழ அரசின் இணைப்பாளரைக் கைது செய்யும் கோரிக்கையை அமெரிக்காவின் றொபேட் பிளேக் அவர்களிடம் சிறிலங்கா அரசு முன்வைத்தது. ஆனால் அவரைக் கைது செய்வதை விடுத்து அவருடன் பேசுமாறு அறிவுரைக்கப்பட்டது என்பது தமிழ்மக்களின் அரசியல் செயற்பாட்டிற்கு வலுச்சேர்க்கும் கருத்தாகவே பார்க்க முடியும். எனவே புலம் பெயர் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து முழுமையாகப் பங்குபற்றி, நாடு கடந்த தமிழீழ அரசை அமைத்து சிறந்த முறையில் தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷை அடையப் பாடுபடவேண்டும். மிகச்சிறந்த வாய்ப்பை நழுவவிடாது நாடு கடந்த தமிழீழ அரசை உருவாக்கிச் செயற்படுத்தும் பொறுப்பு புலம்பெயர் சமூகத்திற்குண்டு.

மலர்ந்த புதிய ஆண்டில் தமிழ்மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் பிரதானப்பட்டிருக்கும் நான்கு விடயங்களிலும் சரியாகச் சிந்தித்து செயற்பட வேண்டும். தமிழ் மக்களை சரியான திசையில் நகர்த்த வேண்டிய பொறுப்புமிக்கவர்கள் சாணக்கியமாகவும் புத்திசாதுரியமாகவும் செயற்பட்டு தமிழ் பேசும் மக்களின் அரசியல் விடுதலை யைப் பிரகாசமாக்க, அனைவரும் தங்க ளின் பேதமைகளைக் களைந்து ஒற்று மையாக ஒன்றிணைந்து செயற்பட்டு கூட்டிணைவான அரசியல் போராட்டத்தை வெல்ல செயற்படுவோம் எனப் பிறக்கும் புத்தாண்டில் உறுதிபூணுவோம். ★

நன்றி: 'தமிழ்வின்' இணையம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...





உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.12.1986

* இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இந்திய அரசின் சொந்த யோசனைகளுடன் இந்திய இணை அமைச்சர்கள் குழு இலங்கை வருகிறது.
* தமிழர்களது பாரம்பரிய பிரதேசமான திருகோணமலையை உள்ளடக்காத எந்தத்தீர்வு யோசனையையும் ஏற்றுக்கொள்ள இயலாதென தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக் குழு இந்திய இணை அமைச்சர் குழுவிடம் தெரிவிப்பு.
* மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச மன்னிப்புச் சபை என்பன எமது நடவடிக்கைகளைப் பரிகசிக்கின்றன எனப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சோபால அட்டிகல பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிய சுற்று நிரு பத்தில் தெரிவிப்பு.

17.12.1986

* கிழக்கில் புதிதாகத் தமிழர் மாகாணம் ஒன்றை உருவாக்கும் விடயத்தில் தமிழர் அமைப்புக்களைத் தமது நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வரவைக்க முதலமைச்சர் எம்.ஜி.ஆர் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென இணை அமைச்சர் குழு எம்.ஜி.ஆரிடம் வேண்டு கோள்.
* இந்திய இணை அமைச்சர் குழு கொழும்பில் ஜனாதிபதி ஜே.ஆருடன் மூன்று நாள்களாகப் பேச்சு.

18.12.1986

* கொழும்பு வந்துள்ள இந்திய இணை அமைச்சர்கள் குழு, இலங்கைத்தமிழர், முஸ்லிம், மலையகத் தமிழர் தரப்புக்களின் தலைவர்களைத் தனித்தனியே சந்தித்து இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேச்சு.
* வடக்கு-கிழக்கு இணைப்பையும் எதிர்க்கிறோம், கிழக்கை மூன்றாகப் பிரிக்கும் யோசனையையும் எதிர்க்கின்றோம் என டாக்டர் பதியுதீன் முகமது தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் தூதுக்குழு வலியுறுத்து.
* இந்திய இணை அமைச்சர்கள் தூதுக்குழுவுடன் சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பேச்சு.

19.12.1986

* ஆனையிறவில் அரச படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் பலமணி நேரம் சண்டை. வாகனப் போக்குவரத்து ஸ்தம்பிதம்.
* அடகு நகைகளைத் திருப்பி ஒப்படைக்கக் கோரி யாழ்.குடாநாட்டு மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக மறியல்போராட்டம். வங்கிப் பணிகள் ஸ்தம்பிதம்.
* தற்போதைய அரசாங்கம் கையெழுத்திடும் உடன்படிக்கை எதனையும் வருங்கால அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாதெனச் சுதந்திரக்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ இணை அமைச்சர் குழுவிடம் தெரிவிப்பு.

20.12.1986

* கைதிகள் பரிமாற்றம் இருநாடுகளுக்கிடையில் இடம்பெறும் சம்பவம் எனக்கூறிய அமைச்சர் அத்துலத்முதலி தற்போது எம்முடன் கைதிகளைப் பரிமாற்றிக் கொண்டதன்மூலம் தமிழ் ஈழத்தைத் தனிநாடாக அங்கீகரித்துள்ளார் என விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு விமர்சிப்பு.
* சிப்பாய்கள்-புலிகள் பரிமாற்றத்தினால் புதிய நம்பிக்கை உணர்வு தோன்றியுள்ளதென தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி கருத்துத் தெரிவிப்பு.
* கைதிகள் பரிமாற்றம் விடுதலைப்புலிகளினால் விடுவிக்கப்பட்ட இரு இராணுவ வீரர்களை யாழ். கோட்டை முகாம் வாசலில் வைத்து கப்டன் கொத்தலாவல பொறுப்பேற்றார். விடுவிக்கப்பட்ட போராளிகள் இருவரையும் பாலாலி இராணுவ முகாம் வாசலில் வைத்து தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி வழியனுப்பிவைத்தார்.

21.12.1986

* ஆளும் கட்சியைச் சேர்ந்த கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்னை சென்று தமிழர் அமைப்புக்களைச் சந்தித்துப் பேச முடிவு.
* யுத்தத்தில் வெல்ல இயலாதுவிட்டால் சமாதானத் தீர்வொன்றைத்தான் நாம் காணவேண்டுமென வரவு செலவுத்திட்ட விவாதத்தில் நிதி அமைச்சர் ரொனி டி மெல் கருத்துத் தெரிவிப்பு.
* கிழக்கை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கும் இலங்கை அரசின் யோசனையை இந்திய இணை அமைச்சர்கள் நிராகரிப்பு.

22.12.1986

* இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் வரை இந்தியாவின் மத்தியஸ்தம் தொடரும். இலங்கைத் தமிழர்களை அது நடுவழியில் கை கழுவிவிடாது என இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி தெரிவிப்பு.
* இப்பொழுதும் கூட நாங்கள் இந்தியாவைத்தான் நம்புகின்றோம் என விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் பேட்டி.
* பிரபல வழக்கறிஞரும், அரசியல்வாதியும், மனித உரிமை இயக்கப்பிரமுகருமான செனற்றர் எஸ். நடேசன் கியூ.ஸி காலமானார்.

23.12.1986

* இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தியின் பணிப்பின் பேரில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இணை அமைச்சர்கள் குழு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருடன் பேச்சு.
* ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கமும் ரெலோ இயக்கமும் இணைந்து எம்மைத் தாக்கத் திட்டமிட்டதாலேயே நாம் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டோம் என விடுதலைப்புலிகளின் யாழ்.தளபதி கிட்டு தெரிவிப்பு.
* தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இரகசியப் பேச்சு நடத்தி போர் நிறுத்தமொன்றைக் கொண்டுவர அரசு ஆலோசித்து வருவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

24.12.1986

* பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தீவிரவாதச் சந்தேக நபர்களை சிறைச்சாலைக்கு மாற்ற அரசுமுடிவு.
* புதியயோசனைகளின் அடிப்படையில் இலங்கை அரசுடன் நேரடியாகப் பேச்சு நடத்துமாறு தமிழ் அமைப்புக்களுக்கு இந்திய அரசு ஆலோசனை.
* தமிழர்களுடன் ஒத்துழைத்து புதிய கிழக்கு மாகாண நிர்வாகத்தை நடத்த கிழக்கு மாகாண முஸ்லிம் தலைவர்கள் முன்வரவேண்டுமென இந்திய இணை அமைச்சர்கள் குழு கோரிக்கை.

25.12.1986

* நத்தார் தினத்தன்று போர்நிறுத்தம் செய்ய இணங்குமாறு அமைச்சர் அத்துலத்முதலி விடுத்த வேண்டுகோளுக்கு ஆயுதப்படையினர் முகாம்களுக்குள்ளேயே இருந்தால் எப்போதுமே யுத்த நிறுத்தத்தை அனுஷ்டிக்கலாமே என விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு தெரிவிப்பு.
* முஸ்லிம் மக்களது உரிமைகளை வென்றெடுக்க, அவசியம் ஏற்பட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆயுதம் ஏந்திப் போராடவும் தயங்கமாட்டாது என முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் அஷ்ரப் தெரிவிப்பு.

26.12.1986

* இனியும் இந்தியாவை நம்பாது நாமே தமிழர் குழுக்களுடன் நேரடியாகப் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி தெரிவிப்பு.
* முதலாவது அரசாங்கக்குழுவின் யாழ்ப்பாண விஜயத்தில் பங்குகொள்ள விரும்பிய பிரதி நீதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜாவின் கோரிக்கை உயர்பீடத்தால் நிராகரிப்பு.
* கொழும்புப் பேச்சுக்களில் உருவான நிலைப்பாட்டிலிருந்து இலங்கை அரசு பின் வாங்கியமை குறித்து இந்திய அரசு அதிர்ச்சி.

27.12.1986

* எட்டியாந்தோட்டை எம்.பி. வின்சென்ற் பெரேராவின் தலைமையில் மூன்று பேர் அடங்கிய அரசின் நல்லெண்ணத் தூதுக்குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம்.
* ஓமந்தை இராணுவ முகாம் முன்பாக புதிய தடை முகாம் அமைக்கப்பட்டு பயணிகள் சோதனைக்கு உட்டுபடுத்தப்படுகின்றனர்.
* இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான இந்திய அரசின் சகல முயற்சிகளுக்கும் தமது இயக்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும் என விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவிப்பு.

28.12.1986

* முதன்முதலாக அரசாங்க எம்.பி. ஒருவரது தலைமையில் வந்த நல்லெண்ணத் தூதுக் குழு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களுடன் இரண்டு மணிநேரம் இரகசியப் பேச்சு.
* அரச நல்லெண்ணத் தூதுக்குழுவுடனான பேச்சுக்களின் முடிவில் இலங்கை அரசை நம்பி நாம் இந்தியாவின் அனுசரணையின்றித் தனித்துப் பேச முடியாதென விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு கருத்துத் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணம் சென்று தமிழ்ப் போராளித் தலைவர்களைச் சந்தித்துப் பேச கிழக்கு மாகாண முஸ்லிம் பிரமுகர்களின் நல்லெண்ணக் குழுவொன்றை அனுப்பி வைக்க முயற்சி.

29.12.1986

* மட்டக்களப்பு ஸ்ரீவட்ட பதில் அரசாங்க அதிபர் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிப்பு.
* தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் விரும்பினால் 'ரெலோ' இயக்கம் தமிழ் நாட்டிலிருந்து வெளியேறத் தயாராகவுள்ளதாக அவ்இயக்கத் தலைவர் செல்வம் தெரிவிப்பு.
* தம்மிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைத் திருப்பித் தருவதுடன் கைதுசெய்யப்பட்ட தமது போராளிகளை விடுவிக்கும் வரை இனப்பிரச்சினை குறித்த பேச்சு எதிலும் தாம் பங்கு பற்றப் போவதில்லை என 'ரெலோ' இயக்கம் இந்திய அரசுக்குத் தெரிவிப்பு.

30.12.1986

* ஆயுதப்படையினர் மத்தியில் ஜே.வி.பி. இரகசியக் குழுவொன்றும் இயங்குவதாக அரச உயர்மட்டத்துக்குத் தகவல் கிட்டியுள்ளதாகத் தெரிவிப்பு.
* இலங்கை முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி வெளிநாட்டவர் எவரினதும் ஆலோசனை தேவையில்லை என தேசிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு.

31.12.1986

* விடுதலைப் புலிகளுக்கும் அரச குழுவுக்கும் இடையேயான இரண்டாம்கட்டப் பேச்சுக்கு முன்னோடியாக இரண்டு அம்ச நல்லெண்ணத் திட்டமொன்றினைச் சமர்ப்பிக்க அரசு ஆலோசனை.
* வங்கி, வரி, பொலிஸ், தபால், போக்குவரத்து உட்பட பல சிவில் சேவைகள் இவ்வாரம் முதல் யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப் படும்.

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## இராஜகுமார் புவிராஜ்
### யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி
வர்த்தகப் பிரிவு-3ஏ மாவட்ட நிலை- 19

நான் எனது ஆரம்பக்கல்வியை இந்து ஆரம்ப பாடசாலையிலும் தரம் 6-13 வரை கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் பயின்றேன்.

எனது சுயவிருப்பின்பேரிலேயே உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவை தெரிவு செய்து கொண்டேன். உயர்கல்வி கற்கும் காலத்தில் நான் பல இழப்புக்களை எதிர் கொண்டே எனது கல்வியை மேற்கொண்டேன்.

தரம் 9 வரை எனக்கும் கல்விக்கும் வெகுதூரம். பின்னர் தரம் 10 இல் எனக்குக் கிடைத்த வகுப்பாசிரியரின் புத்திமதியின் காரணமாகவே எனக்குக் கல்வியில் ஆர்வம் ஏற்பட்டது. எனினும் சாதாரணதரத்தில் 4ஏ,2பி,2சி, 2எஸ் எனும் பெறுபேற்றைப் பெற்று உயர் கல்வியைத் தொடர்ந்தேன்.

நான் உயர்தரத்தில் 3ஏ பெற்றமைக்கு முழுமுதற்காரணமான இறைவனுக்கும் பெற்றோருக்கும், எனக்கு அறிவூட்டிய ஆசிரியத் தெய்வங்களுக்கும், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் மற்றும் வேறுவகையில் உதவிபுரிந்த அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.



## சுவேந்திரன் சபினா
### யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயம்
வர்த்தகப் பிரிவு-3ஏ

நடுத்தரக்குடும்பத்தைச் சேர்ந்த நான் தரம் ஒன்றில் இருந்து தரம் ஐந்து வரை கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் போது ஆரம்பப் பாடசாலையின் அதிபர் ப.செல்லத்துரை நான் பல்கலைக்கழகம் வரை செல்ல வேண்டும் என அடிக்கடி கூறிக் கொள்வார்.

தரம் 6 இலிருந்து ஜி.சி.ஈ. சாதாரணதரம் வரை கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலே கல்வி கற்றேன்.

அங்கும் அதிபர் உட்பட ஆசிரியர்கள் அனைவரும் எனது கல்விப்பசிக்கு தீனி போட்டார்கள். அதன் பயனே இன்று இத்தகைய பெறுபேற்றினைப் பெறமுடிந்தது.

எனது தந்தை சாதாரண உழைப்பாளி. அம்மா வீட்டுப்பணி செய்பவர். ஜி.சி.ஈ. சாதாரணதரத்தில் சித்தியடைந்த நான் யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் உயர் தரத்தில் வர்த்தகத்துறையில் கல்வி கற்க இணைந்தேன்.

அவ்வேளை கல்விச் செலவிற்கும் ஆலோசனைபெறுவதற்கும் அவதிப்பட்ட வேளை வெளிநாட்டில் நிற்கும் எனது மாமா நாகரூபன் மற்றும் எனது சிறிய தாய் கலைவதனா ஆகியோர் கல்விக்கான நிதியை வழங்கி உதவினார்கள்.

ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கூறிய பெற்றோர்கள், மற்றும் கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், அத்துடன் கைதடி மேற்கு உறவுகள் அனைவருக்கும் எனது நன்றிகள்.



## டனிசா நவரெட்ணம்
### யாழ்.இந்து மகளிர் கல்லூரி
கலைப் பிரிவு-3ஏ மாவட்ட நிலை- 47

எனது ஆரம்பக்கல்வியை கற்சிலைமடு தமிழ்க்கலவன் பாடசாலையிலும் 7-13 வரை யாழ். இந்துமகளிர் கல்லூரியிலும் கல்வி கற்றேன். எனது தந்தை கூட்டுறவுச் சங்கத்தில் கடமை புரிகின்றார். தாயார் வீட்டுப் பணிப்பெண்ணாக உள்ளபோதிலும் எனது கல்விக்கு மிகவும் பக்கபலமாக இருந்துள்ளார்.

எனது உயர்தரக்கல்விக்கு மிகவும் உறுதுணை புரிந்த எனது ஒன்றுவிட்ட அண்ணனிற்கு எனது நன்றிகள். நான் அதிகாலையில் கற்பேன். அதுவே ஞாபகம் நிற்கக்கூடிய ஒரே வழி. எனது நண்பிகளும் நானும் குறித்த இலக்கினை அடைந்துள்ளோம். அதனை எண்ணி மனம் மகிழ்கிறேன்.

யாழ். நகரில் கல்வி கற்கச்செல்லும் மாணவர்களிற்கு எனது பெறுபேற்றின் மூலம் நான் கூறிக்கொள்வது என்னவெனில், சொந்த இடத்தில் உள்ள ஆசிரிய வளத்தினைப் பயன்படுத்தி முன்னேறிக் கொள்ளலாம் என்பதுதான். நன்றாக படித்து வாழ்வில் முன்னேற இனிவரும் மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.



## பிரசாந்தி குணரட்ணம்
### யாழ்.இந்து மகளிர் கல்லூரி
வர்த்தகப் பிரிவு-2ஏபி

நான் எனது ஆரம்பக் கல்வியை சென். பெனடிக்ற் கத்தோலிக்கப் பாடசாலையிலும். இடைநிலைக் கல்வியையும் உயர்தரக்கல்வியையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கற்றேன்.

எனது அப்பா கூலித் தொழிலாளியாகவும் அம்மா வீட்டுப் பணிப் பெண்ணாகவும் இருக்கின்ற போதிலும் எனது கல்விக்கு மிகுந்த ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவினார்கள். அதேபோல எனது நண்பிகள் பலரும் எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார்கள். ஆரம்பத்திலிருந்து இறுதிவரைக்கும் களைக்காமல், சளைக்காமல் கற்கும் மாணவர்களாலேயே உண்மையான வெற்றியினைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்காக அதிகாலையும், இரவும் கல்வி கற்றல் அவசியமாகும்.

எனது வெற்றிக்கு முழுமையான பங்களிப்பை வழங்கிய என்பெற்றோருக்கும், நண்பர்களுக்கும் அதிபர் ,ஆசிரியர்களுக்கும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

வர்த்தகத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்கள் கணக்கீட்டு பாடத்தினை மீள் பயிற்சி செய்து பார்ப்பதன் மூலமாக எதிர்பார்த்த இலக்கினை அடைய முடியும். வெளிநாட்டிலிருந்து எனது கல்வி முயற்சிகளுக்கே உதவிபுரிந்த மாமா, சித்தி, குடும்பத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் எனது அண்ணாவின் பல்வேறுபட்ட உதவியினாலும் இவை எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் ஆசியே எனது இப்பெறுபேற்றுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

சந்திப்பு:
தயான், அனுஷ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பணியிலும், சிவப்பணியிலும் சிறந்து விளங்கி 'சிவத்தமிழ்' விருதினைப் பெறுகின்ற சான்றோர்

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 85ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில் 'சிவத்தமிழ் விருது' பெறும் அறிஞர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நாளை நடைபெறும் சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்தநாள் விழாவின்போது இந்த விருதுகள் வழங்கப்படும் என துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் அறிவித்துள்ளார்.

அவர்களைப் பற்றிய விவரம் வருமாறு:

**முதுபெரும் கலைஞர் நாதஸ்வர வித்துவான் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் (ஜே.பி.) மாவிட்டபுரம்**

இலங்கையின் வரலாற்றில் முதன்மை பெறும் புண்ணிய தலங்களிலொன்றாகிய மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்துக்கு இசைச்சேவை செய்வதற்காக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட இசைவேளாளர் மரபில் பிறந்தவர் கலாபூஷணம் எஸ்.ஆர்.ஞானசுந்தரம். நாதஸ்வரக் கலையை மிகச் சிறுவயதிலேயே கற்று தனது தொண்ணூறு வயதிலும் அக்காலப் பாரம்பரியத்தைப் பேணிவரும் பெருங்கலைஞர். இசைவேளாளர் சங்கத்தை ஸ்தாபித்துப் பல பணிகளை நிறைவேற்றியவர். நாதஸ்வரக் கலையைப் பல பேருக்குக் கற்றுக்கொடுத்த விற்பன்னர். பத்திரிகைத்துறையிலும் மிகுந்த ஆர்வமுடைய இவர் நீண்டகாலமாகப் பல பத்திரிகைகளின் செய்தியாளராக விளங்கியவர். ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்ட மங்கள இசைப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிவர். சமூக சேவையில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்ட இப்பெருந்தகை பழைய வீமன்காமம் கிராமோதய சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுச் சிறந்த சேவையாற்றியவர். பழைய கூத்தியாவத்தைக் கிராம அபிவிருத்திச் சங்கம், மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், கூத்தியாவத்தை சனசமூக நிலையம், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கம்பன் கலைக்கழகம், காசநோய் தடுப்புச் சங்கம், தெல்லிப்பழை வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கம் போன்றவற்றில் மிக முக்கிய பதவிகளை வகித்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். ''சிலம்பொலி'' ''இசையாளன்'' என்ற மாதாந்த சஞ்சிகைகளை ஆரம்பித்து ஐம்பதுகளில் வெளியிட்டவர். பத்திரிகைகளில் பல கட்டுரைகள் எழுதிப் பாராட்டுப் பெற்றவர். இவரது தன்னலங் கருதாப் பணிகளைக் கௌரவித்து பல நிறுவனங்கள் கௌரவ விருது வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

வயதிலும் கலைப்பணியிலும், சேவையிலும் நிறைந்தவராக விளங்கும் இப்பெருந்தகைக்கு ''சிவத்தமிழ் விருது'' வழங்கிக் கௌரவிப்பதில் யாம் பெருமை கொள்கிறோம்.

இவர் பெற்ற ஏனைய கௌரவங்கள்:
1. கலாபூஷணம் - இலங்கை அரசு
2. சமூகத் தொண்டன் - யாழ்.அரச அதிபர்.

**சைவத்திரு சரவணமுத்து விநாயகரத்தினம் (இளைப்பாறிய முதன்மை ஆசிரியர்), தெல்லிப்பழை**

'புதுவீடு' பன்னாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்து வருபவர். சைவத்திரு.ச.விநாயகரத்தினம் தனது ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர்.கனகசபை பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியைத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் பெற்றார். பின்னர் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக ஆசிரியப் பணியில் இணைந்தார். ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் ஆசிரிய ஆலோசகர் தராதரம், உடற்கல்வி ஆசிரியர் தராதரம், இந்துசமய சிறப்புக் கற்கைநெறி, முதன்மை ஆசிரியர் பயிற்சிநெறி ஆகியவற்றைப் பெற்றார். வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் நடத்திய சைவசமய அறிவுப் போட்டியிலும், கிளிநொச்சி திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழாச் சபையினர் நடத்திய மனன எழுதுப் போட்டியிலும் முதற்பரிசாகிய தங்கப் பதக்கங்களைப் பெற்றார். விளையாட்டுத் துறையில் ஈடுபாடு கொண்டு உதைபந்தாட்டப் பயிற்றுனராகவும் மெய்வல்லுநர் பயிற்றுனராகவும் கடமையாற்றினார். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சைவசமய விவகாரங்களுக்குப் பொறுப்பாசிரியராக மாணவர்கள் பலரை நாவன்மை, பண்ணிசை, சைவசமய அறிவு ஆகிய போட்டிகளில் பங்குபெறச் செய்து பல தங்கப் பதக்கங்களைப் பெறுவதற்கும் கல்லூரி ஆலயத்தில் சமய விழாக்களைச் சிறப்புற நடத்தியும் பெரும் பங்களிப்பு வழங்கினார். ஆசிரிய சேவையின்போது வடமாகாண சிறந்த நல்லாசிரியர் விருதினைப் பெற்றார். 1979ஆம் ஆண்டிலிருந்து ஓய்வுபெறும் வரை வடமாகாணத்தின் சைவசமய ஆலோசகராகப் பணியாற்றினார்.

இவரது சிறப்பான சமயப் பணியாக சிவநெறிக் கழகப் பணியை குறிப்பிட வேண்டும். 02.10.1976இல் இக் கழகத்தை கீரிமலையில் நிறுவி இக்கழகம் மூலம் மாணவர்களிடையே சைவசமய அறிவை வளர்க்கும் நோக்குடன் நாவன்மை, பண்ணிசை, வினாடி வினா, ஏடு எழுதுதல், தொண்டுபடும் செயல்முறை ஆகிய போட்டிகளை நடத்தி வடமாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களிடையே சைவசமய அறிவையும் பயிற்சியையும் பெற வழிகாட்டினார். சிறந்த தேர்ச்சியும், பாண்டித்தியமும் கொண்ட சைவப் பெரியார்களைக் கொண்டு சித்தாந்த சாத்திரங்கள், சித்தாந்த தத்துவம், பண்ணிசை, இலக்கண, இலக்கிய வகுப்புக்களை முதியோரும் பயன்பெற வசதி செய்து கொடுத்தார். ஆண்டு விழாக்கள், பொங்கல் விழா, பாராட்டு விழா, சிவராத்திரி விழா, சைவத்திரு நூல்களின் அறிமுக விழா, திருமுறை மாநாடு, சித்தாந்த மாநாடு ஆகியவற்றை கீரிமலை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் நடத்தி சைவசமய அறிவைத் தெளிவாகப்பெற வசதி செய்து கொடுத்தார். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நிர்வாகசபை உறுப்பினராக 1986இலிருந்து இணைந்து இற்றைவரை சமயப் பணி செய்து வருகிறார். சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் மணிவிழாச் சபையின் இணைச் செயலாளராக இவர் பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இவ்வாறு தனியொருவராக சமயப்பணிகள் ஆற்றிய சாதனையாளர்.

இவர் பெற்ற ஏனைய கௌரவங்கள்
1. சைவமணி
2.சிவநெறித் தொண்டர்மணி
3.இறைப்பணிச் செம்மல்
4.சிவநெறிச்செம்மல்

**பொன்னம்பலம் கந்தையா (காந்தி ஐயா) (இளைப்பாறிய ஆசிரியர்), திருகோணமலை**

சைவத்தமிழ் பாரம்பரியம் காக்கும் மாதகல் கிராமத்தில் பிறந்தவர். மகாத்மா காந்தியடிகளின் மீது கொண்ட பற்றினால் தன் வாழ்வைக்காந்திய மார்க்கமாக வகுத்துக் கொண்டவர். ஆசிரியப் பணியால் பல ஏழை மாணாக்கரின் வாழ்வை மலரச் செய்த உத்தமர். கடந்த 67 வருடங்களாகத் திருகோணமலையில் சைவத்தமிழ்ப் பணிகளைச் செய்து வரும் இப் பெருந்தகை தற்போது தனது 94 ஆவது வயதிலும் பொதுப்பணியாற்றி வருவது பெருமைக்குரிய விடயமாகும். திருகோணமலை மாவட்டத்தில் சைவப் பாரம்பரியங்கள் அருகிப் போகாமல் காத்த பெருமைக்குரியவர்களில் இவர் முதன்மையானவர். கதர் ஆடையுடன், வெண்ணிறத் தாடியுடன் உலாவும் இவரைக் கண்டவுடனேயே மக்கள் கையெடுத்துக் கும்பிடுவார்கள். ''ஆனந்தம், ஆனந்தம்'' என்று கூறி ஆசீர்வதிப்பார். குறிப்பாக ஏழைகளின் மரணவீட்டுச் செலவைப் பொறுப்பேற்று பிறர் உதவி பெற்று நிறைவேற்றும் இவரது அந்திமகால உதவித் தொண்டு பற்றிப் போற்றாதவர்களில்லை.

இவர் பெற்ற ஏனைய விருதுகள்.
1. 'இறைபணிச் செம்மல்'- இந்துகலாசார அமைச்சு - கொழும்பு.
2. 'மூதறிஞர்'-கம்பன் கழகம்-கொழும்பு.
3. 'காந்தியச் சுடர்'-சிவயோகம் அறக்கட்டளை - லண்டன்.
4. 'ஆளுநர் விருது-2005' -வடக்கு கிழக்கு மாகாணசபை.
5. 'சமய சமூக காவலன்' - காந்திசேவா சங்கம் -திருகோணமலை.

**திருமதி பராசக்தி நவரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), திருகோணமலை'**

சைவத்தமிழ் பாரம்பரியம் காக்கும் அளவெட்டிக் கிராமத்தில் பிறந்தவர். அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தில் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியுடன் சமகாலத்தில் கற்றவர். உடுவில் மகளிர் கல்லூரியில் உயர் கல்வி கற்று ஆசிரியராக தன்பணி தொடர்ந்தவர். கொழும்பு பாத்திமா மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு வின்சன் கல்லூரி, திருகோணமலை விக்னேஸ்வராக் கல்லூரி, திருகோணமலை பெண்கள் மெதடிஸ்த கல்லூரி ஆகியவற்றில் சிறந்த தமிழ் ஆசிரியராக அரும்பணியாற்றியவர். திருநெல்வேலி சைவாசிரியகலாசாலையில் பண்டிதமணி போன்ற பெருமக்களிடம் கற்று சைவத்தமிழ் ஆர்வலராக விளங்கிய உயர்திரு.நவரத்தினம் என்பவரைத் திருமணம் செய்து சிறந்த தம்பதிகளாக திருகோணமலை மாவட்டத்தில் சமய, சமூகப்பணியாற்றியவர்கள். குறிப்பாக சிவயோக சமாசம் திருமலையில் உருவாவதற்குப் பெருந் தொண்டாற்றியவர்கள். அன்னதானப் பணியில் மிகுந்த தொண்டாற்றிய தம்பதிகள்.

சமய விழாக்கள் கருத்தரங்குகளை நடத்துவதில் பெரும்பங்கு கொண்டவர்கள். குறிப்பாக சிவத்தமிழ் செல்வி அன்னையின் இணைபிரியாத நண்பி.

---


## மரண அறிவித்தல்

### அமரசிங்கம் கிருமதாஷன் ஜோன்பப்றிஸ் (பப்றிஸ்)



தாழங்குடா, மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் அவிசாவளை, வெல்லம்பிட்டி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமரசிங்கம் கிருமதாஷன் ஜோன்பப்றிஸ் 03.01.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2010) புதன்கிழமை கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0033130388416 } (பிரான்ஸ்)
0033618902067 }
011 4876828 (கொழும்பு)

தகவல்:
ஐடன் (பிரான்ஸ்),
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.6

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டம் நாளை நண்பகல் 12 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.எஸ்.மாணிக்கராஜா அறிவித்துள்ளார்.

(50-16)


## வேலை வாய்ப்பு

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்ற ஒரு பெண் தேவைப்படுகின்றார். (கணனி அறிவுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

விரும்புவோர் நாளை (07.01.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன்னர் நேரில் சமுகமளிக்கவும்.

**விநாயகா**
தொலைத்தொடர்பு நிலையம்,
பல்பொருள் விற்பனை நிலையம்,
ம.ம.வி.வீதி, நெல்லியடி.

## ஐம்பதாவது அகவையும் ஐந்தாம் ஆண்டு நினைவலைகளும்

அன்னையின் மடியில் 06 * 01 * 1960



ஆழியின் பிடியில் 26 * 12 * 2004

### முத்துக்கிருஷ்ணர் பரமானந்தம் (ஆனந்தி)

06.01.2010

ஆழியன்னையின் சீற்றத்திற்கு
ஆளாகிய எம் இனிய ஆனந்தனே....
உம்மைப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து ஆனதோ?
அகவையும் ஐம்பது ஆகிற்றோ....?

கோப்பாய் மத்தி,கோப்பாய். குடும்பத்தினர்.

(93462)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைகளில் வாடும் தமிழ்க்கைதிகள் நேற்று முதல் உண்ணாவிரதப்போர்

## 'இம்முறை தீர்வு இன்றேல் உயிரை மாய்ப்போம்' - என்கிறார்கள் அவர்கள்

யாழ்ப்பாணம், ஜன.06

மகஸின் சிறைச்சாலை அரசியல் கைதிகள் உட்பட ஏனைய சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் நேற்றிலிருந்து இறுதிக் கட்டமாகச் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக விசாரணைகள் ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தாம் பல்வேறு துன்ப, துயரங்களை அனுபவித்து வருவதாகவும் இந்த நிலைமையில் தமது விடுதலைக்காக இறுதி உண்ணாவிரதத்தை தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர். இதுவரையில் தமது விடுதலையைக் கோரி உணவுத்தவிர்ப்பைப் பல தடவைகளில் நடத்தியுள்ளதுடன் நாட்டின் ஜனாதிபதி, நீதிஅமைச்சர் மற்றும் மனிதநேய அமைப்புக்களிற்கும், அரசியல் கட்சிகளிற்கும் தமது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தியும் நியாயபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

பல்வேறு தரப்பினதும் உறுதிமொழிகளை நம்பி ஏமாற்றம் அடைந்த நிலையில் எமது விடுதலையை வலியுறுத்தி இம்முறை இறுதிக்கட்டமாக நீராகாரமின்றி மீண்டும் சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் எமது கோரிக்கையை கருத்தில் எடுக்காத பட்சத்தில் உயிரை மாய்த்துக் கொள்வதைத் தவிர தமக்கு வேறு வழி இல்லை எனவும் மகஸின் சிறைச்சாலைக் கைதிகள் மிகவும் உருக்கமாக உதயனுக்குத் தெரிவித்துள்ளனர். மகஸின் சிறைச்சாலையில் உள்ள தாங்கள் உட்பட சுமார் நூற்றியிருபத்தைந்து அரசியல் கைதிகளும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-10)

## வர்த்தக வேலைத்திட்டக் கொடுப்பனவு இன்று

யாழ்ப்பாணம், ஜன.06

யாழ்ப்பாண இளைஞர் வர்த்தக வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செயயப்பட்ட இளைஞர், யுவதிகளிற்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு இன்று இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம், புனித பத்திரிசியார் வீதியில் உள்ள லொயலாஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இளைஞர், யுவதிகளின் தொழில் வாய்ப்பை மேம்படுத்துமுகமாக இலங்கை வர்த்தக மன்றமும் யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றமும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## உடனடி மீட்சி நடவடிக்கை குறித்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1. சிவில் நிர்வாகத்தையும் இயல்பு நிலையையும் ஏற்படுத்துதல்:-

1. கிராமசேவையாளர் அலுவலகம் முதற்கொண்டு அனைத்து சிவில் நிர்வாகக் கட்டமைப்புகளையும் மீள ஏற்படுத்துதல் - இராணுவ, பொலிஸ் மற்றும் அரசியல் தலையீடுகளிலிருந்து விடுவித்தல்.

2. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் அதன் பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவொன்று அமைக்கப்படும். இக்குழுவில் -

- ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர்
- பிரதேச செயலாளர்கள்
- ஏனைய அதிகாரிகள்
- நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களது பிரதிநிதிகள்
- உள்ளூர் அதிகார சபைகளின் பிரதிநிதிகள்
- நீதித்துறை அதிகாரிகள்
- பாதுகாப்புப் படையினர், அதன் தளபதிகள் வடக்குக் கிழக்கிற்கான அதிகாரிகள்
- பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் அதிகாரிகள்
- பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவர்.

இவர்கள் ஒருமாத காலத்திற்குள் உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்றை உருவாக்குவர்.

இதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்த மாதாந்த அறிக்கைகள் ஜனாதிபதி, அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றிற்குச் சமர்பிக்கப்படும்.

இதில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணித்து அது நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக ஜனாதிபதியின் கீழ்செயலகமொன்று அமைக்கப்படும்.

3. உடனடியாக ஜனாதிபதி செயலணியொன்றை அமைத்தல்.

4. தேசியப் பாதுகாப்பைக் கருத்தில் எடுத்த பின்னர், பாதுகாப்புப் படையினரைக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மாத்திரம் நிறுத்துதல். பாதுகாப்புப் படையினரை மீள நிறுத்தும் போது உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல்.

5.பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரின் தலையீடு இன்றி அனைவரும் நடமாடுவதற்கான சுதந்திரத்தை உறுதி செய்தல்.

6. தமிழ் பேசக்கூடிய பொலிஸாரை சாத்தியமான அளவிற்குப் பணியில் ஈடுபடுத்தல்.

11. துணை இராணுவக் குழுவினர் மற்றும் ஆயுதக் குழுக்களைத் தடைசெய்தல்.

1. அனைத்துத் துணை இராணுவக் குழுவினரையும் ஆயுதமேந்திய குழுவினரையும் உடனடியாகக் கலைத்தல்.

2. பொதுமக்கள் வாழும் பகுதிகளை ஆயுதங்கள் அற்ற பகுதிகளாக்குதல்.

3. படையினர், பொலிஸாரைத் தவிர அனுமதிப்பத்திரம் வைத்துள்ளவர்கள் மாத்திரம் துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படுவர்.

111. இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுதல், புனர்வாழ்வளித்தல்.

1. நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பிரிவினர் ஊடாக இந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்தல்.

2. இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர். வீடுகள் அழிக்கப்பட்டவர்களுக்கு வேறு தங்குமிடங்கள் வழங்கப்படும். மேலும் தம்மை மீளக்கட்டியெழுப்பவும், வாழ்வாதாரத்தை மீண்டும் ஏற்படுத்தவும் நிதியுதவி வழங்கப்படும்.

3. அத்தியாவசிய உணவு வழங்கப்படும். மருத்துவ நிலையங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற சமூக உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

IV. நிலமும் விவசாயமும்

1. தற்போது பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அனைத்துத் தனியார் நிலங்களும் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்படும்.

2. மேலே குறிப்பிடப்பட்ட குழுக்கள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

3. கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான நஷ்டஈட்டை அரசு வழங்குவதற்கான திட்டமொன்றைக் குழு முன்வைக்கும்.

✱ பின்வரும் குழுவினர் தொடர்பாக ஆராய்ந்து நீதியான, சட்டரீதியான தீர்வு காணப்படும்.

(அ) அரசிற்கு உரிய காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள்.

(ஆ) அரச காணிகளில் இருப்பதற்கு உரித்திருந்தும் உரிமை மறுக்கப்பட்டவர்கள்.

(இ) அரச காணிகளை சட்ட விரோதமாக ஆக்கிரமித்தவர்கள்.

(ஈ) அரச காணிகளைக் கண்மூடித்தனமாக பாரதீனப்படுத்தல் நிறுத்தப்படும். இதுவரை இடம்பெற்றவைகள் குறித்து மீள ஆராயப்படும். அத்தகைய பாரதீன நடவடிக்கை நிறுத்தப்படும்.

அரச காணிகள் வெளியாருக்குப் பாரதீனப்படுத்தப்பட்ட விடயத்தில் -

-வெளிப்படையாக மேற்கொள்ளப்படாத
- சகலருக்கும் சம வாய்ப்பை வழங்காத
- மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அந்தந்தப்பகுதி பிரதிநிதிகளுடன் உரிய ஆலோசனை மேற்கொள்ளப்படாத
- தேவையற்ற
- ஊழல் இடம்பெற்ற
- காணிக் கையளிப்பு விடயங்களிலேயே இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும்.

V. மீன்பிடித்துறை

1. மீன் பிடிப்பதற்கான முழுமையான உரிமை வழங்கப்படும்.

2.பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக மீன்பிடித் தொழில்துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் கடற்படையைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்படும்.

VI. வியாபார, வர்த்தகம்

1. பயணிகள் செல்வதற்கும் பொருள்கள், விவசாயம், மீன்பிடித்துறைப் பொருள்கள் கொண்டுசெல்வதற்குமான சகல கட்டுப்பாடுகளும் நீக்கப்படும்.

2. கப்பம்பெறுபவர்களுக்கு எதிராகக்கடும்நடவடிக்கைஎடுக்கப்படும்.

vii. போக்குவரத்து

1. ரயில் சேவை, யாழ். குடாநாட்டிற்குள் எவ்வித தாமதமுமின்றி மீள ஏற்படுத்தப்படும்.

2. கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்திற்கான சகல தடைகளும் அகற்றப்படும். இவற்றிற்கான கட்டணங்களும் குறைக்கப்படும்.

3.பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை வரை தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் புதிய ரயில் பாதை அமைக்கப்படும்.

viii. விசேட நிவாரணத் திட்டங்கள்

1. யுத்தத்தின்போது கொல்லப்பட்டவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு -

2. யுத்தம் காரணமாக அங்கவீனர்களானவர்களுக்கு -

- விசேட நிவாரணத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

ix. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்

1. குற்றச் செயல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரமில்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் ஒருமாதத்திற்குள் விடுவிக்கப்படுவர்.

2. யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்குப் பொதுமன்னிப்பு அடிப்படையில் புனர்வாழ்வளித்தல். (அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### கோவிந்து இராசம்மா



வசாவிளான் கிழக்கு, திக்கம்புரையைப் பிறப்பிடமாகவும் விளையாட்டு அரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்து இராசம்மா நேற்று (05.01.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கோவிந்துவின் அன்பு மனைவியும், சதானந்தசிவம் (சிவா), பவாநந்தினி (பவா), கௌரீஸ்வரி (கௌரி) ஆகியோரின் தாயாரும், புனித வித்தகன், மோகனவதனி (வதனி) ஆகியோரின் மாமியாரும் கதிரவேலு, மகாலிங்கம், தவராஜா, ஆனந்தராஜா, செல்வலிங்கம், முத்துலிங்கம் (முகிலன்), சரஸ்வதி ஆகியோரின் அக்காவும் காலஞ்சென்ற பசுபதி, கந்தையா மற்றும் நடேசு, துரையர்,கந்தசாமி, பாலசிங்கம், காலஞ்சென்ற சந்திரன் மற்றும் மணி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2010) புதன் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளையாட்டு அரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு,
கட்டப்பிராய்.

தகவல்
கோவிந்து (கணவர்),
கதிரவேலு (தம்பி).

(93477)

### கனகசபை சண்முகலிங்கம்



மடத்தடி வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்,கச்சாய் வீதி, பெரிய மாவடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சண்முகலிங்கம் நேற்று (05.01.2010)செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்

(அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-இராசம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற கணேசன் மற்றும் நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கௌரி,சசி,கிருத்திகா( JNCOE 8th batch) ஆகியோரின் அன்புத்தந்தையும், கிருபாகரன்,கங்கை வேணியார் ஆகியோரின் அன்பு மாமனாரும் தரணிக்கா, தேனுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2010) புதன்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/563924)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் ஓர் தனியார் தொலைத்தொடர்பு கம்பனிக்கு கணனி அறிவுள்ள, தொலைத்தொடர்பு உபகரணங்களைப் பராமரிப்பதற்கு ஆள் தேவை.தொழில்நுட்ப அறிவுள்ள தொழில்நுட்பக்கல்லூரியில் தொலைத்தொடர்பு இலத்திரனியல் சம்பந்தமான பாடநெறி பயின்றிருத்தல் வேண்டும். அத்துடன் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் வேண்டும்.கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடனும் நற்சான்றுப் பத்திரத்துடனும் உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: 3968 C/0 உதயன், யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
08
✱
02
✱
1950



மறைவு
07
✱
12
✱
2009

### அமரர் முருகன் யோகநாதன்

அன்பிற்கோர் இலக்கணமாய்
பொறுமைக்கோர் பொக்கிஷமாய்
சிரித்த முகமும் பூரித்த உங்கள் மேனியும்
எங்கள் உயிருள்ளவரை நீங்காதப்பா
உங்கள் பேரப்பிள்ளைகள் அப்பப்பா....
என்று அலறும் சத்தம் கேட்கவில்லையா அப்பா...

எமது தந்தையின் பிரிவுத் துயரில் கலந்து ஆறுதல் நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (06.01.2010) புதன்கிழமை காலை 6 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் திருப்பலிப் பூசையிலும் அதனைத் தொடர்ந்து எமது வீட்டில் நடைபெறும் காலை உணவு விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

10/12, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(93478)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு அடைப்பால் முடங்கியது ஆந்திரா
# இரு தரப்புகளும் எட்டிக்குப் போட்டியாகப் போராட்டங்கள்!

ஐதராபாத், ஜன. 06

தனித் தெலுங்கானாவுக்கு எதிராக ஆந்திராவில் நேற்றுமுன்தினம் நடந்த முழு அடைப்புப் போராட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியது.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தனித் தெலுங்கானா அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரித்தும், எதிர்த்தும் மாநிலத்தின் இரு பகுதிகளிலும் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆந்திராவின் இரண்டு பகுதிகளை சேர்ந்தவர்களும், போட்டி போட்டுக் கொண்டு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

கடந்த ஞாயிறன்று தெலுங்கானாவுக்கு ஆதரவாக ஐதராபாத்தில் 'மஹா கர்ஜனை' என்ற பெயரில் பிரமாண்ட மாணவர் பேரணி நடைபெற்றது.

இந்த நிலையில், தனி தெலுங்கானாவுக்கு எதிராக, ராயலசீமா மற்றும் கடலோர ஆந்திரப் பகுதியில் உள்ள 13 மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தால், ஐக்கிய ஆந்திராவில் உள்ள 13 மாவட்டங்களிலும் நேற்றுமுன்தினம் இயல்பு வாழ்க்கை முடங்கியது. பள்ளி, கல்லூரி, கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான அரசு பஸ்கள் இயக்கப்படவில்லை. ராயலசீமா பகுதியில் உள்ள தமிழக எல்லைப்பகுதியில் உள்ள சித்தூர் மாவட்டத்தில் முழு அடைப்பு நடைபெற்றது. கல்வி நிறுவனங்களில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த அரையாண்டுத் தேர்வுகள் தள்ளி வைக்கப்பட்டன. பக்தர்களின் வசதிக்காக, திருப்பதியில் இருந்து திருமலைக்கு மட்டும் பஸ்கள் இயக்கப்பட்டன.

சித்தூர் மாவட்டத்தில் வன்முறையில் ஈடுபட முயன்ற தெலுங்கு தேசம், பிரஜா ராஜ்ஜியம் கட்சிகளை சேர்ந்த 16 பேர் கைது செய்யப்பட்டனர். ராஜமுந்திரியில் வீதி மறியலில் ஈடுபட்ட அந்த நகரத்தின் மேயர் ஆதிரெட்டி வீரராகவம்மா உள்ளிட்ட 137 பேர் கைது செய்யப்பட்டனர். விஜயவாடாவில் முன்னாள் மேயர் மல்லிகா பேகம் கைது செய்யப்பட்டார்.

தனித் தெலுங்கானாவுக்கு நூதன முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், விஜயவாடாவில் தெலுங்கு தேசம் மற்றும் பிரஜா ராஜ்ஜியம் கட்சி எம்.எல்.ஏக்கள் கபடி விளையாடினர். காங் கிரஸ் எம்.எல்.ஏ. மல்லாடி விஷ்ணு தலைமையில் மனி தச் சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது. தெலுங்கு தேசம் எம்.எல்.ஏ. உமாமகேஸ் வர ராவ் நடை பயணம் மேற்கொண்டார்.

விஜயவாடா சந்திப்பு வழியாக செல்லும் 100 இற்கும் மேற்பட்ட எக்ஸ் பிரஸ் மற்றும் பாசஞ்சர் ரயில்கள், போராட்டம் காரணமாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு 5 மணி நேரத்துக்கும் மேல் தாமதமாகப் புறப்பட்டுச் சென்றன.

ஆந்திராவில் நடைபெறும் தொடர் போராட்டங்கள் காரணமாக, கடந்த 5 நாள்களாகவே ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது. 100 இற்கும் மேற்பட்ட ரயில்களின் நேரம் மாற்றி யமைக்கப்பட்டு இயக்கப்பட்டன.

பிரபல சினிமா தயாரிப்பாளரும், தெலுங்குதேசம் கட்சியின் முன்னாள் எம்.பியுமான டி.ராமாநாயுடுவின் பேரன் நடிகர் ரானா தக்குபதி நடித்து வரும் லீடர்



நிறுத்திவைக்கப்பட்டுள்ள பஸ்கள்.

என்ற சினிமாவின் படப்பிடிப்பு நேற்றுமுன்தினம் கோதாவரி நிலக்கரிச் சுரங்கத்தின் அருகே தொடங்கியது. திடீரென அங்கு திரண்டு வந்த தெலுங்கானா ஆதரவாளர்கள் படப்பிடிப்பை நிறுத்துமாறு எச்சரிக்கை விடுத்தனர்.

உடனே, இயக்குநர் சேகர்கம்முல அவர்களை சமாதானப்படுத்த முயன்றார். அப்போது தனித் தெலுங்கானாக் கோரிக்கைக்கு பகிரங்க ஆதரவு தெரிவித்தால் படப்பிடிப்பை தொடர்ந்து நடத்தலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று, ஐதராபாத்தில் ஹயத் நகரில் நடிகர் விஸ்வாஸ் கதாநாயகனாக நடிக்கும் படத்தின் படப்பிடிப்பை நிறுத்த தெலுங்கானா ஆதரவாளர்கள் திரண்டு வருகின்றனர் என ஹயத் நகர் பொலிஸார் எச்சரித்தனர். உடனே, அவர்கள் படப் பிடிப்பை ரத்து செய்துவிட்டு அவசர, அவசரமாக கிளம்பிச் சென்றனர்.

# செம்மொழி மாநாட்டை முன்னிட்டு கோவைக்கு ரூ. 178 கோடி ஒதுக்கீடு

சென்னை, ஜன. 06

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி கோவையில் ரூபா 178 கோடியில் 3,840 குடியிருப்புகள் மற்றும் 96 கி.மீ. நீளமுள்ள 72 வீதிகளை மேம்படுத்தும் பணிகள் நடக்கவிருக்கின்றன என முதல்வர் கருணாநிதி கூறினார்.

கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு ஜூன் 23 முதல் 27 வரை நடக்கிறது.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கோவையில் நடக்க உள்ள உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை முன்னிட்டு, ஜவகர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நகர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க ரூபா 118 கோடியில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய 3,840 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, உக்கடத்தில் ரூபா 68 கோடியில் 2,232 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், அம்மன்குளத்தில் ரூபா 50 கோடியில் 1,608 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் கட்டப்பட உள்ளன.

மாநாடு நடக்கவுள்ள கொடீசியா வளாகம் அமைந்துள்ள சேலம் கொச்சி வீதியை இணைக்கும் கோவை ரயில் நிலையம், பஸ் நிலையம், விமான நிலையம் ஆகியவற்றுக்கான வீதிகள் முதலான கோவை மாநகர மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள 96 கிலோ மீற்றர் நீளமுள்ள 72 வீதிகளை ரூபா 59 கோடியே 85 லட்சம் செலவில் மேம்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார் - என்றுள்ளது.



உலகத் தமிழ் மாநாட்டையொட்டி கோவை மத்திய சிறை வளாகத்தில் செம்மொழி மாநாட்டுப் பூங்கா அமைக்கப்படுகிறது. அதற்கான இடத்தை கனிமொழி எம்.பி. ஆய்வு செய்தபோது...

# சூரியனை ஆராய நவீன 'ரெலஸ்கோப்' 2014 இல் ரொக்கெட்டில் அனுப்பப்படும்
## விஞ்ஞானி ஜான் மேத்தர் அறிவிப்பு

திருவனந்தபுரம், ஜன. 06

சூரியனை ரொக்கெட்டில் சென்று ஆராய நவீன 'ரெலஸ்கோப்' 2014 ஆம் ஆண்டு அனுப்பப்படும் - என்று நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஜான் மேத்தர் கூறினார்.

நேற்றுமுன்தினம் கேரள பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த கருத்தரங்கில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

விண்வெளியில் இதுவரை நாம் கண்டுபிடித்தது ஒரு சிறிய அளவுதான். கண்டுபிடிக்காதவை இன்னும் வானளாவியது. அதைப்போல ஒவ்வொரு கோள்களை பற்றியும் ஓரளவுதான் நாம் தெரிந்து அறிந்து கொள்ள முடிகிறது.

குறிப்பாக சூரியன் எவ்வாறு ஒளியை தருகிறது? சொல்ல முடியாத அளவுக்கு அனல்க்கும் வெப்பத்தை எப்படி தருகிறது? என்பதற்கான காரணத்தை அடிப்படையாக மட்டுமே கண்டுபிடித்துள்ளோம். அதைப்போல சூரியனில் உள்ள முழு மூலப் பொருள்களையும், முழு அமைப்புகளையும், முழு இயக்கத்தை முழுமையாக நாம் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் அதனுடைய வெப்பம்தான். எனவே வெப்பத்தை தாங்கக் கூடிய திறன் கொண்ட, சக்தி கொண்ட நவீன தொலைநோக்கியைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறோம்.

அந்தத் தொலைநோக்கியை ரொக்கெட்டில் சூரியனின் அருகில் சென்று சூரியன் பற்றி ஆராய்ச்சி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொலைநோக்கி 2014 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளில் கூட்டமைப்புக்கு சொந்தமான ரொக்கெட்டில் அனுப்ப முடிவு செய்யப்பட்டு உள்ளது - என்றார்.

# வடமாநிலங்களில் கடும் குளிருக்கு இதுவரை 120 பேர் பலியாகினர்

புதுடில்லி, ஜன. 06

வட மாநிலங்களில் குளிருக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்தது. உத்தரப் பிரதேசத்தில் மட்டும் குளிருக்கு இதுவரை 110 பேர் பலியாகி உள்ளனர்.

வட மாநிலங்களில் குளிர் வாட்டி எடுக்கிறது. காஷ்மீர், இமாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் குளிர் காற்றுடன் கடுமையான பனிப்பொழிவும் இருக்கிறது.

ஜம்மு - ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் குவாசிகண்ட்டுக்கும் பனிகால் என்ற இடத்துக்கும் இடையே வீதி முழுவதும் பனிப்பொழிவால் மூடப்பட்டிருப்பதால் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் காஷ்மீர் மாநிலம் பிற பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. பனி மூட்டத்தின் காரணமாக ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் காலையில் விமானங்கள் வந்து செல்வதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

குளிருக்கு உத்தரப் பிரதேசத்தில் கடந்த ஞாயிறன்று இரவு 40 பேரும், பீகாரில் நேற்றுமுன்தினம் 8 பேரும், அரியானாவில் 2 பேரும் பலியானார்கள். இதைத்தொடர்ந்து, வட மாநிலங்களில் குளிருக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்தது. உத்தரப் பிரதேசத்தில் மட்டும் குளிருக்கு இதுவரை 110 பேர் பலியாகி உள்ளனர்.

# மீன்பிடிச் சட்டப் பிரேரணையை அடியோடு கைவிட வேண்டும்
## வைகோ வலியுறுத்து

நாகர்கோவில், ஜன. 06

மீனவர்களுக்கு இந்திய அரசு துரோகம் இழைத்து வருகிறது. தற்போது இயற்றியுள்ள கடல்மீன்படி ஒழுங்குபடுத்தும் சட்டத்தை மத்திய அரசு அடியோடு கைவிட வேண்டும் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார்.

நேற்றுமுன்தினம் நாகர்கோவிலில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர் மேலும் அங்கு கூறியவை வருமாறு -

மீனவர்களுக்கு இந்திய அரசு துரோகம் இழைத்து வருகிறது. தற்போது மத்திய அரசு இயற்றியுள்ள கடல்மீன்படி ஒழுங்குபடுத்தும் சட்டம், இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு மோசமான சட்டம் ஆகும். இதை ஆலோசிப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது. இதில் ஆலோசிப் பதற்கு என்ன இருக்கிறது? அடியோடு கைவிட வேண்டும்.

முல்லைப்பெரியாறு பிரச்சினையை வலியுறுத்தி எனது தலைமையில் கம்பத்தில் பெரிய போராட்டம் நடந்தது. முல்லைப் பெரியாறு அணையில் எந்தப் பாதிப்பும் இல்லை. உடையும் என்பதோ, உடைந்தால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதோ இல்லை. கேரள அரசு பொய்பிரசாரம் செய்து வருகிறது. 3 கட்டமாக அணை வலுப்படுத்தப்பட்டு உள்ளது.

எனவே, முல்லைப்பெரியாறு அணையைச் சேதப்படுத்தும் எந்த முயற்சியிலும் கேரள அரசு ஈடுபடக்கூடாது. அப்படி ஈடுபட்டால் கேரளாவுக்கு பொருளாதாரத் தடை ஏற்படுத்தும் முயற்சியை நாங்கள் செய்வோம். - என்றார்.

**இந்தியச் செய்திகள்**

# தமிழீழம் மலரும் என்பது மாயை
## தமிழகக் காங். தலைவர் கூறுகிறார்

சென்னை, ஜன. 06

தனித் தமிழீழம் மலரும் என்பது வெறும் மாயை. தனி ஈழம் அமையும் என்று கூறி மக்களை ஏமாற்ற சிலர் முயல்கின்றனர் - என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.வீ. தங்கபாலு கூறினார்.

தென்சென்னை மாவட்ட காங்கிரஸ் சார்பில் தீவிரவாத எதிர்ப்புக் கருத்தரங்கு சென்னையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. காங்கிரஸ் உள்ளதால்தான் இங்கு ஜனநாயகம் காக்கப்படுகிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்க, தீவிரவாதத்தை வேரறுக்க எந்த விளைவை சந்திக்கவும் காங்கிரஸ் கட்சி தயாராக உள்ளது.

தமிழ்நாட்டில் 2004ஆம் ஆண்டிலி ருந்து தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது. மத்திய, மாநில அரசுகளின் செயற்பாடு களில் குறை கூற முடியாத சிலர், வெளிநாட்டு சக்திகளின் துணையுடன் தமிழகத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றனர்.

தனித் தமிழ் ஈழ நாடு மலரும் என்று சிலர் இங்கு தொடர்ந்து கூறி வருவது வெறும் மாயை. தனி ஈழம் என்று கூறி மக்களை ஏமாற்ற அவர்கள் முயல்கின்றனர் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமரவீர வெலகெதர அசத்தல்; இலங்கையிடம் வீழ்ந்தது இந்தியா

மிர்பூர், ஜன.06

சமரவீரவின் அதிரடிச் சதம் கைகொடுக்க இந்திய அணியை 5விக்கெட்டுக்களினால் வீழ்த்தியது இலங்கை.

பங்களாதேஷில் நடைபெற்று வரும் முக்கோணச் சுற்றுக் கிரிகெட் போட்டியில் நேற்று இலங்கை - இந்திய அணிகள் களமிறங்கின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் சங்கக்கார முதலில் களத்தடுப்பை தேர்ந்தெடுத்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இந்திய அணியின் ஆரம்ப வீரர்கள் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்த போதும் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரியத்தொடங்கின. அணி 71ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் ஷேவாக் 47 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த யுவராஜ்சிங்கும் தோனியும் மிக மெதுவான ஓட்ட அதிகரிப்பையே காட்டினர். இருவரும் 23ஓவர்களில் 99ஓட்டங்களைச் சேர்த்தனர். யுவராஜ்சிங் 74ஓட்டங்களையும் டோனி 37 ஓட்டங்களையும் பெற்றனர். ரெய்னா 35, ஜடேஜா 39 என ஆட்டமிழக்க ஹர்பஜன் சிங் ஒரு ஓட்டத்துடனும் சஹீர் கான் 2 ஓட்டங்களுடனும் பெவிலியன் திரும்பினர். 50ஓவர்கள் முடிவில் இந்திய அணி 279 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இலங்கையணி சார்பில் பந்து வீசிய வெலஹெதர66 ஓட்டங்களை கொடுத்து 5விக்கெட்டுக்களையும் துஷார, பெரேரா ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

280 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி 48ஓவர்களில் 5விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 283ஓட்டங்களைப் பெற்று போட்டியில் தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

சங்கக்கார 60ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க சமரவீர 11பௌண்டறிகளுடன் 105 ஓட்டங்களையும் பெரேரா 36 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன்சிங் 3விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி 8புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (06)

# முன்னாள் புலி உறுப்பினர்கள் 148 பேருக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் பயில அனுமதி

## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

கொழும்பு, ஜன.06

புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் புலி உறுப்பினர்களில் பட்டதாரி மாணவர்களாகக் காணப்படும் 148பேருக்கும் பல்கலைக் கழகக் கல்வியைத் தொடர்வதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தினூடாக அனுமதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத்துடன் பேச்சு நடத்தியுள்ளதாகவும் இதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

இவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது புலிகள் இயக்கத்தினால் பலாத்காரமாக படையில் சேர்க்கப்பட்டனர். இதனால் மேற்படி 148 பட்டதாரி மாணவர்களும் தமது கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனதாக தயா ரத்னாயக்கா கூறினார்.

148 பட்டதாரி மாணவர்களும் தமது உயர்கல்வியைத் தொடரவிரும்புவதாகவும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுடன் இணைந்ததாக யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க அவர்களிற்கு அவகாசம் வழங்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 11,544 முன்னாள் புலி உறுப்பினர்கள் வவுனியா உட்பட 18புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் 273 மாணவர்கள் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றனர். ஏனையவர்களிற்கு தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் கல்வி அறிவு பெறக்கூடிய அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்படுவதோடு ஏனையவர்களிற்கு தொழிற்பயிற்சி வழங்க சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் ஆணையாளர் கூறியுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ)

## வாரணம் எவ்.எம் ஒலிபரப்புச் சேவை

வாரணம் எவ்.எம் சர்வதேச இணைய வானொலியின் யாழ்.மாவட்ட ஒலிபரப்பு அங்குரார்ப்பண நிகழ்வும் ஒலிபரப்பு இதழியல் பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். இந்நிகழ்வில் பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் துறைசார் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஒ-10)

# குடாநாட்டு மக்களின் தேவைகளை ஆராய மக்கள் வங்கியின் உயரதிகாரிகள் குழு வருகை

## கிராமங்கள் தோறும் நேரடியாகச் சென்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 06

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், யாழ்.மாவட்ட மக்களின் வங்கித்தேவைகளை இனங்கண்டறிவதற்காகவும், புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும், மக்கள் வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளது.

மக்கள் வங்கியின் உதவிப்பொது முகாமையாளர்களான கே.பி.ராஜபக்ஷ, எஸ்.ஏ. ஆர்.எஸ். சமரவீர, ஜி.ஜி.சி.ஆரியரட்ண, ஆர்.எம்.எஸ்.பி.ரட்னாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ள இக் குழுவினர் கிராமங்கள் தோறும் விஜயங்களை மேற்கொண்டு, அவ்வப்பகுதி மக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக இக் குழுவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை பிரதேசத்தில், பொலிகண்டி, மந்திகை, கற்கோவளம் போன்ற கிராமங்களிற்கும் நெல்லியடி பிரதேசத்தில், கரணவாய், கட்டைவேலி, வதிரி போன்ற கிராமங்களுக்கும் மற்றும் வல்வெட்டித்துறை பிரதேசத்தில் ஆதி கோவிலடி, கம்பர் மலை, வல்வெட்டி போன்ற கிராமங்களிற்கும் விஜயம் செய்து மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகளைக் கண்டறிந்துள்ளனர்.

தொடர்ந்து, நேற்று செவ்வாய்க்கிழமை அச்சுவேலிப் பிரதேசத்தில் புத்தூர் கிழக்கு, ஆவரங்கால் கிழக்கு, இடைக்காடு ஆகிய கிராமங்களுக்கும் சங்கானைப் பிரதேசத்தில் சங்கானை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை ஆகிய கிராமங்களிற்கும் சுன்னாகம் பிரதேசத்தில் அளவெட்டி, நீர்வேலி தெற்கு, மற்றும் சுன்னாகம் மக்கள் வங்கி கிளையிலும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக இன்று புதன் கிழமை இந்தக் குழுவினர் யாழ்.நகரப்பகுதி மற்றும் சுதுமலை, சண்டிலிப்பாய், பகுதிகளிலும் நாளை வியாழக்கிழமை உரும்பிராய், பாஷையூர், கொழும்புத்துறை, ஊர்காவற்றுறை, வேலணை, கோண்டாவில், கொக்குவில் மற்றும் கல்வியங்காடு பகுதி மக்களுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

பிரதேச ரீதியாக நடைபெறுகின்ற இக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்வதனூடாக சகல மக்களும் மக்கள் வங்கியின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் புதிய கடன் வசதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என உதவிப்பொது முகாமையாளர் த.க.ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (50-224)

# சாவகச்சேரியில் கோர விபத்து இளைஞர் பலி! 7பேர் காயம்!

யாழ்ப்பாணம், ஜன.06

ஏ-9வீதியில் உள்ள வீதித் தடையில் லொறியைத் திருப்பிய போது வீதியோர மருத மரத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் பலியானார். மற்றும் ஏழு பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் சிக்கிய லொறியின் முன் பக்கம் சேதமடைந்து சின்னாபின்னமாக காட்சியளித்தது. இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10மணிக்கு சாவகச்சேரி நுணாவில்குளம் கண்ணகை அம்மன் கோவில் வீதிச் சந்தியில் இடம் பெற்றது.

மிருசுவிலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விறகு ஏற்றிச் சென்று பறித்து விட்டு திரும்பும் வேளையிலேயே இந்தச் விபத்து நடைபெற்றுள்ளது.

இறந்தவரின் சடலத்தையும், காயமடைந்தவர்களையும் பொலிஸார் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். இந்தச் சம்பவத்தில் மிருசுவில் தவசிக்குளத்தைச் சேர்ந்த செல்வராசா மேஸ்வரன் (வயது 25) என்பவரே பலியானவர் ஆவார். (ஒ-16-207)

# நிவாரணக் கிராமங்களின் மக்களும் கிளிநொச்சியில் வாக்களிக்க ஏற்பாடு

கொழும்பு, ஜன.06

இடம்பெயர்ந்து நிவாரணக் கிராமங்களில் தங்கியிருப்பவர்களும், சொந்தக் கிராமங்களில் மீளக்குடியேறியவர்களும் வாக்களிப்பதற்கு வசதியாக கிளிநொச்சி மாவட்டத்தில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான திருமதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மீளக்குடியேறிய மக்களும், நிவாரணக் கிராம மக்களும் ஒரே இடத்தில் வாக்களிப்பதற்கு வசதியாக 95வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும். இவற்றில் கொத்தணி வாக்குச் சாவடிகளும் உள்ளடங்குகின்றன.

நிவாரணக்கிராமங்களிற்கென 70கொத்தணி வாக்களிப்புச் சாவடிகள் அமைக்கப்படும். பூநகரி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, கரைச்சி ஆகிய இடங்களிலேயே வாக்குச் சாவடிகள் நிறுவப்படவுள்ளன. (ஒ)

# வன்னியில் மெதடிஸ்த திருச்சபையின் 11 தேவாலயங்களும் சேதம்

## அங்கு சென்று திரும்பிய குருமார் தெரிவிப்பு

பருத்தித்துறை, ஜன. 06

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் பேரருட்திரு. டபிள்யூ.பி.எப நேசன் யோசப் தலைமையில் இலங்கை மெதடிஸ்த திருச்சபை குருமார் கடந்த சனிக்கிழமை வன்னிக்கு விஜயம் செய்திருந்தனர்.

இந்தக் குருமார் கிளிநொச்சிப் பிரதேசத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தேவாலயங்களையும் பார்வையிட்டார்கள். அங்குள்ள திருச்சபையின் 11தேவாலயங்களும் சேதமடைந்து காணப்படுகின்றன என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்றப்பட்ட மக்களையும் அவர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்கள். (ஒ-190)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள் குடியிருப்பாளர்களே!

## யாழ்.மாவட்ட சுகாதாரத்திணைக்களம் வேண்டுகோள்

யாழ்.மாவட்டத்தில் தற்போது டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. இதுவரை 400இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 8 இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இந்நோ யைக் கட்டுப்படுத்த அனைத்து வீட்டு உரிமையாளர்களினதும், குடியிருப்பாளர்களினதும் ஒத்துழைப்பும், பங்களிப்பும் மிக அவசியம். உங்கள் வீட்டு வளவில் உற்பத்தியாகும் டெங்குபரப்பும் நுளம்புகளால் முதலில் உங்கள் குடும்பத்தினருக்கே ஆபத்து என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி இந்த அறிவித்தலை யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களம் விடுத்துள்ளது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக பொதுமக்கள் மற்றும் பொது நிறுவனங்கள் போன்றவை காட்டிவரும் ஆர்வம் குறித்து திணைக்களம் பாராட்டுத் தெரிவித்துள்ள அதேசமயம் பின்வரும் செயற்பாடுகள் மூலம் டெங்கைக்கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பையும் கோரியுள்ளது.

* டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் சிரட்டைகள், இளநீர் கோம்பைகள், பொலித்தீன் பைகள், தகரப்பேணிகள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், பழைய ரயர்கள் என்பவற்றை எரிக்க வேண்டும் அல்லது புதைக்க வேண்டும். இதற்கான வசதிகள் இல்லாதவிடத்து உள்ளூராட்சி மன்ற குப்பை அகற்றும் வாகனங்கள் மூலம் வெளியே அகற்ற வேண்டும்.
* மீன் தொட்டிகளில் நீரை வாரத்திற்கு இருதடவை மாற்ற வேண்டும்.
* தண்ணீர் பீலிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
* கழிவுநீர் வடிகால்களில் நீர் தேங்காதவாறு அகற்ற வேண்டும்.
* பூச்சாடிகளில் கீழ் உள்ள தட்டில் தங்கியுள்ள நீரைத் தினமும் அகற்ற வேண்டும்.
* வீட்டுச் சுற்றாடலை புல், பூண்டுகள், பற்றைகளின்றித் துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.
* யாழ்.மாவட்டத்தில் உரிமையாளர்கள் இன்றி பராமரிப்பின்றி இருக்கும் காணிகளில் டெங்கு நுளம்புகள் பெருகுகின்றன. இவற்றைப் பராமரிப்பவர்கள் உடனடியாகச் சுத்திகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றேல் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் நிர்ப்பந்திக்கப்படுவர். (ஒ-50)

# கிளிநொச்சியில் 5 பாடசாலைகளில் ஆயிரம் மாணவர்கள் கற்கின்றனர்

## அரச அதிபர் திருமதி கேதீஸ்வரன் தகவல்

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் ஐந்து பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் ஆரம்பமான முதலாம் தவணையுடன் இந்தப் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, இந்து ஆரம்பப் பாடசாலை, கனகபுரம் மகாவித்தியாலயம், பற்றிமா பாடசாலை, புனித் தெரேசா பெண்கள் பாடசாலை ஆகிய பாடசாலைகளே மீளத் திறக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 1,000 மாணவர்கள் கல்வி கற்பதாகவும் அரச அதிபர் கூறினார்.

நிவாரணக்கிராமங்களில் தங்கியிருந்து மீளக்குடியமர்ந்த மாணவர்கள் மீண்டும் ஆரம்பமான இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்க வருகின்றனர். இவர்களுக்கு கற்பிக்கவென யாழ்ப்பாணம், வவுனியாவிலிருந்து ஆசிரியர்கள் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# கூட்டமைப்பினர் திங்கள் இரவு கோத்தபாயவுடன் ஆலோசனை

கொழும்பு, ஜன். 06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டத் தலைவர்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு பத்துமணி முதல் சுமார் ஒரு மணி நேரம் பேச்சுகள் இடம்பெற்றன.

கோத்தபாய ராஜபக்ஷவின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுகளில் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா எம்.பி., சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றே சம்பந்தனும் மற்றைய இருவரும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரைச் சந்தித்தனர்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதியாகக் கடமையில் அமர்த்தியமையால் தாம் எதிர்நோக்கிய நெருக்கடிகளை இந்தச் சந்திப்பின்போது கோத்த பாய ராஜபக்ஷ, தமிழ்க்கூட்டமைப்புத்தலைவருக்கு விளக்கினார் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் விவகாரத்தில் ஜனாதிபதிக்கோ, பாதுகாப்புச் செயலாளருக்கோ தனிப்பட்ட விரோதமான நிலைப்பாட்டில் தாங்கள் இல்லை என்பதைக் கூட்டமைப்பினர் இந்தச் சந்திப்பின்போது பாதுகாப்புச் செயலாளருக்கு எடுத்து விளக்கினர்.

எனினும், தங்களின் இனம், சமூகம் கருதி - தனிப்பட்ட விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பால் சென்று, அரசியல் முடிவுகளைத் தாங்கள் எடுக்கவேண்டியவர்களாக உள்ளனர் என்று பாதுகாப்புச் செயலாளருக்குத் தமிழ்க் கூட்டமைப்பினர் தெரிவித்தனர் என்றும் கூறப்பட்டது.

## அவசரகாலச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் எதிர்த்து வாக்களித்தது. ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. (சி)

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலச்சட்டம்தான் நாட்டை ஆட்சி செய்கிறது. இதனால் வன்முறை அதிகரிக்கின்றது. தமிழ் பேசும் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

மக்களின் அடிப்படை உரிமைகள் முற்றாக மீறப்படுகின்றன. உலகில் எந்த நாட்டிலும் அவசரகாலச்சட்டம் இவ்வாறு நீடிக்கப்படுவதில்லை. இந்த நாட்டில்தான் அது மாதக்கணக்கில் நீடிக்கப்படுகின்றது.

### அவசரகாலத்தை நீடித்துக்கொண்டு நீதியான தேர்தல் நடத்த முடியுமா?

இந்த அவசரகாலச்சட்டத்தை நடைமுறைப் படுத்திக் கொண்டு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த முடியுமா? இது மோசடிமிக்க தேர்தலாகவே அமையும்.

தென்னாபிரிக்காவில் முதல் மாதம் 21 நாள்களுக்குத்தான் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். பின்னர் மூன்று மாதங்கள் நீடிக்க முடியும். இருப்பினும், அதற்கு 60 வீத ஆதரவு நாடாளுமன்றில் தேவை.

இந்தியாவில் நாடாளுமன்றின் இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு அவசரகாலச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட முடியும். பிறகு ஆறு மாதங்களுக்கு அதை நீடிக்க முடியும். மொத்தமாக ஒரு வருடத்திற்கு மேல் இச்சட்டத்தை நீடிக்க முடியாது. மேற்படி நீடிப்பிற்குக்கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு நாடாளுமன்றில் தேவை.

ஆனால், இலங்கையில் மாத்திரம் இச்சட்டம் பல மாதங்களாக நீடிக்கப்படுகின்றது. இதன்மூலம் அரசு பக்கச்சார்பாகச் செயற்படுகிறது. இச்சட்டம் தொடர்ந்து நீடிக்கப்படுவதால் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படும் ஆபத்துக் குறித்து எவரும் பேசுவதில்லை.

### கிழக்கின் சிறுபான்மை இன மக்களின் நிலம் அபகரிப்பு

இந்த மாதிரியானதொரு சூழ்நிலையில் தான் கிழக்கில் சிறுபான்மை இன மக்களின் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.

சம்பூரில் உப்பளம் ஒன்றை அமைப்பதற்காக ஆயிரத்து 805 ஏக்கர் நிலம் அபகரிக்கப்படுகின்றது. இதன்மூலம் மூவின மக்களும் பாதிக்கப்படுகின்றனர். சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் இதனால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக நான் நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் பேசினேன். பஸில் ராஜபக்ஷவின் கவனத்திற்கும் கொண்டு வந்தேன். ஆனால், அதை அவர் மறுத்துள்ளார். மக்களின் காணிகளை அபகரித்து உப்பளம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் எவையும் இடம்பெறவில்லை என்று பஸில் கூறினார். இருப்பினும், மிகவும் இரகசியமான முறையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அதேபோல், வன்னியில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் அமைப்பதற்காக மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. பாரியதோர் இராணுவ மயமாக்கல் அங்கு இடம்பெறுகின்றது.

தமிழ் மக்களை இந்த அரசு சமமாக நடத்தவில்லை என்று தமிழ் மக்கள் உணர்கின்றனர். தமிழ்ப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் இவ்வாறான இராணுவமயமாக்கல் மற்றும் நில அபகரிப்பு போன்றவற்றை இனிமேலும் அனுமதிக்க நாம் தயாரில்லை - என்றார். (அ-சி)

## பஸில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்குச் சென்று உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியேற்று வது குறித்த மாநாட்டில் பங்குபற்றுவார்.

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவிலில் பிற்பகல் நடைபெறும் யாழ் மாவட்ட விவசாயிகளிற்கான விசேட கூட்டத்திலும் அதன் பின்னர் சில நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார். (அ)

## தனியார் கல்வி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயைப்பரப்பும் நுளம்புகள் பெரும்பாலும் காலை 6 மணி முதல் 9 மணி வரையும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரையுமே கடிக்கின்றன. பெரும் பாலான தனியார் கல்வி நிலையங்கள் இந்நேரங்களிலேயே இயங்குகின்றன. தனியார் கல்வி நிலையங்கள் மூலம் டெங்கு நோய் தீவிரமாக பரவும் ஆபத்து காணப்படுகின்றது. இவ்வாறு சுகாதார சேவைகள் திணைக்களம் எச்சரித்துள்ளது.

தனியார் கல்வி நிலையங்களிற்கு யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பின்வரும் அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளார்.

★ அனைத்து தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களும் தத்தமது கல்வி நிலையங்களை டெங்கு நுளம்புகள் உற் பத்தியாகாதவாறு உடனடியாகத் துப்புரவு செய்ய வேண்டும்.

★ பொதுசுகாதார பரிசோதகர்கள் ஒவ்வொரு தனியார் கல்வி நிலையத்தையும் சோதனையிடுவர்.

★ டெங்கு நுளம்புகள் பெருகும்படி காணப்படும் தனியார் கல்வி நிலையங்களை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

★ அவை சரியான முறையில் சுத்திகரிக்கப்பட்ட பின்னரே மீளத் திறக்க அனுமதி வழங்கப்படும்.

எனவே தத்தமது தனியார் கல்வி நிலையங்களைச் சுத்திகரித்து டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். (ஓ)

## அகதிகளை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை வீடுகளுக்கு அனுப்பியபோது அவர்களை பொன்சேகா மீண்டும் அகதி முகாம்களுக்குத் திருப்பி அனுப்பினார்.

அவர் பதவியில் இருந்து விலகிய பிறகு இரண்டு லட்சம் அகதிகளை அரசால் மீள்குடியமர்த்த முடிந்துள்ளது. எஞ்சியுள்ள அகதிகளுள் அதிகமானவர்களை நாம் இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் மீள்குடியமர்த்தி முடிப்போம் - என்றார்

அப்படியாயின், முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்ன செய்துகொண்டிருந்தார் என்றும், ஏன் பொன்சேகாவுக்கு ஜெனரல் பதவி கொடுக்கப்பட்டது என்றும் ரவி கருணாநாயக்க அமைச்சரிடம் திருப்பிக் கேள்வி எழுப்பினார். (அ-சி)

## ஆட்சி மாற்றத்துக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனகரட்ணம் ஆகியோர் கூட்டத்தில் பங்குபற்ற இயலவில்லை.

### கருத்துக் காரசாரம்

கூட்டத்தின் முடிவு குறித்து தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனிடம் கேட்டோம்.

''காரசாரமாகப் பலதரப்புக் கருத்துகளும் முன்வைக்கப்பட்டன.

''தமது தற்போதைய ஆட்சியை நீடிப்பதற்காக மக்களிடம் ஆணை கேட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்துள்ளார். அதற்கு இடமளிக்கக்கூடாது. அந்த ஆணையை அவருக்கு வழங்கக்கூடாது. அதை நிராகரிக்கும்படி எமது மக்களைக் கோர வேண்டும் என்ற முடிவு முதலில் ஏகமனதாக எட்டப்பட்டது.

''அதையடுத்து இரண்டாவது கருத்து ஒன்று கூட்டத்தில் கலந்துகொண்ட பலராலும் முன்வைக்கப்பட்டது. அது - இத்தேர்தலில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களையுமே ஆதரிக்கக்கூடாது என்பதாக இருந்தது. பலரின் கருத்து அதுவாக இருந்த போதிலும் இதனை ஒட்டி நான் அனைவருக்கும் விளக்கம் அளித்தேன்.

இறுதியாக, எமது முதலாவது தீர்மான விடயத்தை - அதாவது தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நீடிப்புக்கான ஆணைக் கோரிக்கையை நிராகரித்துத் தோற்கடிக்கச் செய்ய வேண்டும் என்ற முடிவை - எட்டுவதற்காக, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து இன்று புதன்கிழமை காலை பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி முடிவை அறிவிப்போம்'' - என்றார் சம்பந்தர்.

### எதிரும் புதிருமான பல கருத்துக்கள்

''இவ்விடயம் குறித்து ஆராயப்பட்ட போது எதிரும் புதிருமாகப் பல கருத்துக்கள் முன்வந்தன. ஆனால் இறுதி முடிவு ஏகமனதானது'' - என்றார் கூட்டமைப்பின் மற்றொரு சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர்.

இந்த முடிவை எட்டுவதற்கு முட்டுக்கட்டை போடும் விதமான கருத்துக்கள் ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார், கஜேந்திரன் போன்றோரிடம் இருந்து வந்து கொண்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் கூட்டத்தில் கலந்து கொண்ட ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் தெரிவிக்கும் முடிவுக்குத் தாங்கள் அனைவரும் கட்டுப்படுகின்றனர் என்று தொடர்ந்து தெரிவித்து வந்தமையால், இறுதியில் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை சம்பந்தர் அறிவித்த போது, அதற்கு எல்லோரும் கட்டுப்பட வேண்டியதாயிற்று எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

### இணக்க ஆவணம் வாசிக்கப்பட்டது

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக சரத் பொன்சேகா, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் தாம் கண்டுள்ள இணக்கம் குறித்து இக்கூட்டத்தில் சம்பந்தர் விளக்கினார். அது தொடர்பான ஆவணத்தை அவர் கூட்டத்தில் வாசித்ததோடு அதன் மூலப் பிரதியையும் அங்கு காட்டினார். எனினும் அதன் பிரதி அங்கு எவருக்கும் வழங்கப் படவில்லை.

மூலப் பிரதியில் சரத் பொன்சேகாவும், ரணிலும் மட்டும் கையொப்பமிட்டிருக்கின்றனர். சம்பந்தர் அதில் ஒப்பமிடவில்லையே என்று ஸ்ரீகாந்தா அணி ஆட்சேபம் கிளம்பியதாகத் தெரிகின்றது.

எனினும் இது ஒப்பந்தம் அல்ல, எங்களுக்கு அவர்கள் தந்த உறுதியுரை ஆவணம் மட்டுமே என்று சம்பந்தர் அதற்கு விளக்கமும் பதிலும் தந்தார் எனத் தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுயோசனை தொடர்பிலும் அதில் உள்ள சில விடயங்களை ஒட்டி அடிப்படைப் பிரச்சினைகளை இதே தரப்பினர் கிளப்பினர் எனத் தெரியவந்தது.

தீர்வு ஒற்றையாட்சி முறைக்குள்ளா அல்லது அதற்கு வெளியிலா என்பது இந்த ஆவணத்தில் தெளிவாக வரையறை செய்யப்படவில்லை என்று குறை கூறி அவர்கள், இந்த அடிப்படையில் தாங்கள் ஏமாற்றப்படலாம் என்றும் எச்சரிக்கை செய்தனர்.

அது குறித்து சம்பந்தன் எம்.பி. மாவை சேனாதிராசா எம்.பி. போன்ற மூத்த தலைவர்கள் கொடுத்த விளக்கம் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிய வந்தது.

சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் தீர்மானத்தை தமிழ்க் கூட்டமைப்பு ஏகமனதாக எடுத்துள்ளது என்று நேற்றிரவு கூறப்பட்டாலும், இன்று அது பற்றிய அறிவிப்பை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டில், கூட்டமைப்பில் அங்கம் பெறும் சகல கட்சிகளினதும் தலைவர்களும் பங்குபற்றினால்தான் அது உறுதியாகும் - என்றார் கூட்டமைப்பின் மற்றொரு எம்.பி. (அ-சி)

U.S.C
உதய தாரகைக் கல்விக் கழகம் கோற்றாவத்தை
17 ஆவது வருட சேவையில் சிறந்த ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவையில்
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L 2012
ஆரம்பம்: 10.01.2010சனி காலை 8 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
A/L Day Class வகுப்புகளும் நடைபெறுகின்றன.

GROUP AND PERSIONAL CLASSES
தரம் 9,10,11
Maths
By: K.Kiri
Kokuvil T.P.NO - 0770641094

CIW™ Mega Schol : up to 50%
Web Developer
உயர்சம்பளத்துடனான வேலைவாய்ப்பு.
அனைவரும் பயிலலாம்
(வரையறுக்கப்பட்ட பதிவுகள்)
0718 475 501

கற்சுமி வெளியீடு - 2010
♥ இவ்வருடத்திற்குரிய வெளியீடுகள் வெளிவரவுள்ளன. புதிதாக வெளியீடுகளை பெறவிரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும்.
♥ பெற்றோர்/தபால் மூலம் பெற விரும்புவோர் பதிவு செய்யலாம்.
♥ வழமையான உங்கள் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
கற்சுமி, 166, நாவலர் வீதி, யாழ்.
T.P - 0212227442

SCC யின் கணினி பயிற்சி நெறிகள்
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN VISUAL FOXPRO
DIPLOMA IN AUTOCAD
DIPLOMA IN C
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN ACCOUNTING PACKAGES
DIPLOMA IN AUDIO & VIDEO EDITING
DIPLOMA IN WEB DESIGNING
பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள்
GIT (G.C.E. A/L),
ICT (Year 10,11)
Kids Programming (Year 2-9)
English & Tamil Medium
ஆசிரியர் :- திரு.சி.பிரணவன்
Online Classes
பயிற்சி ஆரம்பம் 07.01.2010
09.01.2010
Softview Computer College
55, Arasady Road,
Jaffna. T.P: 021 2225170

விற்பனைக்குண்டு
T.V 29 இஞ்சி, 21 இஞ்சி
DVD Player, Writer, DVD Player Box, Booffer மற்றும் பல Electric பொருள்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :- பவிஷா எலக்ரிக்கல்ஸ்
இல :- 40, சங்கிலியன் வீதி, நல்லூர்
T.P - 0771016395

## மரண அறிவித்தல்

### குட்டித்தம்பி கனகரத்தினம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் தம்மலை, அளவெட்டி மேற்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி கனகரத்தினம் நேற்று (05.01.2010) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (06.01.2010) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்மலை,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

(A)

தகவல்:
சுபாகரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.